
# 1 பவனி வரும் நிலா



*சந்திரன் அழகானது. சந்திரனை நிலா, அம்புலி, நிலவு, மதி எனவும் அழைப்பதுண்டு. பல புலவர்கள் சந்திரனை வர்ணித்துப் பாடல்கள் பாடியுள்ளார்கள்; கவிதைகள் இயற்றியுள்ளார்கள். கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் சந்திரோதயத்தை எவ்வாறு வர்ணிக்கின்றார் எனப் பார்ப்போம்.*

1. மீனினம் ஓடிப் பரக்குதம்மா - ஊடே
வெள்ளி ஓடமொன்று செல்லுதம்மா
வானுங் கடலாக மாறுதம்மா - இந்த
மாட்சியி லுள்ளம் முழுகுதம்மா.

2. அம்புயம் வாடித் தளர்ந்ததம்மா - அயல்
ஆம்பலும் கண்டு களிக்குதம்மா
இம்பருலகின் இயல்பி தம்மா - மதிக்
கின்னார் இனியாரும் உண்டோ அம்மா.

3. சின்னஞ் சிறுவில்லாய்க் கண்டதம்மா - பின்னர்ச்
செம்பொற் குடம்போலே தோன்றுதம்மா
என்ன அதிசயம் பாராயம்மா - ஈதோர்
இந்திர சாலமோ கூறாயம்மா.

4. வளர்ந்து வளர்ந்து பெருகுதம்மா - உடல்
வட்டந் திருந்தி வருகுதம்மா
தளர்ந்து தளர்ந்துபின் போகுதம்மா - கண்ணிற்
சற்றுந் தெரியாமல் ஆகுதம்மா.

- கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை

## பொழிப்பு

1. அம்மா, இந்த ஆகாயம் கடலைப்போலத் தோன்றுகிறது. அந்தக் கடலிலே, வெள்ளியாற் செய்த தோணி ஒன்று மிதந்து செல்வதுபோல சந்திரன் காணப்படுகிறது. வானத்திலுள்ள நட்சத்திரங்கள் கடலிலுள்ள மீன்களைப் போல பரவுகின்றன. இந்த அழகிலே என்மனம் மிகவும் மகிழ்கிறது.
2. அம்மா, சந்திரன் உதயமாகும்போது தாமரை மலர்கள் துன்பமடைகின்றன. ஆம்பல் மலர்கள் மலர்ந்து மகிழ்ச்சியடைகின்றன. ஒருவர் துன்பமடைய மற்றொருவர் மகிழ்ச்சி அடைவதுதான் இந்த உலகத்தின் இயல்பு. ''சந்திரனுக்குப் பகைவர், நண்பர்'' என்று இவ்வுலகில் யாரேனும் உளரோ.
3. தாயே, சந்திரன் சிலநாட்களுக்கு முன்பு ஒரு சிறிய வில்லைப் போல

வளைவாகக் காணப்பட்டதே. இப்பொழுது பொன்னாற் செய்த குடம் போலத் தோன்றுகிறதே. இஃது என்ன அதிசயம்! இஃது இந்திரசால வித்தையோ கூறு.

4. அம்மா, சந்திரன் வளர்ந்து பெருகிப் பூரணமான வட்டவடிவமாகி விட்டது. பின்னர் மறுபடியும் தேய்ந்து தேய்ந்து போகிறது. அது கண்ணுக்கே சற்றும் தெரியாமற் போய்விடுகிறது.

## அரும்பதங்கள்

| | |
|---|---|
| மீனினம் | - நட்சத்திரக் கூட்டம் |
| பரக்குது | - பரவுகிறது |
| இன்னார் இனியார் | - பகைவரும் நண்பரும் |
| இந்திரசாலம் | - கண்கட்டு வித்தை |
| வட்டம் திருந்தி | - வட்டவடிவம் எய்தி |
| இம்பருலகின் | - இந்த உலகின் |

### அகராதிப் பயன்பாடு




| | |
|---|---|
| ஓடம் | - |
| மாட்சி | - |
| அம்புயம் | - |
| வான் | - |
| உள்ளம் | - |
| தளர்ந்து | - |

**பயிற்சி**

### 1.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. தாமரை எப்போது வாட்டமடையும்? அப்போது மலரும் பூ எது?
2. பாடலில் மீனினம் எனக் குறிப்பிடப்படுவது எது?
3. சந்திரனின் இருவேறு தோற்றங்கள் எவ்வாறு கூறப்பட்டுள்ளன?
4. இம்பருலகின் இயல்பாகக் கூறப்பட்டிருப்பது யாது?
5. ஆகாயத்தைக் கடலாகக் கூறி, சந்திரனை எதுவாகக் குறிப்பிடுகிறார்?

## 1.2 சேர்த்தெழுதுவோம்.

i. மீன் + இனம் =

ii. ஓடம் + ஒன்று =


iii. மாட்சியில் + உள்ளம் =

iv. பொன் + குடம் =

v. தோன்றுது + அம்மா =

## 1.3

### (அ) சரியான ஓரெழுத்துச் சொல்லைத் தெரிவுசெய்து எழுதுவோம்.




1. அரசனைக் குறிப்பது :...........
2. கண்ணிலிடும் எழுத்து :...........
3. சுமக்கும் எழுத்து :...........
4. பசுவைக் குறிக்கும் எழுத்து :...........
5. பேச உதவும் எழுத்து :...........

### (ஆ) தரப்பட்டுள்ள சொற்களில் ஒன்று அல்லது இரண்டு எழுத்துகளை நீக்கிப் புதிய சொற்களை உருவாக்குவோம்.

1. பயணம் - ஓர் எழுத்தை நீக்கினால் கிடைப்பது அச்சம் .....................
2. அசுத்தம் - ஓர் எழுத்தை நீக்கினால் கிடைப்பது தூய்மை ......................
3. மக்கள் - ஓர் எழுத்தை நீக்கினால் புத்திரி வருவாள் ..........................
4. கவின் - ஓர் எழுத்தை நீக்கினால் கவிஞரால் உருவாக்கப்படுவது கிடைக்கும் ............................................................................
5. கருணை - ஓர் எழுத்தை நீக்கினால் வேடன் கையில் இருப்பது ..........
6. வாழ்க்கை - இரு எழுத்துகளை நீக்கினால் மரங்களில் ஒன்று ................
7. அவமானம் - இரு எழுத்துகளை நீக்கினால் அடவியின் ஒத்த பதம் ......

## தமிழ் எழுத்துகள்

தமிழில் உள்ள எழுத்துகளை உயிர் எழுத்துக்கள், மெய் எழுத்துகள், உயிர்மெய் எழுத்துகள் மற்றும் ஆய்த எழுத்து என வகைப்படுத்தலாம்.

### உயிர் எழுத்துகள்

| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |

### மெய் எழுத்துகள்

| க் | ங் | ச் | ஞ் | ட் | ண் | த் | ந் | ப் | ம் | ய் | ர் | ல் | வ் | ழ் | ள் | ற் | ன் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |

உயிர் எழுத்துகள் 12, மெய்யெழுத்துகள் 18 ஆகிய முப்பது எழுத்துகளும் முதல் எழுத்துகள் ஆகும்.

### உயிர்மெய் எழுத்துகள்

உயிர் எழுத்க்களும் மெய் எழுத்துகளும் சேர்ந்து உயிர்மெய் எழுத்துகள் உண்டாகின்றன.

மெய் + உயிர் = உயிர்மெய்

க் + இ = கி

### ஆய்த எழுத்து

தமிழ் மொழியில் ஃ என்று ஓர் எழுத்து உள்ளது, இதை ஆய்த எழுத்து என்று கூறுவர்.

**தமிழில் உள்ள மொத்த எழுத்துகள்**

| | |
|---|---|
| உயிர் எழுத்துகள் | 12 |
| மெய் எழுத்துகள் | 18 |
| உயிர் மெய் எழுத்துகள் | 216 |
| ஆய்த எழுத்து | 1 |
| மொத்தம் | 247 |

தமிழ் – 5

## வல்லின, மெல்லின, இடையின எழுத்துகள்

வல்லினம்

வன்மையான ஓசையுடைய எழுத்துகள் வல்லினமாகும்.

க், ச், ட், த், ப், ற்

| | | | |
|---|---|---|---|
| உதாரணம் - | பாக்கு | பச்சை | கட்டு |
| | கத்தி | பருப்பு | நெற்றி |

மெல்லினம்

மென்மையான ஓசையுடைய எழுத்துகள் மெல்லினமாகும்.

ங், ஞ், ண், ந், ம், ன்

| | | | |
|---|---|---|---|
| உதாரணம்- | சங்கு | பஞ்சு | நண்டு |
| | பந்து | பழம் | தேன் |

இடையினம்

வல்லினம் மற்றும் மெல்லின ஓசைகளுக்கு இடைப்பட்ட ஓசையுடைய எழுத்துகள் இடையினமாகும்.

ய், ர், ல், வ், ழ், ள்

| | | | |
|---|---|---|---|
| உதாரணம் - | காய் | தேர் | கால் |
| | செவ்வாய் | வாழ்க | தாள் |

**1.4**

**(அ) பொருத்தமான எழுத்துகளை இடைவெளியில் எழுதுவோம்.**

**ண் ப் ன் ற் ர் ம் ச் ல் ஞ் க் ட்**

**ழ் ய் ள் ங் ந் வ் த்**

1. வல்லின எழுத்துகள் : ..........................................................................................

2. மெல்லின எழுத்துகள் : ..........................................................................................


3. இடையின எழுத்துகள் : ..........................................................................................





இலவசப் பாடநூல்

**(ஆ) வெற்றுக்கூடுகளில் பொருத்தமான எழுத்துகளின் எண்ணிக்கையை எழுதுவோம்.**




**(இ) சரியான விடையின் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுவோம்.**

1. உயிர் எழுத்துகள் எத்தனை?

   i. பதினெட்டு  ii. பன்னிரண்டு  iii. முப்பது

2. மெய் எழுத்துகள் எத்தனை?

   i. முப்பது  ii. பதினெட்டு  iii. பன்னிரண்டு

3. உயிர்மெய் எழுத்து எது?

   i. அ  ii. ப்  iii. கி

4. ஆய்த எழுத்து எது?

   i. ப்  ii. ஃ  iii. ஐ

## 1.5 பின்வரும் வாக்கியங்களிலிருந்து வல்லினம், மெல்லினம், இடையினம் என எழுத்துகளை வகைப்படுத்தி எழுதுவோம்.

உதாரணம் : பூவின் மணம் மனதிற்கு இன்பம் தரும்.

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| ற் | ன், ம் | - |

1. இட்லி பஞ்சு போன்று மென்மையாக இருந்தது.

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| | | |

2. ஓடிச் சென்ற கந்தன் கால் தடுக்கிக் கீழே விழுந்தான்.

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| | | |

3. கடற்கரையில் சிறுவர்கள் பட்டம் விட்டு விளையாடினார்கள்.

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| | | |

4. நம் தாய்மொழியாகிய தமிழ் மொழியை நன்றாகக் கற்க வேண்டும்.

| வல்லினம் | மெல்லினம் | இடையினம் |
|---|---|---|
| | | |

***செயற்பாடு 1.1***

''பவனி வரும் நிலா'' என்ற பாடலை ஆசிரியரின் துணையுடன் குழுக்களாக இணைந்து பாடுக.

# 2 காலைக் காட்சி



காலைக் கதிரவன் தன் கடமை உணர்வோடு கிழக்கு வானிலே செம்மஞ்சள் நிறப் பந்துபோல மெதுவாக மேலெழுகிறான். கதிரவனைக் கண்ட நிலவுமகள் தன் கடமையை முடித்து நாணத்துடன் ஒளிந்து கொள்கிறாள்.

கடிகாரப் பறவைகளான சேவல்களும் கரைந்து சத்தமிடும் காகங்களும் விடியலை அறிவித்து, கதிரவனை வரவேற்கின்றன. ஆலயங்களின் கண்டாமணி ஓசை காதில் கணீரென ஒலிக்கக் கூட்டங்கூட்டமாகப் பறந்து திரியும் பட்சிகளின் இனிய கானம் சூழலை இனிமையாக்குகின்றது.

நீலவானைச் செந்நிறமாக்கிய கதிரவன், தன் பொற்கரங்களை நீட்டிப் பனித்துளிகளைத் தொட்டுச் செல்கிறான். கதிரவனின் பொற்கரம் பட்டதும் இலைகளின் நடுவே இரத்தினக் கற்களாக மின்னிய பனித்துளிகள் மெல்ல மெல்ல மறையத் தொடங்கின.

கண்சிமிட்டி மலரும் கமல மலர்களும் இதர மலர்களும் ''தாயைக் கண்ட மழலையின் புன்முறுவல்'' போல இதழ் விரித்து மலர்கின்றன. மலர்களின் வாசம் கண்டு அவைகளைச் சுற்றிச் சுற்றி ரீங்காரமிடும் வண்டினங்கள் ஒருபுறம், வண்ண வண்ண இறக்கைகளால் சிறகடித்துப் பறந்து திரியும் வண்ணத்துப்பூச்சிகள் மறுபுறம். இவை சிறுவர்களைப் போன்று பெரியவர்களையும் பரவசமடையச் செய்கின்றன.

பச்சைப் பட்டாடை விரித்தாற் போல் காட்சி தரும் வயல்வெளிகளும் புல்வெளிகளும் காலை நேரத் தென்றலுக்குத் தலை அசைக்கின்றன. சில்லென வீசும் புதுத்தென்றல் புத்துணர்ச்சியூட்ட பசுக்களும் தாய்ப் பசுவை முட்டி, மோதி முந்திக்கொண்டு துள்ளிக் குதித்தோடும் பசுக் கன்றுகளும் புற்றரைகளை நோக்கி விரைந்து செல்கின்றன.

கடலுக்குச் சென்ற மீனவர்களின் வள்ளங்கள், அலைகளைக் கிழித்துக் கொண்டு கரையை நோக்கி வருகின்றன. அவர்களின் மனைவிமார் இறைவனுக்கு நன்றி கூறி, மீனவர்களது வரவை மகிழ்ச்சியுடன் எதிர்கொள்கின்றனர்.

விடியற் காலையை எதிர்பார்த்திருந்த விவசாயிகள் விறுவிறுவெனக் கலப்பையோடு தம் வயல் நோக்கி விரைகின்றனர். வியாபாரிகள் புதிய காய்கறிகளை விற்பதற்காகச் சந்தை நோக்கி வருகின்றனர். புத்துணர்வோடு மாணவர்கள் புதுத்தேடலுடன் பள்ளி செல்கின்றனர். கண்ணைப் பறிக்கும் வண்ண வண்ண ஆடைகளுடன் வேலையைத் தொடங்க ஊழியர்கள் விரைகின்றனர்.

இயற்கை அன்னையின் படைப்பில் அனைத்தும் அற்புதமே. உலகிலுள்ள உயிரினங்களுக்கு உவகை அளிக்கும் காலைக் காட்சி மனதிற்கு இனிமையானது; மகிழ்ச்சிகரமானது.

### அகராதிப் பயன்பாடு




புத்துணர்ச்சி -
கமலமலர் -
பரவசம் -
கலப்பை -
தென்றல் -
புன்முறுவல் -

### பயிற்சி

## 2.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. சூரியன் உதிக்கும் திசை யாது?
2. செம்மஞ்சள் நிறப் பந்து என்று குறிப்பிடப்பட்டிருப்பது எது?
3. சூரியனுக்கு வழங்கப்படும் வேறு பெயர் ஒன்றினைத் தருக.
4. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தொழிலாளர்கள் மூவரைக் குறிப்பிடுக.
5. காலைக் காட்சியில் நீங்கள் காணக்கூடிய நிகழ்வுகள் மூன்று எழுதுக.

## 2.2 பிரித்து எழுதுவோம்.

i. காரிருள் = ............................... + ...............................

ii. மணியோசை = ............................... + ...............................

iii. வண்ணச்சிட்டு = ............................... + ...............................

iv. புற்றரைகள் = ............................... + ..............................

v. காலைக்காட்சி = ............................... + ...............................

## 2.3 கீழே தரப்பட்டுள்ள எழுத்திற்குப் பொருத்தமான இயல்பொலிச் சொல்லைத் தெரிந்து கோடிடுவோம்.

i. க - கம்பி / காகம் / தங்கம்

ii. ச - மஞ்சள் / சட்டி / பஞ்சம்

iii. த - அந்தம் / பதம் / தம்பி

iv. ப - பன்னீர் / கோபம் / கம்பம்

v. பி - பிறை / கபிலம் / நம்பிக்கை



### உயர்திணையும் அஃறிணையும்

**உயர்திணை**

பகுத்தறிவு கொண்ட மக்களையும் தேவரையும் நரகரையும் குறிப்பது உயர்திணை எனப்படும்.

**உதாரணம்:** ஆசிரியர், மாணவர், அரசன், முருகன்

**அஃறிணை**

மக்கள், தேவர், நரகர் அல்லாத உயிர் உள்ள பொருள்களும் உயிர் இல்லாத பொருள்களும் அஃறிணை எனப்படும்.

**உதாரணம்:** மரம், புலி, கல், கடல்

## 2.4 பின்வரும் வாக்கியங்கள் உயர்திணையா? அஃறிணையா? என இடைவெளியில் எழுதுவோம்.

1. அரசன் நீதி தவறாது நாட்டை ஆட்சி செய்தான். ........................................
2. ஆகாய விமானம் வானத்தில் அழகாகப் பறந்தது. ....................................
3. நியூட்டன் புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்தார். ..................................
4. கிளிகள் சுவையான பழங்களைக் கொத்தித் தின்றன. ................................
5. வீதியில் வாகனங்கள் வரிசையாகச் சென்றன. ..........................................

## 2.5

### (அ) லகர, ளகர, ழகர ஒலிவேறுபாட்டுச் சொற்களின் கருத்துக்களைத் தெரிவு செய்து தொடர்புபடுத்துவோம்.

| | | |
|---|---|---|
| i. | அழை | புற்று |
| | அளை | திரை |
| | அலை | கூப்பிடு |
| ii. | தழை | கட்டு |
| | தளை | ஓர் உறுப்பு |
| | தலை | செழிப்பு |
| iii. | வாழி | வானர அரசன் |
| | வாளி | வாழ்த்து |
| | வாலி | ஒரு பாத்திரம் |

### (ஆ) தரப்பட்ட சொற்களைக் கொண்டு வாக்கியம் எழுதுவோம்.

i. எண் - என் ii. நாண் - நான் iii. மாண் - மான்

iv. பணி - பனி v. கணை - கனை

### (இ) அடைப்புக்குள் உள்ள சொற்களுள் பொருத்தமான சொல்லைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புவோம்.

i. நான் .................... (அலரி, அலறி) மரத்திலிருந்து அழகிய மலர்களைப் பறித்தேன்.

ii. பாம்பைக் கண்ட சிறுவர்கள் ........... (அலரி, அலறி)க் கொண்டு ஓடினர்.

iii. பறவைகள் காலை வேளை ............. (இரை, இறை) தேடிப் பறந்தன.


iv. நாம் காலையும் மாலையும் ................ (இரைவனை, இறைவனை) வழிபட வேண்டும்.

v. இயற்கை தந்த கொடையான .................... (மரங்களை, மறங்களை) நாம் அழிக்கக்கூடாது.

vi. அரசனின் ............. (மரத்தால், மறத்தால்) பகைவர்களிடமிருந்து நாடு காப்பாற்றப்பட்டது.

## 2.6


**(அ) கதைப் படத்தை அவதானித்துக் கதையைப் பூரணப் படுத்தி எழுதுவோம்.**



**(ஆ) பின்வரும் சொற்களில் இரண்டு ஒத்த கருத்து மற்றும் இரண்டு எதிர்க் கருத்துடைய சொற்கள் உள்ளன. மிகுதியாக உள்ள சொல்லைத் தெரிந்து கோடிடுவோம்.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1) | i. திங்கள் | ii. இகழ் | iii. வள்ளல் | iv. மாதம் | v. புகழ் |
| 2) | i. அசல் | ii. கர்வம் | iii. நகல் | iv. காலம் | v. செருக்கு |
| 3) | i. கோபம் | ii. பொதுநலம் | iii. சினம் | iv. சுயநலம் | v. விவேகி |
| 4) | i. வையகம் | ii. பூமி | iii. வெற்றி | iv. புராதனம் | v. நவீனம் |
| 5) | i. திண்ணம் | ii. சுலபம் | iii. முரடு | iv. கடினம் | v. உறுதி |

# 3 சின்னத்தம்பிப் புலவர்



ஒரு நாள் மாலை நேரத்தில், சிறுவர்கள் சிலர் ஓரிடத்திலே விளையாடிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது அவ்வழியில் வந்த தமிழ்ப் புலவர் ஒருவர், அச்சிறுவர்களைப்பார்த்து ''சிறுவர்களே! இவ்வூரில் வதியும் வில்லவராய முதலியாரின் இல்லம் எங்குள்ளது?'' என்று கேட்டார். அச்சமயம் சிறுவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்தனர். அப்பொழுது அச்சிறுவர்களில் ஒருவன்,

**''பொன்பூச் சொரியும் பொலிந்த செழுந் தாதிறைக்கும்**
**நன்பூதலத் தோர்க்கு நன்னிழலாம் - மின்பிரபை**
**வீசுபுகழ் நல்லூரான் வில்லவரா யன்கனக**
**வாசலிடைக் கொன்றை மரம்''** என்று பாட்டாக அதற்கு விடை கூறினான். அதனைக் கேட்ட புலவர் திகைத்தார்; சிறுவனை ஏற இறங்கப் பார்த்தார்; மகிழ்ச்சியால் அவனைப் பாராட்டினார். பின்னர் அவன் சொன்ன குறிப்பின் மூலம் வில்லவராய முதலியார் வீட்டை அடைந்தார்.

வில்லவராய முதலியாரது வீட்டிலே அவரோடு அளவளாவிய தமிழ்ப் புலவர், வழியில் நடந்த அந்தச் சம்பவத்தைக் கூறி அந்தச் சிறுவனின் தோற்றம், உயரம், வயது முதலியவற்றையும் தெரிவித்தார். அவன் தன் மகனாகவே இருக்க வேண்டும் என்று முதலியார் கூறினார். சிறிது நேரத்தின்பின் அச்சிறுவன் அங்கே வருவதைக் கண்ட தமிழ்ப்புலவர், இவனே அச்சிறுவன். இவனால் தமிழ்மொழி மேலும் சிறப்படையும் என்று கூறி அச்சிறுவனது பெயரைக் கேட்டார். சிறுவன் அடக்கமாக, சின்னத்தம்பி என்று விடை பகர்ந்தான். சின்னத்தம்பியே பின்னர் சின்னத் தம்பிப் புலவர் எனப் பலராலும் பாராட்டப்பெற்ற ஈழநாட்டின் பெரும் புலவர் ஆவார்.



வில்லவராய முதலியார் யாழ்ப்பாணத்து நல்லூரிலே ஏறக் குறைய இருநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த பெரும் பிரபுவும் தமிழ்ப் புலவரும் ஆவார். அவருடைய புதல்வரே சின்னத்தம்பிப் புலவர். இவர் இளமையிலேயே கவிபாடும் வல்லமை பெற்றிருந்தார்.

வில்லவராய முதலியார் பொழுதுபோக்காகக் கவிகள் பாடுவார். ஒரு நாள் அவர் ஒரு பாடலின் முதல் மூன்று வரிகளையும் ஓர் ஏட்டில் எழுதி நான்காவது வரியை எழுத முயன்றார். அது அவருக்குச் சங்கடமாயிருக்கவே, அதனை அவர் அங்கேயே வைத்து விட்டுத் தமது

வேலையாகச் சென்று விட்டார். பின்னர் திரும்பிவந்து பார்த்தபோது அந்தப் பாடல் மிகவும் சிறப்பாகப் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதைக் கண்டார். மிகவும் ஆச்சரியம் அடைந்து ''இந்த ஏட்டில் எழுதியவர் யார்?'' என்று மனைவியாரைக் கேட்டார். மனைவியார், ''நம்முடைய புதல்வன் சின்னத்தம்பியே ஏதோ எழுதினான்'' என்று கூறினார். அதைக் கேட்ட முதலியார் அளவில்லாத மகிழ்ச்சியடைந்து மகனைப் பாராட்டினார். இதனாலேயே, தமிழ்ப் புலவர் ''பொன்பூச் சொரியும்...'' என்ற பாடலால் விடை கூறிய சிறுவனைப் பற்றிக் கூறிய போது அவன் தம்முடைய மகனாகவே இருக்கவேண்டும் என்று கூறினார்.

சின்னத்தம்பிப் புலவர் கல்வளையந்தாதி, மறைசையந்தாதி, கரவை வேலன்கோவை, பறாளைவிநாயகர்பள்ளு என்னும் நூல்களை இயற்றியுள்ளார்.

**அகராதிப் பயன்பாடு**




சம்பவம் -
சங்கடம் -
அதிசயம் -
அளவளாவுதல் -
ஏடு -
பள்ளு -

**பயிற்சி**

## 3.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. சின்னத்தம்பிப் புலவர் வாழ்ந்த ஊர் எது?
2. தமிழ்ப் புலவர் சிறுவர்களிடம் யாருடைய வீட்டினைப் பற்றி விசாரித்தார்?
3. வீட்டின் அடையாளத்தைக் கண்டறிய சிறுவன் கூறிய மரம் எது?
4. சின்னத்தம்பிப் புலவர் எப்பராயத்திலிருந்து கவிபாடும் வல்லமையைப் பெற்றிருந்தார்?
5. சின்னத்தம்பிப் புலவர் இயற்றிய நூல்கள் இரண்டினை எழுதுக.

## பால்

பால் என்றால் பிரிவு என்று பொருள். பால் ஐந்து வகைப்படும்.

1) ஆண்பால்
2) பெண்பால்
3) பலர்பால்
4) ஒன்றன்பால்
5) பலவின்பால்

### ஆண்பால்

உயர்திணைப் பொருள்களில் ஆண் ஒருவரைக் குறிப்பது ஆண்பால் எனப்படும். உதாரணம்: அரசன், செழியன்

### பெண்பால்

உயர்திணைப் பொருள்களில் பெண் ஒருவரைக் குறிப்பது பெண்பால் எனப்படும். உதாரணம்: யாழினி, உழத்தி

### பலர்பால்

உயர்திணையில் பலரைக் குறிப்பது பலர்பால் எனப்படும்.

உதாரணம்: மக்கள், ஆண்கள், பெண்கள்

### ஒன்றன்பால்

அஃறிணைப் பொருள்களில் ஒன்றைக் குறிப்பது ஒன்றன்பால் எனப்படும். உதாரணம்: கல், மரம்

### பலவின்பால்

அஃறிணைப் பொருள்களில் பலவற்றைக் குறிப்பது பலவின்பால் எனப்படும். உதாரணம்: அவை, வீடுகள், மாடுகள்

### இருபால் பொதுப்பெயர்

ஆண்பால், பெண்பால் ஆகிய இரண்டுக்கும் பொதுவாக வரும் பெயர்கள் இருபால் பொதுப்பெயர்கள் எனப்படும்.

உதாரணம்: கவிஞர், அதிபர், நீதிபதி, சனாதிபதி

## 3.2 பின்வரும் சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொற்களைப் பாடத்திலிருந்து தெரிவுசெய்து எழுதுவோம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| i. வீடு | - | ____________ | ii. சந்தோசம் | - | ____________ |
| iii. மகன் | - | ____________ | iv. கவிஞர் | - | ____________ |
| v. பனுவல் | - | ____________ | vi. மட்டற்ற | - | ____________ |
| vii. கவி | - | ____________ | viii. தாரம் | - | ____________ |

## 3.3

### (அ) ஒத்தகருத்துச்சொல்லின் கீழ் கோடிடுவோம்.

i. வீடு - (மடம் / இடம் / மனை)

ii. பாதை - (ஓரம் / வீதி / பேதை)

iii. உணவு - (ஆரம் / ஆகாரம் / அகரம்)

iv. புத்தகம் - (வர்த்தகம் / பனுவல் / அகம்)

v. அரவம் - (பாம்பு / சாந்தம் / சனம்)

vi. வானம் - (வனம் / விண்ணகம் / மண்ணகம்)

vii. அரை - (பரை / மரை / பாதி)

viii. கல்வி - (மலை / வித்தை / செல்வம்)

### (ஆ) எதிர்க்கருத்துச் சொற்களை இணைப்போம்.


| | |
|---|---|
| i. மாரி | அ) தோல்வி |
| ii. இலாபம் | ஆ) அழிவு |
| iii. வரவு | இ) மறுமை |
| iv. இன்பம் | ஈ) அநாகரிகம் |
| v. வெற்றி | உ) செலவு |
| vi. நாகரிகம் | ஊ) கோடை |
| vii. ஆக்கம் | எ) நட்டம் |
| viii. இம்மை | ஏ) துன்பம் |

## 3.4

### (அ) பொருத்தமான சொற்களைக் கொண்டு வெற்றிடங்களை நிரப்புவோம்.

| | ஆண்பால் | பெண்பால் | பலர்பால் | ஒன்றன்பால் | பலவின்பால் |
|---|---|---|---|---|---|
| உ+ம் | ஓடினான் | ஓடினாள் | ஓடினார்கள் | ஓடியது | ஓடின |
| 1 | ............... | விழுந்தாள் | .................. | ............... | ................... |
| 2 | ............... | .................. | .................. | உண்டது | ................... |
| 3 | ............... | .................. | குளிக்கின்றனர் | ............... | ................... |
| 4 | வருகிறான் | .................. | ................. | ................ | ................... |
| 5 | ................ | .................. | .................. | ................ | நடந்தன |

### (ஆ) எதிர்ப்பாற் சொற்களைத் தெரிந்து எழுதுவோம்.




1. அரசன் ..................
2. பாலகி ..................
3. மாணவன் ..................
4. உழத்தி ..................
5. வீரன் ..................
6. இளைஞன் ..................
7. வேடன் ..................
8. குறவன் ..................
9. விதவை ..................
10. இடையன் ..................

## 3.5

**(அ) கீழ்வரும் சொற்களுள் பொதுப் பெயர்ச் சொற்களைத் தெரிந்து அவற்றுக்குரிய கட்டங்களை நிழற்றுவோம்.**

| | | | |
|---|---|---|---|
| அம்மா | குழந்தை | அதிபர் | |
| விஞ்ஞானி | நிருபர் | நீதிபதி | பாட்டி |
| மேதை | ஆசிரியன் | வியாபாரி | |

**(ஆ) பின்வரும் பந்தியில் உருவினால் காட்டப்பட்டுள்ள இடத்திற்கு பொருத்தமான விடைகளை தெரிவு செய்து கட்டமிடுவோம்.**

ஓர் அடர்ந்த காட்டில்  வாழ்ந்து வந்தது. அதனுடன்  நண்பனாக இருந்தது. ஒரு நாள் அவை காட்டு வழியே நடந்து செல்லும் போது சில  கண்டன.

| | | |
|---|---|---|
| 1. i. ஆந்தைக்கு | ii. ஓர் ஆந்தை | iii. ஆந்தையை |
| 2. i. ஒரு நரி | ii. நரியின் | iii. நரிகளோடு |
| 3. i. எறும்புகளோடு | ii. எறும்புகளால் | iii. எறும்புகளைக் |

## 3.6 தரப்பட்ட பழமொழிகளைப் பார்த்து உறுப்பமைய எழுதுவோம்.

1. அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகரும்.
2. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து
3. ஆழமறியாமல் காலை விடாதே
4. தாயிற் சிறந்த கோயிலுமில்லை.

# 4 அந்தரேயின் குதிரைப்படைகள்



அயல் நாட்டு அரசன் பெரும்படையுடன் வரப்போகின்றான் என்பதை அறிந்த அரசர் மிகவும் கவலையடைந்தார். அந்தப் படையெடுப்பை எவ்வாறு எதிர்கொள்வதென்று தனது படைத் தளபதியுடன் தீவிர ஆலோசனை செய்தார். படைத்தளபதி, 'அரசே எம்மிடம் படைப்பலம் குறைவாக உள்ளது; நாம் வேறு நாட்டு உதவியைத் தேடிக்கொள்ள வேண்டும்,' என்று ஆலோசனை சொன்னான். ஆனால், அரசருக்கு அந்த ஆலோசனை பிடிக்கவே இல்லை. மந்திரிமார்களும் வேறு வேறு ஆலோசனைகளை அரசரிடம் சொன்னார்கள். ஆலோசனையில் கலந்து கொண்டவர்கள் யாருமே அரசருக்குப் பிடித்தமான ஆலோசனைகளைச் சொல்லவில்லை. இதனால் அரசர் கவலையடைந்தார். கடைசியில் அந்தரேயின் ஆலோசனையைக் கேட்கலாம்; அவனாலேதான் இந்த நெருக்கடியைத் தீர்க்க முடியும் என்ற முடிவுக்கு அனைவரும் வந்தனர்.

அரசரும் அதற்கு உடன்பட்டார். அந்தரேயை வரவழைக்க உத்தர விட்டார். அந்தரே ஓடி வந்தான். அவனிடம் படையெடுப்பைப் பற்றி அரசர் சொன்னார்.

அந்தரே யோசித்தான். பிறகு அரசனிடம் சொன்னான்: ''அரசே! என்னிடம் ஒரு திட்டம் இருக்கிறது. தாங்கள் அதற்கு அனுமதி தந்தால் அதை வெற்றிகரமாக நிறைவேற்றிக் காட்டுவேன். அதன் மூலம் எதிரியை ஓட ஓட விரட்டலாம். ஆனால் இப்போது யாரிடமும் அந்தத் திட்டம் என்னவென்று சொல்லமாட்டேன்'' என்றான்.

அரசர், எப்படியோ எதிரியை விரட்டினால் போதுமென்ற எண்ணத்தில் அந்தரேயின் ஆலோசனைக்கு உடன்பட்டார்.

மறுகணமே, அந்தரே உத்தரவுகள் போட்டான். நூற்றுக்கணக்கான குயவர்கள் வரவழைக்கப்பட்டார்கள். அவர்களிடம் நூற்றுக்கணக்கான மண் குதிரைகளைச் செய்யும்படி அந்தரே உத்தரவிட்டான்.

குயவர்கள் ஒரு பெரிய மைதானத்தில் துரிதமாகக் குதிரைகளை உருவாக்கினார்கள். அரசருக்கும் மற்றவர்களுக்கும் நடப்பது என்னவென்று தெரியவே இல்லை. சில நாட்கள் சென்றன...

ஒரு நாள் அந்தரே அரசரிடம் வந்தான். யுத்தத்திற்கு வரவிருந்த அயல்நாட்டு அரசனுக்கு ''நாங்கள் போருக்குத் தயார்'' என்று தைரியமாகச் செய்தி அனுப்பச் சொன்னான். அரசர் அவனையே தூதுவனாக அனுப்பினார். அந்தரே பக்கத்து நாட்டிற்குத் தூதுவனாக வேடமணிந்து போனான். அந்த நாட்டு அரசனிடம் ''யுத்தத்திற்குத் தயார்; படையெடுக்கிறீர்களா?'' என்று கேட்டான். அந்த நாட்டு அரசனுக்குத் திடீரென்று யுத்தத்திற்குத் தயார் என்று சொன்னதைக் கேட்டதும் சந்தேகம் ஏற்பட்டது. அந்தரேயைக் கௌரவித்து அனுப்பி விட்டு அவன் பின்னாலேயே ஓர் ஒற்றனை உளவு பார்க்க அனுப்பினான்.

ஒற்றன் வருவதைத் தெரிந்து கொண்ட அந்தரே அந்த ஒற்றனோடு பேச்சுக்கொடுத்து தன்னோடு அழைத்துப் போனான். தன் நாட்டிற்குப் போனதும் படைப் பலத்தைக் காட்டுவதாகக் கூறி ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்றான். அங்கிருந்த குதிரைப் படைகளைப் பார்த்து

ஒற்றன் பயந்துவிட்டான். தனது நாட்டின் சிறிய குதிரைப் படையை வைத்துக்கொண்டு இந்தக் குதிரைப்படையை வெல்ல முடியுமா? எனச் சிந்தித்தான்.

அந்தரே மேலும் ஒற்றனைப் பயமுறுத்தினான். 'இன்னும் நூற்றுக்கணக்கான குதிரைகள் தயாராகி வருகின்றன. இந்தக் குதிரைப்படைக்கு முன்னால் உங்கள் அரசனின் குதிரைப்படை தாக்குப் பிடிக்குமா?' எனக் கேட்டான்.

ஒற்றன் பதிலே பேசாமல் தன்நாட்டிற்கு ஓடினான். அரசனிடம் குதிரைப் படையைப் பற்றிச் சொன்னான். அரசன் பயந்து அந்தரேயின் நாட்டு அரசரோடு சமாதானம் செய்து கொள்வதாகச் செய்தி அனுப்பினான்.

அந்தரேயை அரசர் உட்பட அனைவரும் பாராட்டினார்கள். அரசருக்கோ அந்தரேயின் திட்டம் என்னவென்று புரியவே இல்லை. அந்தரேயிடம் இரகசியமாக அவர் அதைப்பற்றிக் கேட்டார். அந்தரே சொன்னான்: ''என்ன அரசே! இது தெரியவில்லையா? வாருங்கள் நம் குதிரைப் படையைப் பார்ப்போம்.''

இருவரும் குதிரைப் படையைப் பார்க்கப் போனார்கள். குதிரைப் படையைப் பார்த்து அரசர் வியந்துவிட்டார். ''இவ்வளவு குதிரைகள் நம்மிடம் இல்லையே! இவை எப்படி இங்கே வந்தன?'' என்று கேட்டார் அரசர்.

அந்தரே உடனே சொன்னான்: ''இங்கே இருக்கின்ற குதிரைகளில் கால்வாசிக் குதிரைகள்தான் நிஜக்குதிரைகள். மற்றைய குதிரைகள் மண்ணால் செய்யப்பட்ட குதிரைகள். பல மண்குதிரைகளுக்கு இடையிலே ஒரு நிஜக்குதிரையை நிறுத்தி வைத்திருக்கிறேன். குதிரைக்காரர்களாக மனிதர்களை நிறுத்தி வைத்தேன். தூரத்தில் இருந்து பார்த்தால் எல்லாமே நிஜக்குதிரைகளாகத் தெரியும். உளவு பார்க்க வந்த அந்த ஒற்றனும் இதைத் தூரத்தில் இருந்து பார்த்துவிட்டுப் பயந்து ஓடியே விட்டான். அவன் தன் அரசனிடம் குதிரைப்படையைப் பற்றிப் பயத்துடன் சொல்லியிருப்பான். அதனால்தான் அந்த அரசனும் உங்களோடு சமாதானம் செய்துகொண்டான். படையெடுப்பும் நின்று போய்விட்டது. இப்போது புரிகிறதா? என் திட்டம்'' என்று கூறினான்.



அரசர் அந்தரேயைக் கட்டிப் பிடித்து ''உன்னுடைய தந்திரத்தால்தான் நாட்டின் கௌரவம் காப்பாற்றப்பட்டது. நாட்டின் சார்பாக உனக்கு நன்றி சொல்லுகிறேன்'' என்று பாராட்டிப் பரிசில்கள் வழங்கினார்.

அந்தரே ''நானும் இந்த நாட்டைச் சேர்ந்தவன். என்னுடைய நாட்டின் கௌரவத்தைக் காப்பாற்றுவது எனது கடமை. நான் கடமையைத்தான் செய்தேன்'' என்று சொல்லிவிட்டுப் பரிசில்களை மீண்டும் அரசரிடமே திருப்பிக் கொடுத்தான்.



**அகராதிப் பயன்பாடு**




துரிதம் -
ஆலோசனை -
கௌரவம் -
திட்டம் -
தூதுவன் -
அனுமதி -

பயிற்சி

## 4.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. அரசன் யாருடன் தீவிர ஆலோசனை புரிந்தான்?
2. அயல் நாட்டு எதிரியை விரட்ட திட்டம் தீட்டிக் கொடுத்தவர் யார்?
3. எதிரிப்படையை தோற்கடிக்க அந்தரே செய்த தந்திரம் என்ன?
4. அந்தரேயின் கேள்விக்கு பதிலளிக்காது ஒற்றன் ஏன் தன் நாட்டிற்கு ஓடினான்?
5. இந்த கதையின் மூலம் நீங்கள் பெறக்கூடிய படிப்பினை யாது?

## 4.2 பின்வரும் சொற்களுக்குரிய எதிர்க்கருத்துச் சொற்களைப் பாடத்திலிருந்து தெரிவுசெய்து எழுதுவோம்.

i. இன்பம் - ____________ ii. நிறைவு - ____________

iii. மறுப்பு - ____________ iv. சண்டை - ____________

v. போலி - ____________ vi. தோல்வி - ____________

### அறிவித்தல், அறிவுறுத்தல், கட்டளை

***அறிவித்தல்*** : சகலரும் பொதுவாக அறிந்து கொள்வதற்கான செய்தி அல்லது தகவல்.

உதாரணம்: கண்ட கண்ட இடங்களில் குப்பைகளை வீச வேண்டாம்.

***அறிவுறுத்தல்*** : குறிப்பிட்ட குழுவினரை முன்னிலைப்படுத்தி, அவர்கள் பின்பற்றுவதற்கு உதவும் வகையில், உடன்பாடாகவோ எதிர்மறையாகவோ அறிவுரை கூறும் பாங்கில் அமைவன.

உதாரணம்: தரப்பட்ட இடைவெளியில் சுட்டெண்ணை எழுதவும்.

***கட்டளை*** : அதிகாரத்துடன் கட்டாயப்படுத்தும் ஒரு பணிப்பாகும்.

உதாரணம்: விரைவாக ஓடுங்கள்.

## 4.3

**அ) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களுள் அறிவித்தல்களின் இலக்கத்தைச் சுற்றி வட்டமும் அறிவுறுத்தல்களின் இலக்கத்தைச் சுற்றி சதுரமும் வரைவோம்.**

1. கண்ட கண்ட இடங்களில் எச்சில் துப்ப வேண்டாம்.
2. நாளை பெற்றோருக்கான கூட்டம் நடைபெறும்.
3. இன்று மாலை இடியுடன் கூடிய மழை பெய்யும்.
4. கத்தரிக்கோலால் கடதாசியை இரு பகுதிகளாக வெட்டுக.
5. சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

**ஆ) கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் அறிவித்தல்களா? அறிவுறுத்தல்களா? கட்டளைகளா? எனத் தெரிந்து அடைப்பினுள் எழுதுவோம்.**

1. நீரை வீண் விரயம் செய்ய வேண்டாம். (............................)
2. வீதியின் வலது பக்கமாக நடந்து செல்க. (........................)
3. நீல நிறப் பந்தை எடுங்கள். (........................)
4. நாளை மறுதினம் எமது பாடசாலையின் ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கான 'கண் பரிசோதனை' நடைபெறும். (......................)
5. விடைத்தாளின் எல்லாப்பக்கங்களிலும் உங்களது சுட்டெண்ணைச் சரியாக எழுதுக. (............................)
6. அடுத்த சனிக்கிழமை (16. 02. 2019) மு.ப 8.30 மணி முதல் பி.ப. 4.00 மணிவரையில் எமது பாடசாலையில் சிரமதான நிகழ்வு நடைபெறும். (................................)
7. முன்னோக்கி வாருங்கள். (........................)

### எண்

பொருள்களின் எண்ணிக்கையைக் குறிப்பது எண் எனப்படும். எண் இரண்டு வகைப்படும். அவை,

1) ஒருமை

2) பன்மை

**ஒருமை**

ஒன்றைக் குறிப்பது ஒருமை எனப்படும்.

**உதாரணம்:** அவன், அது, பந்து

**பன்மை**

ஒன்றுக்கு மேற்பட்டவற்றைக் குறிப்பது பன்மை எனப்படும்.

**உதாரணம்:** அவர்கள், பெண்கள், மாடுகள்.

| ஒருமை | பன்மை |
|---|---|
| மயில் | மயில்கள் |
| மரம் | மரங்கள் |
| கல் | கற்கள் |
| பாடசாலையில் | பாடசாலைகளில் |
| முள் | முட்கள் |

### 4.4 பின்வரும் ஒருமைச் சொற்களுக்குப் பொருத்தமான பன்மைச் சொற்களையும் பன்மைச் சொற்களுக்குப் பொருத்தமான ஒருமைச் சொற்களையும் எழுதுவோம்.

| | | |
|---|---|---|
| i. காலம் - | ii. தோட்டம் - | iii. நூல்கள் - |
| iv. அரசன் - | v. மாணவர்கள் - | vi. பிராணி - |
| vii. மாணவனுக்கு - | viii. தேசங்கள் - | ix. புல் - |
| x. பூக்களினால் - | xi. கிளையினது - | xii. உன்னை - |
| xiii. அவள் - | xiv. அண்ணன்மார் - | xv. முள் - |

## இடம்

இடம் மூன்று வகைப்படும். எனவே இதை மூவிடம் என்றும் கூறுவார்கள்.

1) தன்மை

2) முன்னிலை

3) படர்க்கை

**தன்மை**

பேசுபவர் தன்னைச் சுட்டுவது தன்மை எனப்படும்.

**உதாரணம்:** நான் பேசினேன். நாம் படித்தோம்.

**முன்னிலை**

பேசும்போது, கேட்பவரைச் சுட்டுவது முன்னிலை எனப்படும்.

**உதாரணம்:** நீ வந்தாய். நீங்கள் வந்தீர்கள்.

**படர்க்கை**

தன்மையும் முன்னிலையும் அல்லாத பிறர் அல்லது பிற பொருளைக் குறிப்பது. அதாவது பேசுப்படுபொருளைச் சுட்டுவது படர்க்கை எனப்படும்.

**உதாரணம்:** அவன் வந்தான். அவள் வந்தாள். அது வந்தது.

### 4.5 மூவிடப் பெயர்களுள் பின்வரும் சொற்கள் காட்டும் இடத்தை இடைவெளியில் எழுதுவோம்.

உதாரணம் - நாங்கள் - தன்மை

1. நான் ............................ 2. எனது ............................
3. நீங்கள் ............................ 4. அது ............................
5. மரம் ............................ 6. நாம் ............................
7. நீ ............................ 8. கிளி ............................
9. அவை ............................ 10. அவன் ............................

## 4.6 கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து எழுதுவோம்.

1. ............ பெயர் மோகன். (எனது, உன், அவள்)
2. ............ பாடசாலை எங்கே உள்ளது? (அவை, உமது, அவள்)
3. ............ நாடு இயற்கை வளம் நிறைந்தது. (நீ, அது, எமது)
4. ............ தினமும் உடற்பயிற்சி செய்வோம். (நாம், நீங்கள், அவர்கள்)
5. ............ எங்கே செல்கிறாய்? (நான், நீ, அவன்)
6. ............ பென்சில் என்ன விலை? (உங்களுடைய, அவன், நான்)
7. ............ வீடு அழகாக உள்ளது. (நீங்கள், உனது, அது)
8. ............ இனிமையாகப் பாடுகிறாள். (அவள், நீ, நான்)
9. ............ ஒரு நீதிபதி. (நாங்கள், அவர், அவை)
10. ............ ஓர் அழகான மலைத் தொடர். (அது, அவை, இவை)

## 4.7 'நான் எறும்பானால்...' என்னும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுவோம்.

1. ........................................................................................................

2. ........................................................................................................

3. ........................................................................................................

***செயற்பாடு 4.1***

அந்தரேயின் கதையைப் போன்ற வேறு சிறுவர் கதைகளைத் தேடியறிந்து ஆசிரியர் உதவியுடன் அவற்றை வகுப்பறையில் முன்வைக்குக.

# 5 பவளக்கொடி





பருத்தித்துறை யூராம்
பவளக்கொடி பேராம்
பாவைதனை யொப்பாள்
பாலெடுத்து விற்பாள்
அங்கவட்கோர் நாளில்
அடுத்ததுயர் கேளிர்

பாற்குடமுஞ் சுமந்து
பையப்பைய நடந்து
சந்தைக்குப் போம்போது
தான் நினைத்தாள் மாது
'பாலையின்று விற்பேன்
காசைப்பையில் வைப்பேன்'

முருகரப்பா வீட்டில்
முட்டை விற்பாள் பாட்டி
கோழி முட்டை வாங்கிக்
குஞ்சுக்குவைப் பேனே
புள்ளிக் கோழிக் குஞ்சு
பொரிக்குமிரண் டைஞ்சு
குஞ்சுகள் வளர்ந்து
கோழியாகும் விரைந்து
விரைந்துவளர்ந் திடுமே
வெள்ளைமுட்டை யிடுமே



முட்டைவிற்ற காசை
        முழுவதுமெடுத் தாசை
வன்னச்சேலை சட்டை
        மாதுளம்பூத் தொப்பி
வாசனை செருப்பு
        வாங்குவேன் விருப்பு

வெள்ளைப்பட் டுடுத்து
        மினுங்குதொப்பி தொடுத்துக்
கையிரண்டும் வீசிக்
        கதைகள் பல பேசிச்
சுந்தரிபோல் நானே
        சந்தைக்குப்போ வேனே

அரியமலர் பார்ப்பாள்
        அம்புஜமும் பார்ப்பாள்
பூமணியும் பார்ப்பாள்
        பொற்கொடியும் பார்ப்பாள்
சரிகைச்சேலை பாரீர்
        தாவணியைப் பாரீர்
வன்னச்சட்டை பாரீர்
        வடிவழகு பாரீர்
என்றுயாரும் புகழ்வர்
        என்னையாரோ இகழ்வர்
'பாரும்பாரும்' என்று
        பவளக்கொடி நின்று
சற்றுத்தலை நிமிர்ந்தாள்
        தையலென்ன செய்வாள்

பாலுமெல்லாம் போச்சு
        பாற்குடமும் போச்சு
மிக்கத்துய ரோடு
        வீடுசென்றாள் மாது
கைக்குவரு முன்னே
        நெய்க்குவிலை பேசேல்.

ஆக்கம் : நவாலியூர் சோமசுந்தரப் புலவர்

## அகராதிப் பயன்பாடு




பாவை -
கேளிர் -
மாது -
தையல் -
பேசேல் -
துயர் -

### பயிற்சி

### 5.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. பவளக்கொடி எதை விற்று வாழ்ந்து வந்தாள்?
2. சந்தைக்கு எப்படிச் செல்வேன் எனப் பவளக்கொடி கற்பனை செய்தாள்?
3. இப்பாடலை எழுதியவர் யார்?
4. பவளக்கொடி தன்னை வியப்புடன் பார்ப்பவர்கள் யாவர் எனக் கற்பனை செய்தாள்?
5. இந்த பாடலின் மூலம் நீங்கள் பெறக்கூடிய படிப்பினை யாது?

### 5.2 பின்வரும் சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொற்களைப் பாடலிலிருந்து தெரிவுசெய்து எழுதுவோம்.

i. பெண் - ______ ii. தினத்தில் - ______

iii. நிறம் - ______ iv. அங்காடி - ______

v. கரம் - ______ vi. சிரசு - ______

vii. கவலை - ______ viii. மனை - ______

## பேச்சு வழக்கும் எழுத்து வழக்கும்

இயல்பாகப் பேசப்படும் மொழிவடிவம் பேச்சு வழக்கு எனப்படும். இது எழுத்து வழக்கிலிருந்து வேறுப்பட்டதாகும். அத்தோடு அது இடத்திற்கிடம் சமூகத்திற்குச் சமூகம் வேறுபடும் தன்மையுடையது.

எழுத்து வழக்கு என்பது பெரும்பாலும் எல்லோராலும் மாற்றமின்றிப் பிரயோகிக்கப்படும் மொழிவடிவமாகும்.

**உதாரணம்:**

| பேச்சு வழக்கு | எழுத்து வழக்கு |
|---|---|
| 1. புட்டு | பிட்டு |
| 2. நாங்க | நாங்கள் |
| 3. பதட்டம் | பதற்றம் |
| 4. அங்க | அங்கே |
| 5. வெத்திலை | வெற்றிலை |

## 5.3 அடைப்புக்குள் தரப்பட்டுள்ள சொற்களிலிருந்து எழுத்து வழக்குச் சொற்களைத் தெரிந்து கோடிடுவோம்.

1. இயற்கைப் பானமான (இளனி / இளநீர்) அருந்துதல் உடலுக்கு நன்மையைத் தரும்.
2. நானும் தம்பியும் மாலை வேளையில் (தேநீர் / தேத்தண்ணி) அருந்துவோம்.
3. மாலா (கத்திரிக் கோல் / கத்தரிக் கோல்) கொண்டு கடதாசியை வெட்டினாள்.
4. அம்மா கறிக்குச் சுவையூட்டக் (கறிவேப்பிலை / கருவப்பிலை) யைப் பயன்படுத்தினார்.
5. பாமா (சிகப்பு / சிவப்பு) நிறப் பூக்களைப் பறித்தாள்.

### காலம்

கால அடிப்படையில் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எனப் பாகுபடுத்தப்படுகின்றன.

- செயல் முற்றுப்பெற்றதாயின் அது இறந்தகாலம்
  **உதாரணம்:** நான் நேற்று வந்தேன்.
- செயல் நடந்து கொண்டிருக்குமாயின் அது நிகழ்காலம்
  **உதாரணம்:** நான் இன்று வருகிறேன்.
- செயல் நடக்க இருக்குமாயின் அது எதிர்காலம்
  **உதாரணம்:** நான் நாளை வருவேன்.

## 5.4 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. இறந்தகாலச் சொற்களின் கீழ் கோடிடுவோம்.
   i. வரும், செல்கின்றது, பறக்கும், எழுதினார்.
   ii. ஏறுகிறது, பார்ப்போம், மலர்ந்தது, பெய்கிறது.
   iii. உண்டேன், குடிப்பாய், பிறப்பார், நீந்தும்.

2. பின்வரும் வாக்கியங்களை நிகழ்காலத்தில் மாற்றி எழுதுவோம்.
   i. நாளை மழை பெய்யும். ..............................................
   ii. நேற்று பரீட்சை நடைபெற்றது. ..............................................
   iii. நாங்கள் கல்விச் சுற்றுலா சென்றோம். ..............................................

3. பொருத்தமான எதிர்கால வினைச்சொல்லை எழுதுவோம்.
   i. நான் அடுத்த வாரம் கண்டிக்குச் ..............................................
   ii. அப்பா நாளை கொழும்பிலிருந்து ..............................................
   iii. மாணவர்கள் பரீட்சையில் சித்தி ..............................................

4. பின்வரும் வாக்கியங்கள் குறிக்கும் காலங்களை எழுதுவோம்.
   i. நான் பெரியப்பா வீட்டிற்குச் சென்றேன். ..............................................
   ii. நானும் எனது நண்பனும் பாடசாலைக்குச் செல்கிறோம். ....................
   iii. குரங்குகள் மரத்திற்கு மரம் தாவிச் சென்றன. ......................................

# 6 சிறுவர் இதழ்களைப் படிப்போம்



ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள் என்பதால், கவின் விளையாடப் புறப்பட்டான். அவனது வகுப்பைச் சேர்ந்த ஏஞ்சலினுடன் மேலும் மூன்று நண்பர்கள் அவன் எதிரே வந்தார்கள். கவின் அவர்களைக் கண்டு மகிழ்ச்சியடைந்தான்.

**கவின்** : வாருங்கள்! வாருங்கள்! எல்லோரும் விளையாடச் செல்வோம்.

**ஏஞ்சலின்** : இல்லை கவின், வேறொரு இடத்திற்குச் செல்கிறோம். நீயும் வருகிறாயா?

**கவின்** : வருகிறேன்! எங்கே செல்கிறீர்கள்?

**ஏஞ்சலின்** : அதனை இப்பொழுது சொல்லமாட்டோம். வந்து பார். மிக்க மகிழ்ச்சியடைவாய்.

**கவின்** : புதிர் போடுகிறாயே! சரி, வாருங்கள் போகலாம். (கவின், ஏஞ்சலின், மேகலா, ஆயிஷா, சாந்தன் ஐவரும் பேசியவாறே நடந்து சென்று ஒரு கட்டடத்தின் முன் நின்றார்கள்.)

**ஏஞ்சலின்** : கவின், இதுதான் அந்த இடம். பெயர்ப் பலகையைப் படித்துப் பார்.




**கவின்** : ''சிறுவர் நூலகம்'' (பெயர்ப் பலகையை உரத்து வாசிக்கிறான். அனைவரும் உள்ளே செல்கின்றனர்.)

**ஆயிஷா** : இங்கு சிறுவர்களுக்கான நாளிதழ்கள், வார இதழ்கள், மாத இதழ்கள், காலாண்டு இதழ்கள், விசேட பதிப்புக்கள் எனப் பலதரப்பட்ட வெளியீடுகள் காணப்படும்.

**மேகலா** : நாங்கள் சென்ற வாரமும் இங்கு வந்திருந்தோம். அப்போது பல நூல்களை வாசித்தோம்.

**சாந்தன்** : எல்லோரும் வாருங்கள்! நூல்களை வாசிக்கலாம்.

**ஆயிஷா** : இதோ 'சிறுவர் மலர்' சஞ்சிகையில் உள்ள ஒரு பாடலைப் படித்துப் பாருங்கள் நன்றாக இருக்கிறது.

## கிளியக்கா



பச்சைப் பச்சைக் கிளியக்கா!
பழங்கள் கேட்கும் கிளியக்கா!
மெச்சும் வாய்தான் சிவந்தவளே!
மெத்தப் பச்சை நிறத்தவளே!
பசுமைச் சோலைக்குள்ளே நீ
பச்சைக் கிளியாய் ஒளிந்திருப்பாய்!
பசும் பொன் மாலை கழுத்தினிலே!
பார்க்க அழகாய் அணிந்திருப்பாய்!

**மேகலா** : *'சிறுவர் பூங்கா' இதழிலே ஒரு கட்டுரை உண்டு. அது ''கண்டிப் பெரஹரா'' ஏஞ்சலின்! இக்கட்டுரையைப் படிக்கலாம் வா!.*

### கண்டிப் பெரஹரா

இயற்கை எழில் கொஞ்சும் நகரமே கண்டி மாநகரமாகும். இங்கு ஆண்டுக்கு ஒரு தடவை ஆடி மாதத்தில் 'எசல பெரஹரா' நடைபெறும்.

தகதக வென மின்னும் தங்கக் கூரையை உடைய தலதா மாளிகை வரலாற்றுச் சிறப்புமிக்கதொரு பௌத்த விகாரையாகும். இங்கே புத்தரின் புனிதத் தந்தம் வெகு கௌரவமாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

பெரஹரா ஊர்வலத்தின்போது, சிலர் சவுக்குகளை வீசிய வண்ணம் வருவார்கள். அவர்களுக்குப் பின்னால் ஆலவட்டம், கொடிகள், குடைகள் சகிதம் சிலர் வரிசையாக வருவார்கள். இவர்களைத் தொடர்ந்து பல்வேறு நடனக்காரர்கள் நடனமாடியபடி வருவார்கள்.


இவ்வாறாகப் புத்தரின் தந்தத்தைக் கொண்ட தங்கப் பேழையைச் சுமந்த வண்ணம் கொம்பன் யானை வலம் வரும். யானைப் படை புடைசூழ, பட்டுக் குடை நிழல் தர, பல வண்ண மின்விளக்குகள் ஒளி தர, பளபளவென மின்னும் தங்கப்பேழை ஒரு தனியழகுதான். இவ்வளவு சிறப்புக்களைக் கொண்ட பெரஹராக் காட்சியை நாமும் கண்டுகளிப்போம்.

**ஏஞ்சலின் :** நன்றாக இருக்கிறது. இக்கட்டுரை மூலம் இலங்கையின் பிரசித்தமான பெரஹறா ஊர்வலம் பற்றி அறிய முடிந்தது.

**மேகலா :** ஆமாம்! ஆமாம்!

**கவின் :** அடடா! இச்சிறுவர் இதழில் உள்ள வெற்றிடத்தினுள் வரவேண்டிய உருவின் பகுதியைத் தெரிவுசெய்யப் போகிறேன்.

**இடைவெளிக்கு வர வேண்டிய விடையைத் தெரிவு செய்க.**



**சாந்தன் :** இந்தச் சிறுவர் நூலைப் பாருங்கள் புதிர்களுக்கான விடைகளைக் கண்டுப்பிடிக்க வேண்டும்.

**கவின் :** நாம் விடைகளைக் கண்டுபிடிப்போம்.

**புதிர்கள்**

**1** மேரி ஒரு புகைப்படத்தைக் காட்டி இதில் இருப்பவர் எனது அம்மாவின் ஒரே மகள் என்றாள். எனின், இப்படத்தில் இருப்பவர் யார்?

**2** கூரை வீட்டைப் பிரித்தால் ஓட்டு வீடு. ஓட்டு வீட்டுக்குள் வெள்ளை மாளிகை. வெள்ளை மாளிகை நடுவில் ஒரு குளம் அது என்ன?

**3** ஒரு மரத்தில் பத்தொன்பது குருவிகள் அமர்ந்து இருந்தன. வேடனொருவன் ஒரு குருவியை நோக்கி அம்பு எய்தான் எனின் தற்போது மரத்திலுள்ள குருவிகளின் எண்ணிக்கை யாது?

**4** வீதியில் சென்ற அனைவரும் குடைபிடித்துச் சென்றனர். நான் குடைபிடித்துச் செல்லவில்லை. ஆனாலும் நான் நனையவில்லை ஏன்?

**ஆயிஷா** : தெரிந்து கொள்வோம் பகுதியைப் பாருங்கள்!



**தெரிந்துகொள்வோம்**


| | | |
|---|---|---|
| இருதிணை | - | உயர்திணை, அஃறிணை |
| இருசுடர் | - | சூரியன், சந்திரன் |
| முத்தமிழ் | - | இயல், இசை, நாடகம் |
| முக்கனிகள் | - | மா, பலா, வாழை |
| ஐம்பூதம் | - | நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் |

**ஏஞ்சலின்** : அருமையாக இருக்கிறது.

**மேகலா** : இதோ! பெரியார் ஒருவர் பற்றிய செய்தியை வாசிக்கலாம்.

## நவாலியூர் சோமசுந்தரப் புலவர் (1878.5.25 - 1953.7.10)

- சோமசுந்தரப் புலவர் யாழ்ப்பாணத்தில் நவாலி எனும் ஊரைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.
- இவர், கதிர்காமர், இலக்குமிப்பிள்ளையின் தவப்புதல்வராக 1878 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி பிறந்தார்.
- இவர் தமது பதினைந்தாவது வயதிலேயே பாடல்கள் இயற்றத் தொடங்கினார்.
- நாற்பது ஆண்டுகள் ஆசிரியராகக் கடமையாற்றினார்.
- தங்கத்தாத்தா என அழைக்கப்பட்ட இவர், ஆடிப் பிறப்பு, கத்தரி வெருளி போன்ற பாடல்களைப் பாடிப் பரிசும் முதன்மையும் பெற்றார்.



**கவின்** : சிறப்பாக இருக்கிறது. அப்பப்பா! எத்தனை சிறுவர் இதழ்கள்!

**ஏஞ்சலின்** : இந்தச் சிறுவர் இதழ்களுக்கு நாமும் எழுதலாமா?

**ஆயிஷா** : ஆம்! நீங்களும் எழுதுங்கள். சென்ற 'சிறுவர் மலர்' சஞ்சிகையில் நான் எழுதிய 'உண்மை உயர்வு தரும்' என்ற சிறுவர் கதை வெளிவந்திருந்தது.

**மேகலா** : வாழ்த்துக்கள் ஆயிஷா! நாமும் சிறுவர் இதழ் ஒன்றினை உருவாக்குவோமா?

**சாந்தன்** : நல்ல யோசனைதான்! எமது வகுப்பில் ஒரு சிறுவர் இதழை நாம் அனைவரும் இணைந்து வெளியிடுவோம். (அனைவரும் மகிழ்ச்சியாகச் சிறுவர் இதழ் ஒன்றை வெளியிடும் சிந்தனையோடு வீடு நோக்கிச் சென்றனர்.)

**அகராதிப் பயன்பாடு**




தவம் -

நூல் -

இதழ் -

புதல்வர் -

ஊர்வலம் -

சின்னம் -

**பயிற்சி**

## 6.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. ஏஞ்சலினுடன் நூலகத்திற்குச் சென்றவர்கள் யாவர்?
2. நூலகத்திற்குச் சென்ற சிறுவர்கள் வாசித்த விடயங்கள் யாவை?
3. சிறுவர் இதழில் எப்பெரியார் பற்றிய செய்தியை மேகலா குறிப்பிட்டாள்?
4. உங்களுக்குத் தெரிந்த சிறுவர் இதழ்கள் மூன்றினை குறிப்பிடுக?
5. சிறுவர் இதழ்களை வாசிப்பதால் ஏற்படும் பயன்கள் மூன்று எழுதுக.

## 6.2 இடைவெளிக்குப் பொருத்தமான சொற்களைப் பாடத்திலிருந்து தெரிந்தெடுத்து எழுதுவோம்.

i. இறந்தகால வினைமுற்றுச் சொற்கள் - ____________ ____________

ii. நிகழ்கால வினைமுற்றுச் சொற்கள் - ____________ ____________

iii. இரட்டைக்கிளவிச் சொற்கள் - ____________ ____________

iv. அடைமொழிச் சொற்கள் - ____________ ____________

v. இடப்பெயர்ச் சொற்கள் - ____________ ____________

## 6.3 பின்வரும் பேச்சு வழக்குச் சொற்களை எழுத்து வழக்குச் சொற்களாக மாற்றி எழுதுவோம்.

1. காச்சல் ........................ 6. தீவாளி ........................

2. வேர்வை ........................ 7. கோடாலி ........................

3. சவுக்காரம் ........................ 8. வெத்திலை ........................

4. தலகணி ........................ 9. போயிலை ........................

5. கைமாறு ........................ 10. சீயக்காய் ........................

## 6.4 பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்வோம்.

| சொல் | திணை | பால் | எண் | இடம் | காலம் |
|---|---|---|---|---|---|
| படித்தோம் | | | | | |
| ஓடினார்கள் | | | | | |
| நீந்துகின்றன | | | | | |
| உறங்குவான் | | | | | |
| பறக்கின்றது | | | | | |

## 6.5 பொருத்தமான சொற்களைக் கொண்டு இடைவெளிகளை நிரப்புவோம்.

| | | |
|---|---|---|
| நான் | நீ | நாங்கள் |
| மரம் | வாடியது | நீங்கள் |
| கிளிகள் | ஆடினேன் | ஓடினான் |
| பாடினாய் | ஓடும் | பறக்கின்றன |

1. தன்மை ஒருமைச் சொல் ..............................................
2. தன்மை பன்மைச் சொல் ..............................................
3. முன்னிலை ஒருமைச் சொல் ..............................................
4. முன்னிலைப் பன்மைச் சொல் ..............................................
5. படர்க்கை ஒருமைச் சொல் ..............................................
6. படர்க்கைப் பன்மைச் சொல் ..............................................
7. படர்க்கைப் பன்மை நிகழ்காலச் சொல் ..............................................
8. எதிர்காலப் படர்க்கைச் சொல் ..............................................
9. முன்னிலை ஒருமை இறந்தகாலச் சொல் ..............................................
10. தன்மை ஒருமை இறந்தகாலச் சொல் ..............................................
11. உயர்திணை ஆண்பால் இறந்தகால வினைச் சொல்.................................
12. அஃறிணை ஒருமை வினைச் சொல் ..............................................

### செயற்பாடு 6.1

மாணவர்களின் கையெழுத்தினாலான ''சிறுவர் சஞ்சிகை'' ஒன்றை ஆசிரியரின் உதவியுடன் உருவாக்கி அதனை வகுப்பறையில் காட்சிப்படுத்துக.

தமிழ் - 5

# 7 குறள்வழி வாழ்வோம்



திருக்குறளானது தமிழில் வெளிவந்த உலகப் புகழ் பெற்ற அறநூல் இலக்கியமாகும். இதனை இயற்றியவர் திருவள்ளுவர். இதில் 1330 குறள்கள் உள்ளன. ஒவ்வொரு குறளும் இரண்டு வரிகளில் அமைந்துள்ளது. இவை பத்துப் பத்துக் குறள்களாக 133 அதிகாரங்களின் கீழ்த் தொகுக்கப்பட்டுள்ளன. இந்நூல் அறம், பொருள், இன்பம் என்னும் முப்பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இதனால், திருக்குறளானது 'முப்பால்' எனவும் அழைக்கப்படுகின்றது. திருக்குறள், எந்தச் சமயமும் சாராது மனிதனுக்குத் தேவையான அறநெறிகளைச் சொல்கிறது. இதனால், திருக்குறள் பொதுமறை எனப் போற்றப்படுகிறது.

## நன்றி மறவாமை

திருக்குறள் கூறும் கருத்துக்கள் இதிகாசக் கதைகள் ஊடாகவும் கூறப்பட்டுள்ளன. இவ்வகையில் 'நன்றி மறவாமை' என்பது நாம்

கடைப்பிடிக்க வேண்டிய உயரிய பண்பாகும். ஒருவரால் செய்யப்பட்ட உதவியை மறவாது இருப்பதும் பொருத்தமான சந்தர்ப்பத்தில் அன்புடன் அவருக்கு உதவுவதும் நன்றிமறவாமை ஆகும். இதையே ஔவையார் 'நன்றி மறவேல்' என்று ஆத்திசூடியில் கூறியுள்ளார். திருவள்ளுவர் நன்றி மறவாமை பற்றி 'செய்ந்நன்றி அறிதல்' எனும் அதிகாரத்தில் கூறியுள்ளார்.

**''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை**
**செய்ந்நன்றி கொன்ற மகற்கு.''** என்ற குறளுக்கமைய மகாபாரதத்தில் கொடைவள்ளல் கர்ணன், நன்றிமறவாது வாழ்ந்து வரலாற்றில் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பாண்டவர்களும் கௌரவர்களும் தத்தமது ஆற்றல்களை வெளிப்படுத்தும் நிகழ்விலே பங்குகொண்டபோது துரியோதனன் பக்கமிருந்து கர்ணனும் பங்கேற்றான். அப்போது அரச குருவான கிருபாச்சாரியார் கர்ணனை அரசகுலமற்றவன் என எள்ளிநகையாடினார். அவ்வேளை துரியோதனன் கர்ணனை அங்கதேச அரசனாக்கிக் கௌரவப்படுத்தினான்.

இந்நன்றியை மறவாத கர்ணன் தான் பாண்டவர்களின் மூத்த சகோதரன் என அறிந்த பின்பும் துரியோதனனுடன் இறுதிவரை துணையாக நின்று போராடி உயிர்நீத்தான். தான் சார்ந்த பக்கம் தர்மத்திற்கு விரோதமானது என அறிந்தும் நன்றிமறவாத பண்பிலிருந்து கர்ணன் ஒரு போதும் விலகவில்லை.

## பொறுமையுடைமை

எம்மிடம் காணப்படவேண்டிய உன்னதமான பண்புகளில் ஒன்று பொறுமை பேணுதல் ஆகும். நற்பண்புகளான அன்பு, அடக்கம், வாய்மை, சினங்கொள்ளாமை போன்ற அனைத்திற்கும் மேலானது பொறுமையாகும். 'பொறுத்தார் பூமியாள்வார்' என்பது ஆன்றோர் வாக்காகும். இதை வள்ளுவர் ' பொறுமையுடைமை' எனும் அதிகாரத்தில் கூறியுள்ளார்.

‘‘**ஒறுத்தார்க்கு ஒரு நாள் இன்பம் பொறுத்தார்க்கு**
**பொன்றும் துணையும் புகழ்.**’’ என்ற குறளுக்கமைய மகாபாரதத்தில் பொறுமைக்கு இலக்கணமாகத் தருமனின் வாழ்வு காட்டப்பட்டுள்ளது.

சகுனியின் சூழ்ச்சியால் பாண்டவர்கள் ஐவரும் திரௌபதியும் அரசையும் நாட்டையும் இழந்து கானகத்தில் வாழும் நிலை வந்தபோதும் மூத்தவனான தருமன் நிலைகுலையாது பொறுமை காத்தான். அவன் துரியோதனனாலும் அவனது சகோதரர்களாலும் பட்ட துன்பங்களைப் பொறுமையுடன் எதிர்கொண்டான். பொய்பேசாது, சினம் கொள்ளாது, நேர்மையைக் கடைப்பிடித்து வாழ்ந்தான். தருமனின் பொறுமையான ஒழுக்கமே தர்மத்தைக் காத்தது. இவ்வகையில் நாம் ஒவ்வொருவரும் பொறுமை எனும் பண்பினைக் கடைப்பிடித்தால் வாழ்க்கையில் பல வெற்றிகளை அடையலாம்.



## வாய்மை

சொன்னசொல் தவறாமை, வாய்மை எனும் ஒழுக்கங்களின் சிறப்பை ‘வாய்மை’ எனும் அதிகாரத்தில் வள்ளுவர் கூறியுள்ளார்.

‘‘**உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்**
**உள்ளத்து ளெல்லாம் உளன்.**’’ என்ற குறள் மூலம் உண்மையால் உயர்வு பெற்ற மன்னனான அரிச்சந்திரனின் கதை எமக்குப் படிப்பினை ஊட்டுவதாக அமைகின்றது.

அரிச்சந்திரன் மனுநீதி தவறாத அரசன். அவன் விசுவாமித்திர முனிவரிடம் கொடுத்த வாக்கிற்காகத் தனது நாட்டையும் அரசுரிமையையும் இழந்தான். மேலும், மனைவியையும் மகனையும் பிரிந்தான். சுடலைக் காவலாளியாகி ஈற்றில் மகனையும் இழந்து பல்வேறு துன்பங்களை அனுபவித்தான். ஆயினும் சொன்ன சொல் தவறாது சத்தியத்தைக் கடைப்பிடித்தமையால் இழந்தவைகளை மீண்டும் பெற்றுக் கௌரவமடைந்தான்.

இக்கதையில் அரிச்சந்திரன் மன்னராக இருந்தபோதும் எல்லாவற்றையும் இழந்து அடிமையானபோதும் சத்தியத்தைக் கைவிடாது வாழ்ந்தான். அரிச்சந்திரனது கதையை நாடகமாகப் பார்த்த மகாத்மாகாந்தி சத்தியத்தைத் தனது வாழ்க்கையில் கடைப்பிடித்து வரலாற்றில் இடம்பிடித்தார்.

எனவே, நாமும் திருக்குறளில் கூறப்பட்டுள்ள நல்ல கருத்துக்களை வாழ்க்கையில் பின்பற்றப்பழக வேண்டும். நன்றிமறவாமை, பொறுமை, உண்மை போன்ற நற்பண்புகளை இளமையிலேயே கடைப்பிடிக்கப் பழகுவோம்.

**அகராதிப் பயன்பாடு**




மறை -
கீர்த்தி -
ஆன்றோர் -
ஆற்றல் -
நன்றி -
மனு -

**பயிற்சி**

## 7.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. திருக்குறளின் சிறப்பு என்ன?
2. நன்றி மறவாமை பற்றி எந்த அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது?
3. நாம் கடைப்பிடிக்க வேண்டிய நற்பண்புகள் எவை எனக் கூறப் பட்டுள்ளது?
4. இப்பாடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் நற்பண்புகளைக் கடைப் பிடித்தோர் யாவர்?
5. திருக்குறளில் கூறப்பட்டுள்ள அறக் கருத்துக்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

## 7.2 கீழே தரப்பட்டுள்ள சொற்களை கொண்டு வாக்கியம் அமைப்போம்.

i. திருக்குறள் - ............................ ii. கர்ணன் - ............................

iii. பொறுமை - ............................ iv. நன்றி - ............................

v. சத்தியம் - ............................

## 7.3 சுய விபரப் படிவத்தை பூர்த்தி செய்து எழுதுவோம்.

1. முழுப்பெயர் :- ..........................................................................................
2. முகவரி :- ..........................................................................................
3. பிறந்த திகதி :- ..................................................வயது :-......................
4. தொலைபேசி இலக்கம் :-.........................................................................
5. குடும்ப உறுப்பினர்களின் எண்ணிக்கை :- ........................................
6. கல்வி கற்கும் தரம் :- ..........................................................................
7. கல்வி கற்கும் பாடசாலை :- ..................................................................

## 7.4 சேர்த்தெழுதுவோம்.

| | | |
|---|---|---|
| 1. பால் + குடம் ..... | 2. கல் + குகை ..... | 3. பல் + பசை ..... |
| 4. பகல் + பொழுது ..... | 5. பொன் + குடம் ..... | 6. பொன் + சிலை ..... |
| 7. முள் + செடி ..... | 8. முள் + காடு ..... | 9. மக்கள் + பேறு ..... |
| 10. நாள் + காட்டி ..... | 11. வாள் + போர் ..... | 12. கண் + புலம் ..... |

## 7.5 அடைப்புக்குறியிலுள்ள மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து பந்தியைப் பூரணப்படுத்துவோம்.

நாங்கள் அனைவரும் (காலை / மாலை / இரவு) நேரம் நிலவின் ஒளியில் (குதூகலித்துக் / கவலைப்பட்டுக் / வெறுத்துக்) கொண்டிருந்தோம். அவ் வேளையில் வானத்தில் (கொக்கு / கிளிகள் / வெளவால்) கூட்டம் பறந்து சென்றது. அவற்றை (கேட்பதற்கு / பார்ப்பதற்கு / தொடுவதற்கு) வியப்பாக இருந்தது. வானத்தில் விண்மீன்கள் (பளபளவென, தகதகவென, குளுகுளுவென) மின்னின. தவளைகள் (இரைச்சல், கத்தும், சலசலப்பு) சத்தம் காதைத் துளைத்தது. இரவில் பூத்த மலர்கள் (கமகமவென, படபடவென, கலகலவென) நறுமணம் வீசின.

# 8 தேனீ பேசுகிறது

நான் ஒரு மருத்துவர். நான் தயாரிக்கும் மருந்து மிகவும் அற்புதமானது; இனிமையானது. இது எவ்வித நோய்த் தொற்றுகளுக்கும் உட்படாதது. மருத்துவக்குணமுள்ள இம்மருந்தினை நூற்றுக்கு மேற்பட்ட நோய்களுக்குப் பயன்படுத்தலாம். இதனை வேறு எவராலும் உற்பத்தி செய்ய முடியாது. இதன் செயன்முறை நான் மட்டுமே அறிந்த இரகசியமாகும்.

நான் யார் தெரியுமா தோழர்களே! நான்தான் தேனீ! நான் உருவாக்கும் அற்புதமான பானம்தான் தேன். எங்களைப்பற்றிக் கூறுகிறேன் கேளுங்கள். நாங்கள் மலைகளிலும் மரங்களிலும் வீடுகளிலும் எங்கள் கூட்டினை அமைப்போம். எங்கள் குடும்பத்தில் இராணித் தேனீ, ஆண் தேனீக்கள், வேலைக்காரத் தேனீக்கள் என்று சுமார் ஒரு இலட்சம்வரையானோர் இருப்போம். நாங்கள் இராணித் தேனீயின் கட்டளையின்படியே செயற்படுவோம். இதனால் எங்கள் வாழ்க்கை ஒரு கட்டுக்கோப்பான தாகும். எங்களுக்குள் வேலைகள் பிரிக்கப்பட்டுள்ளன. சிலர் தேனைச் சேகரிப்போம்; சிலர் மெழுகு தயாரிப்போம்; சிலர் தேன் உற்பத்தி செய்வோம்; சிலர் கூடு கட்டுவோம்; சிலர் தண்ணீர் கொண்டுவருவோம். இதனால் எங்கள் குடும்பத்தைச் சிறந்த கூட்டுக் குடும்பத்திற்கு முன்னுதாரணமாகக் கூறுவார்கள்.

வாருங்கள் தோழர்களே! இந்த அற்புதமான தேனை எவ்வாறு உருவாக்குகின்றோம் என்று கூறுகின்றேன். முதலில் நாம் அறுகோணவடிவில் மெழுகிட்டு இடைவெளியில்லாமல் வரிசையான அறைகளைக்கொண்ட கூட்டை அமைப்போம். பின்னர், பறந்து சென்று மலர்களிலிருந்தும் கனிகளிலிருந்தும் தேனை எடுத்துக்கொண்டு கூட்டை அடைவோம்.

நாங்கள் தேன் எடுக்கச் செல்வது ஒரு சுவாரசியமான கதை. அதைக் கூறுகின்றேன் கேளுங்கள்; முதலில் வேலைக்காரத் தேனீ தேன் இருக்கும் இடத்தைக் கண்டு வரும். பின்னர் தேனீக் கூட்டத்தை அழைத்துத் தேன் இருக்கும் திசை, தூரம், மணம், தரம் போன்றவற்றை வாலாட்டியும் வயிற்றைக் குலுக்கியும் ஏனைய தேனீக்களுக்குப் புரியவைக்கும்.

வேலைக்காரத் தேனீ கூறிய விடயங்களைச் சரியாகப் புரிந்து கூட்டமாகத் தேன் எடுக்கச் செல்வோம். அப்பொழுது காற்றில் நூற்றுக்கணக்கான மணங்கள் குறுக்கிடும். எனினும் நாங்கள் உள்வாங்கிய மணம் இருக்கும் பூக்கள் மற்றும் கனிகளிலிருந்து மட்டுமே தேனை எடுத்து, வந்த பாதை வழியே மீண்டும் கூட்டை அடைவோம். இப்படி எடுத்துவரும் தேனைக் கூட்டில் இருக்கும் வேலைக்காரத் தேனீக்களிடம் கொடுப்போம். அவை அதனைக் குறிப்பிட்ட நேரத்தில் பதப்படுத்தி அறுகோண அறைகளில் நிரப்பும்.

இங்கு வேலைக்காரத் தேனீயைப்பற்றிக் குறிப்பிட்டே ஆகவேண்டும். சாதாரணமாக எமது கூட்டில் அதிகமாக இவர்கள் தான் இருப்பார்கள். எனினும் இவர்கள் ஆறு வாரங்கள் தான் உயிர்வாழ்வார்கள். அந்நாட்களில் அவர்கள் செய்யும் சாதனையை எந்தவொரு உயிரினத்தாலும் செய்ய முடியாது. கூட்டைக் கட்டுவது, கூட்டைத் தூய்மையாக்குவது, கூடு சூடானால் இறக்கைகளை வேகமாக அசைத்துக் குளிரவைப்பது, கூடு குளிர்ச்சியடைந்தால் கம்பளி போல் நெருங்கி நின்று கூட்டைச் சூடேற்றுவது, இராணித் தேனீ இடும் முட்டையிலிருந்து வரும் புழுக்களை நாளாந்தம் பராமரித்துத் தேனூட்டுவது போன்றன அவற்றுள் சிலவாகும்.

தோழர்களே! ஒரு துளி தேனை உருவாக்குவதற்கு நாங்கள் மிகவும் சிரமப்படுகின்றோம். எனவே, நீங்கள் எங்களைத் துன்புறுத்தக் கூடாது. நாங்கள் பாதுகாப்பாக வாழ விரும்புபவர்கள். ஆபத்து வரும்போது போராடுவோம். அதற்காக எமது படையணி எப்போதும் தயாராக இருக்கும். ஒரு தேனீ எதிரியைத் தாக்கும் போது, அதன் உயிரும் பிரிந்து விடும் என்பது உங்களுக்குத் தெரியுமா? எமது ஊசி, வயிற்றுடன் இணைக்கப்பட்டிருக்கும். நாங்கள் கொட்டும்போது ஊசியுடன் இணைந்து வயிறும் கிழிந்துவிடும். இதனால் தேனீ இறந்துவிடும். இதுதான் யதார்த்தம். தோழர்களே! நாங்கள் அதிகாலையிலேயே எமது வேலைகளை ஆரம்பித்துவிடுவோம். விடாமுயற்சியே எமது பலம். எவ்வாறான சவால்கள் வந்தாலும் எமது முயற்சியைக் கைவிடுவதில்லை. இதனால் நாங்கள் வரலாற்றில் முன்னுதாரணமாகப் பேசப்படுகின்றோம்.

**அகராதிப் பயன்பாடு**




அற்புதம் -

இரகசியம் -

இராச்சியம் -

யதார்த்தம் -

ஆற்றல் -

மருந்து -

**பயிற்சி**

## 8.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. தேனீ உருவாக்கும் அதிவிசேடமான மருந்து எது?
2. தேனீ தன் கூட்டை எவ்வடிவில் உருவாக்கும்?
3. தேனீயின் குடும்பத்தை எதற்கு முன்னுதாரணமாகக் கூறுவார்கள்?
4. வேலைக்காரத் தேனீக்கள் செய்யும் பணிகள் மூன்றினைத் தருக?
5. நீங்கள் தேனீக்களிடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய நற்பண்புகள் எவை?

## மரபுப் பெயர்கள்

எம் முன்னோர் எச்சொல்லால் ஒரு பொருளை வழங்கிவந்தார்களோ அச்சொல்லால் அப்பொருளை அழைப்பது மொழி மரபு. அவ்வாறான பல மரபுப் பெயர்கள் தமிழில் காணப்படுகின்றன. அவற்றுள் சில பின்வருமாறு,

1. தொனி மரபுப் பெயர்கள்
   உதாரணம்: மயில் - அகவும், குதிரை - கனைக்கும்
2. இளமை மரபுப் பெயர்கள்
   உதாரணம்: கிளி - பிள்ளை/குஞ்சு, நெல் - நாற்று
3. ஆண், பெண் மரபுப் பெயர்கள்
   உதாரணம்: சிங்கம் (ஆண்) - ஏறு, சிங்கம்(பெண்) - பெட்டை
4. எச்சங்கள் தொடர்பான மரபுப் பெயர்கள்
   உதாரணம்: யானை - இலத்தி, கழுதை - விட்டை
5. வாழ்விடம் தொடர்பான மரபுப் பெயர்கள்
   உதாரணம்: ஆடு - பட்டி, வாத்து - பண்ணை
6. வித்துக்களுக்குரிய மரபுப் பெயர்கள்
   உதாரணம்: ஆமணக்கு - முத்து, சோளம் - மணி
7. இலைக்குரிய மரபுப் பெயர்கள்
   உதாரணம்: பனை - ஓலை, நெல் - தாள்
8. பிஞ்சுக்குரிய மரபுப் பெயர்கள்
   உதாரணம்: மா - வடு, பனை - நுங்கு
9. உள்ளீட்டு மரபுப் பெயர்கள்
   உதாரணம்: பலா - சுளை, கற்றாளை - சோறு
10. தொகுதிக்குரிய மரபுப் பெயர்கள்
   உதாரணம்: முந்திரி - குலை, சோளம் - கதிர்
11. கூட்டத்தைக் குறிக்கும் மரபுப் பெயர்கள்
   உதாரணம்: அறிஞர் - அவை, ஆடு - மந்தை

**8.2 இடைவெளிக்குப் பொருத்தமான சொல்லைப் பாடத்தில் இருந்து தெரிந்தெடுத்து எழுதுவோம்.**

i. தன்மை ஒருமைப் பெயர்ச் சொல் - ____________

ii. படர்க்கை ஒருமைப் பெயர்ச்சொல் - ____________

iii. முன்னிலைப் பன்மைப் பெயர்ச்சொல் - ____________

iv. படர்க்கைப் பன்மைப் பெயர்ச்சொல் - ____________

**8.3**

**(அ) இடைவெளிகளுக்குப் பொருத்தமான மரபுச் சொல்லின் கீழ் கோடிடுவோம்.**

1. கரடி .......... (சீறும், உறுமும்)
2. கிளி .......... (பேசும், சொல்லும்)
3. வண்டு .......... (கத்தும், இரையும்)
4. பாம்பு .......... (கீச்சிடும், சீறும்)
5. பல்லி .......... (சொல்லும், கத்தும்)
6. ஆந்தை .......... (அலறும், கத்தும்)
7. கழுதை .......... (கனைக்கும், கத்தும்)
8. குயில் .......... (கூவும், கொக்கரிக்கும்)
9. காகம் .......... (கத்தும், கரையும்)
10. குரங்கு .......... (அலப்பும், அலறும்)

**(ஆ) பிராணிகளுக்கான ஆண் பெண் மரபுப் பெயர்களைக் கொண்டு அட்டவணையைப் பூர்த்தி செய்வோம்**

| உயிரினம் | ஆண் | பெண் |
|---|---|---|
| உதாரணம்: ஆடு | கடா | மறி |
| மாடு | | |
| கோழி | | |
| நாய் | | |
| யானை | | |
| குரங்கு | | |
| பூனை | | |
| மான் | | |
| குதிரை | | |
| மயில் | | |

தமிழ் - 5

## (இ) பொருத்தமான இளமைப் பெயரைக் கொண்டு இடைவெளி நிரப்புவோம்

1. மாதவன் கமுகம் .............................. நட்டான்.
2. பசுக் .............................. ஓடி விளையாடியது.
3. ஜெனிட்டா பெண் .............................. பெற்றெடுத்தாள்.
4. கோழிக் .............................. குப்பையில் மேய்ந்தது.
5. வாழையின் அடியில் வாழைக் .............................. காணப்பட்டது.



**எழுவாய் பயனிலை**

- ஒரு வாக்கியத்தில் கருத்து தொடங்கும் இடத்தினை (சொல்லினை) எழுவாய் எனலாம்.
- ஒரு வாக்கியத்தில் கருத்து நிறைவடையும் இடத்தினை (சொல்லினை) பயனிலை எனலாம்.

**கப்பல்** கடலில் **சென்றது.**

↓ எழுவாய் ↓ பயனிலை

## 8.4 வாக்கியங்களில் வரும் பயனிலைச் சொற்களைத் தெரிவுசெய்து புள்ளிக்கோட்டில் எழுதுவோம்.

1. அணில் கொய்யாப்பழத்தைக் கொறித்தது. ..................................
2. வியாபாரி காய்கறிகளை விற்கின்றான். ..................................
3. மாணவர்கள் அணிநடை பயில்கின்றனர். ..................................
4. சிறுமி அழகான பாடலைப் பாடினாள். ..................................
5. அலைகள் கரையை வருடிச் சென்றன. ..................................
6. எமக்கும் ஒரு இராணி இருக்கின்றாள். ..................................
7. எங்களைத் துன்புறுத்தக் கூடாது. ..................................

## 8.5 வாக்கியங்களில் காணப்படும் எழுவாய்ச் சொற்களின் கீழ்க் கோடிடுவோம்.

1. மான் வேகமாக ஓடியது.
2. குளத்திலே மீன்கள் நீந்துகின்றன.
3. பசுக்கள் புல் மேய்ந்தன.
4. ஓவியன் அழகான ஓவியத்தை வரைந்தான்.
5. தோட்டத்தில் பயிர்கள் செழித்து வளர்ந்துள்ளன.

## 8.6 பின்வரும் பந்தியை வாசித்து விபரக் கோவையைப் பூரணப்படுத்துவோம்.

மாத்தளை ஆமினா கல்லூரியில் ஐந்தாந் தரத்திலே பர்வீன் கல்வி கற்கிறாள். தந்தையாரான ரகுமான் வைத்தியசாலை ஒன்றில் வைத்தியராகப் பணிபுரிகின்றார். தாயாரான ஆயிசா ஆசிரியராகக் கடமையாற்றுகிறார். பர்வீனுக்கு ஒரு சகோதரியும் ஒரு சகோதரனும் உள்ளனர். பத்து வயதுடைய பர்வீன் பல்லாங்குழி விளையாடுவதில் ஆர்வம் உடையவள். பர்வீன் ஓய்வு நேரங்களில் வீட்டுத் தோட்டம் செய்வாள்.

**விபரக்கோவை**

1. முழுப்பெயர் - ....................................................................
2. வயது - ....................................................................
3. கற்கும் தரம் - ....................................................................
4. கற்கும் பாடசாலை - ....................................................................
5. தந்தையின் பெயர் - ....................................................................
6. தந்தையின் தொழில் - ....................................................................
7. தாயின் பெயர் - ....................................................................
8. தாயின் தொழில் - ....................................................................
9. விருப்பமான விளையாட்டு - ....................................................................
10. பொழுது போக்கு - ....................................................................

# 9 தம்பிக்கு ஒரு கடிதம்



இல. 28, பிரதான வீதி,
ஹட்டன்.
5. 3. 2020.

அன்புள்ள தம்பிக்கு வணக்கம்,

நான் நலமாக உள்ளேன். உனது கடிதம் கிடைத்தது. அதன் மூலம் உனது சுகசெய்தி பற்றி அறிந்து மகிழ்ந்தேன்.

முதலாந் தவணைப் பரீட்சைக்கான ஒப்படை செய்யவுள்ளதாக எழுதியிருந்தாய். அதற்காகப் பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனையின் தீமைகள் சிலவற்றைக் கேட்டிருந்தாய். முக்கியமான தீமைகள் சிலவற்றை இங்கே எழுதியுள்ளேன்.

இன்று உலகளாவிய ரீதியில் பிளாஸ்டிக், பொலித்தீன் பாவனை அதிகரித்துள்ளது. பிளாஸ்டிக்கைத் தமிழில் ''நெகிழி'' என்றும் கூறுவர். இவை பன்முகப் பயன்பாடுடையவை. இலகுவாகப் பெறக்கூடியவை, மலிவானவை, நீண்ட காலம் பயன்படுத்தக் கூடியவை. இவை போன்ற காரணங்களால் இவற்றின் பாதகமான பின்விளைவுகள்பற்றி அதிகமானோர் சிந்திப்பதில்லை. இதன் பாவனையால் நாம் வாழும் சூழல் மாசடைகின்றது.

சங்கப் புலவரான குடபுலவியனார் என்ற புலவர் ''உணவெனப்படுவது நிலத்தொடு நீரே'' என்கின்றார். நிலமும் நீரும் உணவாக மாறும் திறன் படைத்தவையாகும். பயன்படுத்தப்பட்ட பிளாஸ்டிக், பொலித்தீன் கழிவுகளை மண்ணின் மீது கைவிடுகின்றோம். இவை இலகுவில் உக்கி அழியாத் தன்மையுடையவை. இதனால் மண்ணில் மழை நீர் ஊடுருவிச் செல்ல முடியாதவாறு தடுக்கின்றது. மண்ணின் வளம் குன்றுகின்றது. மழை நீர் தேங்கி நின்று சுகாதாரச் சீர்கேட்டினை ஏற்படுத்துவதுடன் நுளம்பு உற்பத்திக்கும் காரணமாகின்றது.

அதேபோன்று, வீசப்படும் பிளாஸ்டிக், பொலித்தீன்களை கால் நடைகள், பறவைகள், நீர்வாழ் உயிரினங்கள் உணவுடன் சேர்த்து உட்கொள்கின்றன. இதனால் அவை நோய்வாய்ப்படுவதுடன் பெருந்தொகையான உயிரினங்கள் அழிவடைகின்றன.

அண்மையில் வெளிவந்த பத்திரிகைச் செய்தியொன்றில், ''பெரிய காட்டுமிருகமான யானையும் பெரிய கடல் மீனினமான திமிங்கிலமும் மனிதர்கள் பயன்படுத்திய பிளாஸ்டிக், பொலித்தீன் போன்றவற்றை உட்கொண்டமையால் இறந்தன'' எனக் குறிப்பிடப்பட்டிருந்தமையை அறிந்திருப்பாய் என நினைக்கின்றேன். நீர் நிலைகளில் கைவிடப்படும் பிளாஸ்டிக், பொலித்தீன்களால் நீர் மாசுபடுவதுடன் நீரோட்டமும் தடைப்படுகின்றது. இதனால் நோய்கள் பரவுகின்றன.

பாவனையில் இருந்து நீக்கிய பொலித்தீன், பிளாஸ்டிக் பொருள்களை எரிக்கும்போது அதிலிருந்து வெளிவரும் புகையானது காற்றில் கலந்து வளிமண்டலத்தைச் சென்றடைகின்றது. இதனால் வளிமண்டல ஓசோன்படை அழிவடைந்து அதனூடாகச் சூரியனிலிருந்து வரும் புற ஊதாக் கதிர்கள் பூமியை வந்தடைவதால் பூமியிலுள்ள உயிரினங்கள் பாதிப்புக்குள்ளாகின்றன.

இவ்வாறாக, அதீத பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனையால் நிலம், நீர், வளி போன்ற அனைத்துமே பாதிப்படைகின்றன. இதனால் எம்மைப் போலவே விலங்குகளும் தாவரங்களும் பாதிப்புகளையும் அழிவுகளையும் எதிர்கொள்கின்றன.

பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனைக்குப் பதிலாக இயற்கையோடு இணைந்த பொருள்களைப் பயன்படுத்துவதால் எவ்வித பாதிப்பும்

ஏற்படாது. வாழை இலை, தாமரை இலை, வாழைத் தடல், ஓலைகள், கமுகமடல், மட்பாண்டங்கள், துணியால் செய்யப்பட்டவை, கடதாசியால் செய்யப்பட்டவை போன்றவற்றை எமது அன்றாட வாழ்வில் பயன்படுத்தப் பழகவேண்டும். இவ்வாறான பொருள்களைப் பயன்படுத்திய பின் நிலத்தில் கைவிட்டாலும் அவை உக்கி நிலத்தில் பச ளையாகும். உலோகத்தால், மரத்தால் ஆக்கப்பட்ட பொருள் பாவனையால் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுவதில்லை.

பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனையை இயலுமானவரை தவிர்க்கும் போது எதிர்காலத்தில் ஏற்படும் சூழல் பிரச்சினையைக் குறைக்க வாய்ப்பு ஏற்படும்.

மேலும், பயன்படுத்திய பிளாஸ்டிக், பொலித்தீன் பொருள்களை மீள் சுழற்சிக்கு உட்படுத்துவதால் சூழல் மாசடையாது. இவ்வகையில் பிளாஸ்டிக், பொலித்தீன் பாவனையைத் தவிர்க்கும் போது சூழல் தூய்மையாகவும் பசுமையாகவும் காணப்படும். நாமும் ஆரோக்கியமாக வாழமுடியும்.

நான் எழுதிய அனைத்துத் தகவல்களும் போதுமானவையாக அமையும் என நம்புகின்றேன். நன்றாகப் படிக்கவும் பரீட்சையில் சிறப்பாகச் சித்தியடையவும் அண்ணாவின் வாழ்த்துக்கள்.

இப்படிக்கு,
அன்பிற்கினிய அண்ணன்,
நிமலன்.

**அகராதிப் பயன்பாடு**




தகவல் -
பன்முகம் -
கேடு -
உக்குதல் -
கதிர் -
ஆரோக்கியம் -

பயிற்சி

## 9.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. கடிதம் எழுதியவரின் முகவரி யாது?
2. இன்று உலகளாவிய சூழல் பிரச்சினைகளில் முதன்மை இடம் பெறுவது யாது என இங்கு கூறப்பட்டுள்ளது?
3. பொலித்தீன் பாவனையால் ஏற்படும் தீமைகள் இரண்டு தருக.
4. பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனையை மக்கள் அதிகம் விரும்புவதற்கான காரணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
5. பொலித்தீன், பிளாஸ்டிக் பாவனைக்குப் பதிலாகப் பயன்படுத்தப்படும் மாற்றுப்பொருள்களின் பெயர்கள் மூன்றினை எழுதுக.

## 9.2 கீழ்வரும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு உனது பாடசாலைபற்றி வெளியூரிலுள்ள உனது நண்பனுக்கு / நண்பிக்கு ஒரு கடிதம் எழுதுவோம்.

1. கடதாசியின் மேல் மூலையில் இடமும் திகதியும்.
2. ‘‘*அன்புள்ள நண்பன் அகிலன்*’’, **என்று எழுதப்படும் விளிப்பு.**
3. நலம் கூறலும் நலம் விசாரித்தலும்.
4. கடித உள்ளடக்கம்,
    - 4.1 பாடசாலையின் பெயர் மற்றும் அமைந்துள்ள இடம்.
    - 4.2 ஆசிரியர் மாணவர் தொகை.
    - 4.3 நூலகம், ஆய்வுகூடம், விளையாட்டு மைதானம் முதலிய வசதிகள்.
    - 4.5 விளையாட்டிலும் கல்வியிலும் பாடசாலை செய்துள்ள சாதனைகள்.
    - 4.6 வேறு சிறப்பம்சங்கள்.
5. முடிவு: ‘இப்படிக்கு உனது அன்புள்ள நண்பன்’ என்றெழுதிப் பெயரைக் குறிப்பிடல்.

## செயப்படுபொருள்

ஒரு வாக்கியத்தின் வினைச்சொல்லின் செயற்பாட்டிற்கு உட்படும் பெயர்ச்சொல் செயப்படுபொருள் ஆகும்.

பயனிலை என்பது வினைச்சொல். பெரும்பாலும் பயனிலை வாக்கியத்தின் இறுதியில் வரும். எழுவாய்க்கும் பயனிலைக்கும் இடையில் செயப்படுபொருள் வரும் (இதற்கு விதிவிலக்கும் உண்டு.) ஒரு வாக்கியத்தில் எழுவாய், பயனிலை தவறாது இருக்கும். செயப்படுபொருள் இல்லாமலும் வாக்கியம் அமைவது உண்டு.

**முருகன் மாலாவை மணந்தான்.**

இந்தத் தொடரில் (யாரை? எதை? எவற்றை?) மணந்தான் என்னும் வினாவிற்கு விடையாக வருவது செயப்படுபொருள் ஆகும்.

மேலே கூறப்பட்ட வாக்கியத்தில்...

| | | |
|---|---|---|
| எழுவாய் | - | முருகன் |
| செயப்படுபொருள் | - | மாலாவை |
| பயனிலை | - | மணந்தான் |

## 9.3

### (அ) தரப்பட்ட விடைகளைப் பொருத்தமான இடைவெளிகளில் எழுதுவோம்.

| | | | | |
|---|---|---|---|---|
| எச்சம் | விட்டை | சாணம் | இலத்தி | பிழுக்கை |

1. மாட்டின் மலம் ...................................
2. யானையின் மலம் ...................................
3. கழுதையின் மலம் ...............................
4. பறவைகளின் மலம் ...................................
5. ஆட்டின் மலம் ...................................

## (ஆ) தரப்பட்ட விடைகளைப் பொருத்தமான இடைவெளியில் எழுதுவோம்.

| பட்டி | பந்தி (கூடம்) | பண்ணை | லாயம் | தொழுவம் |
|---|---|---|---|---|

1. ஆடுகளைக் கட்டும் இடம் ..........................................
2. யானைகளைக் கட்டும் இடம் ..........................................
3. குதிரைகளைக் கட்டும் இடம் ..........................................
4. கோழிகளை வளர்க்கும் இடம் ..........................................
5. மாடுகளைக் கட்டும் இடம் ..........................................

## (இ) பொருத்தமான வித்து மரபுப் பெயரை தொடர்பு படுத்துவோம்.

| (அ) | (ஆ) |
|---|---|
| 1. மிளகாய் | முத்து |
| 2. பலா | பருப்பு |
| 3. ஆமணக்கு | மணி |
| 4. தினை | விதை |
| 5. நிலக்கடலை | கொட்டை |

## (ஈ) இடைவெளிக்குப் பொருத்தமான இலை மரபுப் பெயரை எழுதுவோம்.

1. நான் வாழை ........................................... யில் உணவு உண்டேன்.
2. கமலா, தென்னை .................................. யில் கிடுகு பின்னினாள்.
3. தோரணங்களுக்கு இடையே மா ...................... காணப்பட்டது.
4. நெல்லின் .................................. பசுமையாகக் காணப்பட்டது.
5. பனை ..................................................... முறிந்து விழுந்தது.

**(உ) பொருத்தமான பிஞ்சு மரபுப் பெயரினைத் தெரிந்து கோடிடுவோம்.**

1. மா (கொட்டை / வடு)
2. பலா (பிஞ்சு / மூசு)
3. வாழை (கச்சல் / கதலி)
4. பனை (வடலி / நுங்கு)
5. தென்னை (குரும்பை / தேங்காய்)



## 9.4

**(அ) கீழ்வரும் வாக்கியங்களிலுள்ள செயப்படுபொருளைச் சுற்றி வட்டமிடுவோம்.**

1. குருவிகள் தானியங்களைக் கொத்தித் தின்றன.
2. சிறுவர்கள் தொப்பிகளைத் தலையில் போட்டனர்.
3. பாரி மன்னன் தேரை வேகமாகச் செலுத்தினான்.
4. இடையன் வெள்ளை ஆடுகளைச் சுறுசுறுப்பாக மேய்த்தான்.
5. கலைவிழாவில் உமா அழகாக வீணையை வாசித்துக் காட்டினாள்.

**(ஆ) பின்வரும் சொற்கள் செயற்படுபொருளாக வருமாறு தனித்தனி வாக்கியம் அமைப்போம்.**

1. பூக்கள் 2. கதை 3. பாட்டு 4. சூழல் 5. கணினி

## 9.5 "நான் விரும்பும் பெரியார்" என்னும் தலைப்பில் ஐந்து வாக்கியங்கள் எழுதுவோம்.

1. ..........................................................................................................
2. ..........................................................................................................
3. ..........................................................................................................
4. ..........................................................................................................
5. ..........................................................................................................

## 9.6 புதிரில் ஒளிந்திருக்கும் எழுத்துக்களைக் கொண்டு சொற்களை அமைப்போம்.

உதாரணம்

முதலெழுத்து (வ)ட்டத்தில் உண்டு கட்டத்தில் இல்லை, இரண்டாவது எழுத்து ப(ங்)கத்தில் உண்டு பக்கத்தில் இல்லை. மூன்றாவது எழுத்து (கி)ளியில் உண்டு ஒளியில் இல்லை.

விடை வங்கி

1. கரத்தில் உண்டு மரத்தில் இல்லை
தடியில் உண்டு தலையில் இல்லை
கதவில் உண்டு கனவில் இல்லை
கம்பியில் உண்டு கப்பியில் இல்லை ______

2. சூட்டில் உண்டு ஏட்டில் இல்லை
பரியில் உண்டு பறியில் இல்லை
யன்னலில் உண்டு கன்னலில் இல்லை
சின்னத்தில் உண்டு சினத்தில் இல்லை ______

## 9.7 தரப்பட்ட சோடிச் சொற்களுக்குப் பொருத்தமான சொற்களின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுவோம்.

**1. இன்பம் : துன்பம்**

i. துயில் : உறக்கம்
ii. கணவன் : மனைவி
iii. இலாபம் : நட்டம் (......)

**2. தோள் கொடுத்தல் : உதவுதல்**

i. எருமை : எக்காளமிடும்
ii. முகங்கொடுத்தல் : எதிர்கொள்ளல்
iii. உயர்வு : தாழ்வு (......)

3. **சினம் : கோபம்**

i. அழகு : கவின்

ii. திருவள்ளுவர் : திருக்குறள்

iii. நடிகன் : நடிகை (.....)

4. **கிளி : பேசும்**

i. நாய் : குரைக்கும்

ii. சிறுமி : அழகான

iii. பாம்பு : அரவம் (.....)

5. **கீரியும் பாம்பும் போல : பகை உணர்வு**

i. கடன் கழித்தல் : மனமின்றிச் செய்தல்

ii. அவன் ஓடினான் : அவள் ஓடினாள்


iii. நகமும் சதையும் போல : ஒற்றுமை (.....)



**செயற்பாடு 9.1**

குழுக்களாக இணைந்து ஆசிரியரின் துணையுடன் ''பொலித்தீன் பாவனையைக் குறைப்போம்'' என்ற தலைப்பில் துண்டுப் பிரசுரம் ஒன்றைத் தயாரித்து அதனை வகுப்பறையில் காட்சிப்படுத்துங்கள்.

# 10 குகனோடு ஐவரானோம்



கங்கைக் கரையில் சிருங்கிபேரம் என்ற நகரில் வாழ்பவன் குகன் என்ற வேடர் குலத்தலைவன். ஆயிரம் மரக்கலங்கட்கு அதிபதி. கரிய மேனியும் திரண்ட தோள்களும் அகன்ற மார்பும் உடையவன்.

இத்தகைய குகன் இராமனைக் கண்டு மகிழ வேண்டும் என்று எண்ணினான். மீன்களை நெய்யில் பொரித்து மீனும் தேனும் சுமந்து சுற்றத்தார் புடை சூழ வந்தான். எனினும், கூட்டமாகப் போவது நன்றன்று என்று எண்ணினான். சுற்றத்தாரையும் வில், வாள் முதலிய ஆயுதங்களையும் அகற்றி தான் மட்டும் தவப்பள்ளியை அடைந்தான்.

ஆசிரமத்தில் முன் நிற்கின்ற வீரனாகிய இலட்சுமணர், ‘‘நீ யார்? ஏன் வந்தாய்?’’ என்று வினவினார். குகன், ‘‘ஐயனே! நான் வேடர்குலத் தலைவன். என் பெயர் குகன்! நான் இராமரைக் காணவந்தேன்.’’ என்றான்.

இலட்சுமணர், ‘‘இங்கு நில்’’ என்று கூறி உள்ளே சென்று இராமரை வணங்கி, ‘‘அண்ணா! குகன் என்ற வேடர்குலத் தலைவன் தங்களைக் காண வந்திருக்கின்றான். உள்ளத்தால் தூய்மையானவன். ஒழுக்கத்தில் உயர்ந்தவன். உள்ளே விடலாமா?’’ என்று வினவினார். இராமர், ‘‘அவனை என்பால் அனுப்புக’’ என்றார். இலட்சுமணர் குகனுக்கு அனுமதி தந்தார். குகன் ஆசிரமத்திற்குள் சென்று இராமரைப் பலமுறை வணங்கினான். கண்ணீர் சொரிந்து, பரிந்து ‘‘ஐயனே! மீன்களை நெய்யில் பொரித்துக் கொணர்ந்தேன். தேவரே! திருவுளம் எதுவோ’’ என்றான்.



இராமர் அங்குள்ள முதிர்ந்த முனிவர்களைப் பார்த்து புன்னகை செய்தார். ‘‘குகனே! மிக்க மகிழ்ச்சி. நீ கொணர்ந்த உணவுகளை நான் அங்கீகரித்துக் கொண்டேன். உன் அன்பு ஆழங்காணாத ஆழ்கடல் போன்றது. இங்கே என் அருகே இரு’’ என்றார். இராமர் பல முறை கூறியும் குகன் அமரவில்லை. இராமரைப் பலமுறை பார்த்தும் குகனுக்குப் போதும் என்ற எண்ணம் வரவில்லை. இராமரை வைத்தகண் வாங்காமல் பார்த்துக் களிப்புற்றிருந்தான். இராமரின் தவக்கோலத்தைக் கண்டு வருந்தினான்.

இராமனுடைய அனுமதி பெற்று அங்கு தங்கினான். குகன் இலட்சுமணரைப் பார்த்து, ‘‘இராமபிரான் கானகம் வரக்காரணம் யாது?’’ என்று வினாவினான். இலட்சுமணர், ‘‘கைகேயி தசரத மன்னனிடம் வரத்தைப் பெற்று இராமபிரானைக் கானகம் அனுப்ப ஏற்பாடு செய்தாள்’’ என்றார். அதனைக் கேட்ட குகன் ஆறாத்துயரம் அடைந்தான்.

அன்று இரவு குகன் தானும் சுற்றமும் சூழ காவல் புரிந்தான். பொழுது புலர்ந்தது, இராமர் நீராடி ஜெபதவங்கள் செய்தார், குகனைப் பார்த்து ‘‘ஓடம் கொண்டு வா, நாங்கள் கங்கையைக் கடந்து வனவாசம் புரியவேண்டும்’’ என்றார்.

இந்த வார்த்தையைக் கேட்ட குகன் அதிர்ச்சி அடைந்தான். ‘‘ஐயனே! தாங்கள் இங்கேயே இருக்கவேண்டும் தங்களுக்குத் தொண்டு செய்ய அடியேனும் ஐயாயிரம் வேடர்களும் இருக்கின்றோம். கங்கைக்கரை

சுகமான இருப்பிடம், இங்கு பூசைக்குத் தேவையான நறுமணம் நிரம்பிய மலர்கள் இருக்கின்றன, நல்ல நல்ல போர்வைகள் இருக்கின்றன, இனிய கனிகள் இருக்கின்றன, பகைவரை வெல்லுவேன், கிழங்குகளைக் கொணர்வேன், எட்டுத் திசைகட்கும் வழி சொல்லுவேன்! அடியேன் எல்லாத் தொண்டுகளையும் அன்புடன் செய்வேன். ஆதலால், இங்கேயே இருக்க வேண்டும்'' என்று உள்ளம் உருகி உரைத்தான்.

இராமர், குகனை அன்புடன் நோக்கி, ''குகனே! இன்று முதல் தசரதருக்கு ஐந்து புதல்வர்கள், நீ எனக்குத் தம்பி பரதன் முதலியோர் உனக்குத் தம்பியர், சீதை உனக்கு அண்ணி, பதினான்கு ஆண்டுகள் பதினான்கு நாட்கள் போல கழியும், பின்னர் நாம் ஒன்று சேர்ந்து வாழ்வோம். என் சொல்லைத் தட்டாதே! ஓடம் கொணர்க'' என்றார். குகன் கண்ணீர் அரும்ப ஓடத்தைக் கொணர்ந்தான். இராமரும் சீதையும் இலட்சுமணரும் ஓடத்தில் ஏறினார்கள். இராம நாமத்தை இனிமையாகப் பாடிக்கொண்டே ஓடத்தைக் குகன் செலுத்தினான்.



கங்கை வெள்ளத்தில் குகனுடைய ஓடப் பாடலில் நாதவெள்ளமும் இராமர்மீதான அவனுடைய அன்புவெள்ளமும் கொந்தளித்து ஓடின. ஓடம் அக்கரையைச் சேர்ந்தது. இராமர் குகனைப் பார்த்து, ‘‘மனம் வருந்தாமல் இரு. மீண்டும் ஒன்று சேர்ந்து மகிழ்வோம்’’ என்று கூறி கானகம் சென்றார். அங்கு மாதவமணிவிளக்கான பரத்துவாச முனிவரைக் கண்டு வணங்கினார். முனிவரின் சொற்படி சித்திரக்கூட மலைக்கு அருகில் உள்ள மந்தாகினி நதிக்கரையில் ஓர் ஆசிரமம் அமைத்து மூவரும் தங்கினார்கள்.

சில நாட்கள் கழித்து, இராமபிரான் பயணத்தைத் தொடர்ந்தபோது வழியில் யமுனா நதியைக் கண்டார். அப்புண்ணிய நதியில் சீதை மற்றும் இலட்சுமணருடன் நீராடினார். அங்குள்ள காய், கனிகளை உண்டு மூவரும் பசியாறினர். நதியின் அக்கரையில் மூங்கில்களைக் கொண்டு ஓலைகளைப் பரப்பி ஒரு பர்ணசாலையை இலட்சுமணர் அழகாக அமைத்தார். தம்பி தன்மேல் வைத்துள்ள அன்பினையும் தொண்டினையும் கண்டு இராமர் வியப்புற்றார். இலட்சுமணரை மார்புறத் தழுவி, வாழ்த்திச் சீதையுடன் இராமர் அப்பர்ணசாலையில் தங்கினார்.

**அகராதிப் பயன்பாடு**




வேடர் -
முனிவர் -
ஓடம் -
கானகம் -
ஆசிரமம் -
பர்ணசாலை -

***செயற்பாடு 10.1***

இராமாயணத்தில் வரும் இக்கதைப் பகுதியை ஆசிரியரின் துணையுடன் வகுப்பறையில் நடித்துக் காட்டுக.

பயிற்சி

## 10.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. குகன் வாழ்ந்த நகரத்தின் பெயர் என்ன?
2. குகன் இராமரைக் காண்பதற்காக வந்தபோது கொண்டுவந்த உணவுப் பொருள்கள் யாவை?
3. இலட்சுமணரிடம் குகன் தன்னை எவ்வாறு அறிமுகப்படுத்திக் கொண்டான்?
4. இராமர் வனவாசம் செல்லக் காரணம் யாது? இராமர் எத்தனை ஆண்டுகள் வனவாசம் புரிந்தார்?
5. நீங்கள் இக்கதையில் இலட்சுமணரிடம் கண்ட நற்பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக.

## 10.2 பின்வரும் சொற்களுக்குரிய ஒத்த கருத்துச் சொற்களைப் பாடத்திலிருந்து தெரிவுசெய்து எழுதுவோம்.

i. சிரிப்பு - ____________

ii. சமுத்திரம் - ____________

iii. வனம் - ____________

iv. பழம் - ____________

v. எண்திசை - ____________

## 10.3 தரப்பட்டுள்ள எழுவாய், பயனிலைச் சொற்களைக் கொண்டு வாக்கியங்களை எழுதுவோம்.

1. நான் / விளையாடினேன்
2. மயில் / ஆடும்
3. சிங்கம் / கர்ச்சித்தது
4. நாம் / உண்டோம்
5. எறும்புகள் / சென்றன

தமிழ் - 5

## 10.4

**(அ) பின்வரும் உள்ளீட்டு மரபுப்பெயர்களுக்குப் பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்து எழுதுவோம்.**

| அரிசி | சதை | சுளை | பருப்பு | சோறு |
|---|---|---|---|---|
| .................. | .................. | .................. | .................. | .................. |
| .................. | .................. | .................. | .................. | .................. |
| .................. | .................. | .................. | .................. | .................. |

| | | | |
|---|---|---|---|
| நெல் | மா | பலா | வரகு |
| உழுந்து | கற்றாளை | கோதுமை | பயறு |
| அவரை | தோடை | வாழை | தினை |

**(ஆ) தரப்பட்ட தொகுதி மரபுப்பெயர்களுக்குப் பொருத்தமான சொற்களைத் தெரிவுசெய்து எழுதுவோம்.**

மா | தென்னை | நெல் | சோளம் | முந்திரி | புளி

i. குலை - ______________ ______________

ii. கொத்து - ______________ ______________

iii. கதிர் - ______________ ______________

## 10.5 படங்களை அவதானித்து வாக்கியங்கள் எழுதுவோம்.







## 10.6 தடயம் கூறி விளையாடுவோம்.

ராதா தடயம் கூறி விளையாடுவதற்காக ஒரு பொருளை மனதில் நினைத்துள்ளாள். இப்பொருள் எமது வாழ்க்கைக்கு இன்றியமையாதது மட்டுமன்றி வெவ்வேறு வடிவங்களிலும் காணப்படுகின்றது. தரப்பட்டுள்ள வினாவிற்காக விடைகளை அவதானித்து ராதா நினைத்த பொருளைக் கண்டுபிடிப்போம்.

| | |
|---|---|
| 1. உயிருள்ளதா? | இல்லை |
| 2. உலகில் எங்கும் கிடைக்குமா? | ஆம் |
| 3. வீட்டில் இருக்குமா? | ஆம் |
| 4. விலை கொடுத்து வாங்கப்படுகிறதா? | ஆம் |
| 5. சமைக்க உதவுகிறதா? | இல்லை |
| 6. வீட்டில் அனைவருக்கும் உதவுகிறதா? | ஆம் |
| 7. நேரத்தோடு தொடர்புபட்டதா? | ஆம் |
| 8. சிலவேளை கைகளை அலங்கரிக்குமா? | ஆம் |

ராதா நினைத்த பொருள் யாது? ..........................................................

## 10.7

### (அ) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்கு 'அடைமொழி களைச்' சேர்த்து மீண்டும் எழுதுவோம்.

உ + ம் :- கிளி பழத்தைக் கொத்தியது.

பச்சைக் கிளி கனிந்த பழத்தைக் கொத்தியது.

1. தாமரை மலர்ந்தது. ..........................................................................
2. சிறுவன் பாடலைப் பாடினான். .........................................................
3. குயில் கூவும் ஓசை கேட்டது. ..........................................................
4. கொக்கு மீனைக் கொத்துகிறது. ........................................................
5. சிறுமி நடனம் ஆடுகின்றாள். ..........................................................

தமிழ் – 5

(ஆ) கட்டத்தில் உள்ள பத்துப் பெயர்ச் சொற்களை இனங்கண்டு வட்டமிடுவோம்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வு | க | ச | ட | த | ப | ற | ய | ர |
| கை | க | ழ | ய | ம | ன | வ | ம | ல |
| வ | ய | ர | ல | ச | ந் | தி | ர | ன் |
| ண் | ப | ட | ம | ய | ர | ல | வ | ய |
| டி | ண | ற | ம | ன | ப | ம | ஆ | வ |
| வை | த் | தி | ய | சா | லை | வ | ந் | ய |
| ய | வ | ப | ம | ல | ர | ன | தை | ல் |
| ர | ன | ம | ர | கு | தி | ரை | க | ன் |
| ய | ரி | டி | ம் | ம | வ | ல | ம | வ |

(இ) கட்டத்தில் உள்ள ஐந்து வினைச் சொற்களை இனங்கண்டு வட்டமிடுவோம்.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| உ | ண் | டா | ர் | க | ள் | சி | ஒ | வ |
| ப | ல | ன | ர | ஆ | டு | ப | டி | ல |
| வ | ட | ல | வ | ன | ல | ய | னா | ன |
| ய | க | ச | ட | த | ப | ற | ள் | ற |
| ய | ர | ல | வ | ள | ல | ம | வ | ர |
| வி | ளை | யா | டி | னா | ன் | க | ல | ம் |
| ம | கூ | வி | ய | து | ரி | கி | செ | வெ |
| வ | வு | ர | ல | ப | ம | ன | க | ட |
| சி | ரி | த் | தா | ள் | ற | த் | த | து |

## சொல்வகை

தமிழில் சொற்கள் நான்கு வகைப்படும். அவை வருமாறு:
1) பெயர்ச்சொல் 2) வினைச்சொல் 3) இடைச்சொல் 4) உரிச்சொல்

### பெயர்ச்சொல்

ஐம்புலனுக்கும் மனத்திற்கும் புலப்படும் பொருள்களைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும். இஃது ஆறு வகைப்படும். அவை,

1) பொருட் பெயர் : பொருளின் பெயரைக் குறிப்பது.
உதாரணம்: பசு, மரம், கல், ரமணன்

2) இடப்பெயர் : இடத்தின் பெயரைக் குறிப்பது.
உதாரணம்: வீடு, முற்றம்

3) காலப் பெயர் : காலத்தின் பெயரைக் குறிப்பது
உதாரணம்: மாரி, பகல், திங்கட்கிழமை

4) சினைப் பெயர் : உறுப்பின் பெயரைக் குறிப்பது.
உதாரணம்: தலை, கண், இலை, கிளை

5) குணப் பெயர் : பொருளின் குணத்தைக் குறிப்பது. இது பண்புப் பெயர் எனவும் கூறப்படும்.
உதாரணம்: கருமை, வட்டம், சதுரம், இனிமை

6) தொழிற் பெயர் : ஒரு தொழிலைக் குறிப்பது.
உதாரணம்: பாடுதல், ஆடுதல், நடத்தல்

### வினைச்சொல்

ஒரு பொருளினது தொழில் நிகழ்ச்சியைக் குறிக்கும் சொல் வினைச் சொல்லாகும். வினைச் சொல்லின் சிறப்பிலக்கணம் காலம் காட்டுதலாகும்.

உதாரணம்: பசுக்கள் புற்றரையை நோக்கிச் சென்றன.
பசுக்கள் புற்றரையை நோக்கிச் செல்கின்றன.
பசுக்கள் புற்றரையை நோக்கிச் செல்லும்.

தமிழ் - 5

## 10.8 குறுக்கெழுத்துப் புதிரைப் பூர்த்தி செய்வோம்

**1) இடமிருந்து வலம்**

1. நாம் பாடசாலையில் பெறுவது
3. நீர் அள்ளப்பயன்படுவது

(பக்கம் மாறிவரும்)

**மேலிருந்து கீழ்**

1. கை எனும் சொல்லின் ஒத்தச்சொல்
2. அடுப்பு எரிக்கப் பயன்படுவது

| | | |
|---|---|---|
| 1 | | 2 |
| | | |
| 3 | | |

**2) இடமிருந்து வலம்**

1. இரவு எனும் சொல்லின் எதிர்க் கருத்து
3. பாத்திரம் எனும் சொல்லின் ஒத்த சொல்

(பக்கம் மாறிவரும்)

**மேலிருந்து கீழ்**

1. திரையரங்குகளில் பார்ப்பது
2. உப்பு நீர் காணப்படும் நீர்நிலை

(தலை கீழாக உள்ளது)

| | | |
|---|---|---|
| 1 | | 2 |
| | | |
| 3 | | |

**3) இடமிருந்து வலம்**

1. நாம் தினமும் உண்பது
3. கொடியில் காய்க்கும் காய்

(குழம்பியுள்ளது)

| | | |
|---|---|---|
| 1 | | 2 |
| | | |
| 3 | | |

**மேலிருந்து கீழ்**

1. மேனி என்பதன் ஒத்த சொல்
2. வீட்டிற்குத் தேவையானது

(தலைகீழாக உள்ளது)



# 11 விடுகதை விளையாட்டு

அகிலன் தரம் ஐந்தில் கல்வி கற்கும் ஒரு மாணவன். ஒரு நாள் இரவு வேளை அவனது கிராமத்தில் திடீரென மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டது. அதனால் அகிலன், அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி, அண்ணா, தங்கை ஆகியோர் வீட்டு முற்றத்தில் வந்து அமர்ந்தார்கள். அவ்வேளை...

**தங்கை :** வாருங்கள், அண்ணா விளையாடுவோம்.

**அம்மா :** இருள் சூழ்ந்த இந்த வேளையில், என்ன விளையாடப் போகிறீர்கள்?

**அகிலன் :** அது தானே அம்மா! இரவு வேளை என்ன விளையாட முடியும்?

**தாத்தா :** விளையாட முடியும். அகிலன் நான் சொல்வதைக் கேள். அனைவரும் வட்டமாக அமருங்கள். நான் விடுகதை கேட்கிறேன்.

**அகிலன்** : சரி தாத்தா, இது நல்ல விளையாட்டு.

**தாத்தா** : அடி காட்டில்; நடு மாட்டில்; நுனி வீட்டில். அது என்ன?

**அகிலன்** : ம்ம்ம்...... 'நெல்' தானே தாத்தா.

**தாத்தா** : சரியாக சொன்னாய் அகிலா.

**அப்பா** : நான் ஒரு விடுகதை கேட்கிறேன். பதில் கூறுங்கள் பார்க்கலாம். ஆனை விரும்பும்; சேனை விரும்பும்; அடித்தால் வலிக்கும்; கடித்தால் இனிக்கும். அது என்ன?

**தங்கை** : கடினமாக இருக்கிறதே அப்பா.

**அகிலன்** : நான் சொல்கிறேன். அதற்கு சரியான விடை 'கரும்பு'

**அப்பா** : ஆமாம்! ஆமாம்!

(தாத்தா சிரித்தபடி விடுகதை கேட்கத் தொடங்கினார்.)

**தாத்தா** : இணைபிரிய மாட்டார்கள்; நண்பர்களல்லர், ஒன்றுசேர மாட்டார்கள்; பகைவர்களல்லர், அவர்கள் யார்?

**தங்கை** : எனக்கு தெரியும்..... 'தண்டவாளம்'.

**தாத்தா** : கெட்டிக்காரி!

**அம்மா** : ஈட்டிப்படை வென்று; காட்டுப்புதர் கடந்து; இனிமையான புதையலைக் கண்டெடுக்கலாம். அது என்ன?

**அண்ணா** : நான் சொல்கிறேன். அம்மா! 'பலாப்பழம்'

**அம்மா** : ஆமாம்! ஆமாம்!

**தாத்தா** : அது சரி! நாங்கள் விடுகதை கேட்டதைப் போன்று நீங்களும் விடுகதை கேளுங்கள்.

**அகிலன்** : நான் முதலில் கேட்கிறேன்.

உடல் சிவப்பு; வாய் திறந்திருக்கும்; உணவு காகிதம். அது என்ன?

**தங்கை** : 'அஞ்சற் பெட்டி'

**அண்ணா** : ஊரைச் செழிக்க வைத்து; உல்லாச நடை பயின்று; வளைந்து குலுங்கி வையகமெல்லாம் சுற்றி வருவாள் ஒரு வனிதை. அவள் யார்?





இலவசப் பாடநூல்

**அகிலன்** : எனக்குத் தெரியவில்லை.

**பாட்டி** : அதற்குச் சரியான விடை 'கங்கை'. அது சரி. நான் கூறும் விடுகதைக்கு விடை கூறுங்களேன் பார்ப்போம். எல்லை இல்லா அழகி; எட்டி நிற்கும் இரும்பையும் கவர்ந்து தன்பால் இழுப்பாள். அவள் யார்?

**அண்ணா** : 'காந்தம்' தானே பாட்டி.

**பாட்டி** : (பாட்டி பொக்கை வாயைத் திறந்து சிரித்தபடி) ஆமாம் சரியாகக் கூறினாய்.

**அண்ணா** : ஏற முடியாத இடத்தில் எட்டப் பறக்கும் பனித்துளி. அது என்ன?

**அகிலன்** : 'முகில்' என்பது சரியான விடையா அண்ணா?

**அண்ணா** : சரியான விடைதான் அகிலன்.

**அகிலன்** : ஐந்து அடுக்கு, நாலு இடுக்கு அது என்ன?

**தங்கை** : தெரியவில்லையே.

**அப்பா** : 'விரல்கள்' தானே அகிலன்.

**அகிலன்** : ஆமாம் அப்பா, இப்போது நீங்கள் ஒரு விடுகதை கூறுங்களேன்.

**அப்பா** : ஒளி கொடுக்கும்; விளக்கல்ல, வெப்பம் தரும்; நெருப்பல்ல, பளபளக்கும்; தங்கமல்ல. அது என்ன?

**தங்கை** : 'சூரியன்...' 'சூரியன்...' (என்று பலமாகச் சத்தமிட அனைவரும் சிரித்தனர்)

**அகிலன்** : நான் ஒரு விடுகதை கேட்கலாமா?

**தாத்தா, பாட்டி** : அதற்கென்ன கேள்.

**அகிலன்** : ஓடிப் படர்வேன்;கொடி அல்ல, ஒளி மிக உண்டு; நிலவுமல்ல, மனைகளை அலங்கரிப்பேன்; மலரல்ல. அது என்ன?

**அண்ணா** : 'மின்சாரம்'
(அவ்வேளை மின்சாரம் உயிர் பெற்று மனை பிரகாசமானது)

**அகிலன்** : சரியாகச் சொன்னீர்கள் அண்ணா! இதோ மின்சாரமும் வந்து விட்டது.

**அம்மா :** வாருங்கள், விளையாடியது போதும். நாம் அனைவரும் வீட்டினுள் சென்று இரவு ஆகாரம் உண்ணலாம்.

**அகிலன் :** வருகிறோம் அம்மா, நேரம் கழிந்ததே தெரியவில்லை. இவ்விடுகதை விளையாட்டு மிகவும் பயனுள்ளதாக அமைந்தது.

**அப்பா :** உண்மை தான். நேரம் கிடைக்கும் பொழுது இவ்விளை யாட்டை விளையாடுவோம்.

**மூவரும் :** (முகம் மலர்ந்து) சரி அப்பா!

(எல்லோரும் எழுந்து ஆகாரம் உண்ண வீட்டினுள் சென்றனர்.)

**அகராதிப் பயன்பாடு**




வையகம் -

வனிதை -

கங்கை -

புதையல் -

ஆகாரம் -

மனை -

**பயிற்சி**

## 11.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. விடுகதை விளையாட்டை ஆரம்பித்து வைத்தவர் யார்?
2. இவ் உரையாடலில் இடம்பெற்றவர்கள் யாவர்?
3. பாடத்திலுள்ள இரட்டைக்கிளவிச் சொல்லை எழுதுக.
4. பனித்துளி எனும் சொல்லைப் பிரித்தெழுதுக.
5. நீங்கள் அறிந்த விடுகதைகள் ஐந்தை எழுதுக.

## 11.2 கீழே தரப்பட்ட ஒவ்வொரு சொல்லிற்கும் பொருத்தமான ஒத்தகருத்துச் சொல்லையும் எதிர்க்கருத்துச் சொல்லையும் எழுதுவோம்.

| | ஒத்தகருத்துச்சொல் | எதிர்க்கருத்துச்சொல் |
|---|---|---|
| i. வெளிச்சம் | - ...................................... | .................................... |
| ii. தோழன் | - ...................................... | .................................... |
| iii. கங்குல் | - ...................................... | .................................... |
| iv. கானகம் | - ...................................... | .................................... |
| v. கேள்வி | - ...................................... | .................................... |

### பழமொழிகள்

ஒரு சமுதாயத்தில் நீண்ட காலமாகப் பயன்பாட்டில் இருந்து வரும் அனுபவக்குறிப்புகள் பழமொழி ஆகும். கருத்தொன்றைப் பிறருக்கு எளிமையாகப் புரியும்படி, நுண்மையாகவும் தெளிவாகவும் இனிமையாகவும் சுருக்கமாவும் கூறப் பழமொழி உதவுகிறது.

**ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவுமா?** என்பது ஒரு பழமொழி. இது சுரைக்காயையோ, கறியையோ உணர்த்தாமல் வேறொரு பொருளை உணர்த்துகின்றது. புத்தகத்தைப் படித்தால் மட்டும் போதாது. செயல் ஊடாகப் பெறும் அனுபவ அறிவே அவசியம் என்னும் பொருளை உணர்த்துகிறது.

உதாரணம்:

1. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் - விடாமுயற்சியாற் பயன் உண்டு.
2. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு - அதிக ஆசை அழிவைத் தரும்.
3. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் - ஓர் உதாரணமே போதும்.

## 11.3 தரப்பட்ட சொல்லுக்குரிய கூட்டத்ததைக் குறிக்கும் சொல்லைத் தெரிவுசெய்து கோடிடுவோம்

1. பல் ⟶ வரிசை / நிரை / தொடர்
2. திறப்பு ⟶ கூட்டம் / சபை / கோர்வை
3. சனம் ⟶ குழாம் / திரள் / படை
4. மயில் ⟶ தோப்பு / குழாம் / கூட்டம்
5. புகையிலை ⟶ கட்டு / சிப்பம் / படை
6. மலை ⟶ படை / கும்பல் / தொடர்
7. திராட்சை ⟶ சீப்பு / குலை / கொத்து
8. மா ⟶ கூட்டம் / தோப்பு / தொடர்
9. மான் ⟶ கூட்டம் / திரள் / குழு
10. ஆடு ⟶ நிரை / மந்தை / படை

## 11.4 கீழே தரப்பட்டுள்ள பெயர்ச் சொற்களை அவற்றின் வகைக்கேற்ப பொருத்தமான இடத்தில் எழுதுவோம்.

இலை, நேற்று, உணவு, வட்டம், வீடு, வருதல், கறுப்பு, பூ, மாலா, தை, இனிப்பு, மரம், பாடுதல், மூக்கு, இலங்கை, சனிக்கிழமை, பாடசாலை, ஆடுதல்

- பொருட்பெயர் : ........................ ........................ ........................
- இடப் பெயர் : ........................ ........................ ........................
- காலப் பெயர் : ........................ ........................ ........................
- சினைப் பெயர் : ........................ ........................ ........................
- குணப் பெயர் : ........................ ........................ ........................
- தொழிற் பெயர் : ........................ ........................ ........................

11.5

**(அ) பின்வரும் பழமொழிகளுக்குப் பொருத்தமான கருத்தைத் தெரிவு செய்வோம்.**

| | |
|---|---|
| தீமை செய்தால் தீமை வரும். | உடல் வலிமை அவசியம். |
| முயற்சி செய்தால் வெற்றி கிட்டும். | |
| மானத்துடன் வாழ வேண்டும். | சிறுவயதுப் பழக்கம் நீங்காது |

1. கடனில்லாத கஞ்சி கால்வயிறு போதும். - ........................................
2. அழுத பிள்ளை பால் குடிக்கும். - ........................................
3. தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும். - ........................................
4. சுவர் இருந்தால்தான் சித்திரம் வரையலாம். - ........................................
5. முற்பகல் செய்யிற் பிற்பகல் விளையும். - ........................................

**(ஆ) பின்வரும் பழமொழிகளின் பொருள்களை விளக்கி ஒவ்வோர் வாக்கியம் எழுதுவோம்.**

உதாரணம்: ***உப்பிட்டவரை உள்ளளவும் நினை*** என்பதற்கேற்பக் கர்ணன் துரியோதனனுக்காகப் போர் புரிந்து உயிர் துறந்தான்.

1. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
2. பேராசை பெரு நட்டம்.
3. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.
4. ஆறின கஞ்சி பழங்கஞ்சி.
5. விளையும் பயிரை முளையில் தெரியும்.

## 11.6 எழுத்துக்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்களை எழுதுவோம்.

உ -ம் :- மனைரகு மள்கக் கபுழ்ந்து பேனர்சி.

குமரனை மக்கள் புகழ்ந்து பேசினர்.

1. தம்சுத் கசும் ருதம் ............................................
2. ஒரு அது அயகிழ மராகிம் கும்ஆ ............................................
3. இறுன் எதும சாடபாலை முறைவிடு நாம்குளா ............................................
4. துந்பரு யஉர யஉரப் கிக்பறறது. ............................................
5. நக்கல்லொழும் ஒரின்ருவ வைவாழ் உத்துர்யம் ....................................

## 11.7 தரப்பட்ட ஒலி வேறுபாட்டுச் சொற்களைக் கொண்டு பாடலின் இடைவெளியை நிரப்புவோம்.




### சொல்லும் பொருளும்

குணமான நீதி விளக்கும் - ____________

கூர் ஏற்றும் இரும்புக் கருவி - ____________

துணிவான போரில் விளங்கும் - ____________

சுவைக்கனியாம் பூக்கள் கொடுக்கும் - ____________

பழகுமீனைப் பிடிக்கும் நெய்த - ____________

பதுங்க வரப்பில் தோண்டும் எலிகள் - ____________

அழகுணர்ச்சித் தொழிலில் மிளிரும் - ____________

அருமைமிகு பயிரைக் கெடுக்கும் - ____________

இலை விரித்துக் காய்க்கும் பச்சை - ____________

இரை பிடிக்க நீந்தும் குளத்தில் - ____________

உலைக்களத்தில் கொல்லர் செய்வார் - ____________

ஓராண்டின் ஆறாம் மாதம் - ____________

# 12 நல்வழி



ஔவையார் தமிழ் நாட்டில் வாழ்ந்த பெண் புலவர். அவர் வள்ளல் அதியமான் அளித்த நெல்லிக்கனியை உண்டு நீண்ட காலம் உயிர் வாழ்ந்தார். நல்வழி, கொன்றைவேந்தன், மூதுரை, ஆத்திசூடி, ஞானக்குறள், ஆசாரக்கோவை போன்றவை அவர் பாடிய பாடல் தொகுப்புகளாகும்.

நல்வழி, ஔவையார் இயற்றிய ஒரு தமிழ் நீதி நூல் ஆகும். மக்கள் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய அறக்கருத்துக்களை இந்நூல் எடுத்துக் கூறுவதால் இதற்கு இப்பெயர் வந்தது. இந்நூலில் நாற்பது வெண்பாக்கள் உள்ளன.

## சாதி இரண்டு

**சாதி இரண்டொழிய வேறில்லைச் சாற்றுங்கால்**
**நீதி வழுவா நெறிமுறையின் – மேதினியில்**
**இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்**
**பட்டாங்கில் உள்ள படி.** **வெண்பா : 2**

**பொழிப்புரை**

*சொல்லப்போனால் பூமியிலே சாதி இரண்டே அல்லாமல் வேறு இல்லை.* நீதியினின்று தவறாத ஒழுக்கமுறைப்படி பொருள்தேடி மற்றவர்க்கு கொடுத்து வாழ்பவரே உயர்ந்த சாதியினர். தர்மம் செய்யாதவரே இழிந்த சாதியினர். இதுவே அறநூலில் கூறப்பட்டுள்ள உண்மையாகும்.

**பதங்களுக்குரிய கருத்து**

*ஒழிய - அல்லாமல்; சாற்றுங்கால் - சொல்லுமிடத்து; மேதினி - பூமி; இட்டார் - கொடுத்தவர்; பட்டாங்கு - உண்மை நூல்(அறநூல்)*

## மரியாதையே தேட்டம்

ஈட்டும் பொருண்முயற்சி எண்ணிறந்த ஆயினும் ஊழ்
கூட்டும் படியன்றிக் கூடாவாம் – தேட்டம்
மரியாதை காணும் மகிதலத்தீர் கேண்மின்
தரியாது காணும் தனம். *வெண்பா : 8*

**பொழிப்புரை**

*பூமியில் வாழும் மனிதர்களே கேளுங்கள்:* பொருள் தேடுகின்ற முயற்சிகள் எண்ணில்லாதவையாக இருப்பினும் விதி கூட்டிவைத்தாலேயன்றிச் செல்வம் வந்துசேராது. சேர்ந்தாலும் தங்காது. அதனால், நீங்கள் தேடக்கூடிய செல்வம் மரியாதையே ஆகும்.

**பதங்களுக்குரிய கருத்து**

*ஈட்டும் - சேர்க்கும்; எண்ணிறந்த - அளவில்லாத; தேட்டம் - தேடியது; மகிதலம் - பூமி; தரியாது - நில்லாது; தனம் - பொருள்.*

## நல்லகுடிப்பிறந்தார் இயல்பு

ஆற்றுப் பெருக்கற்று அடிசுடும், அந்நாளும் அவ்வாறு
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும் - ஏற்றவர்க்கு
நல்ல குடிபிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லை என மாட்டார் இசைந்து. வெண்பா : 9

**பொழிப்புரை**

ஆறானது, கோடைகாலத்தில் வெப்பத்தால் வற்றி சுடுமணலாய்க் கிடந்தாலும் நீரை விரும்பி யாராவது தோண்டினால் ஊற்றெடுத்து உலகத்தவர்க்கு உதவி செய்து காப்பாற்றும். அதேபோல, நல்ல குடியில் பிறந்தவர்கள் மிகவும் வறியவராக மாறிய நிலையிலும் தம்மிடம் வந்து இரந்தவர்க்கு இல்லை என்று மனம் ஒப்பிச் செல்லார். ஏதோவகையில் உதவி செய்தே தீருவார்.

**பதங்களுக்குரிய கருத்து**

பெருக்கு - வெள்ளம்; ஊற்று - சுரத்தல்; ஊட்டும் - காப்பாற்றும்; நல்கூர்ந்தார் - வறுமையடைந்தவர்; இசைந்து - மனம் ஒப்பி.

## உழுதுண்டு வாழ்தலே உயர்ந்தது

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழும் அன்றே - ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. வெண்பா : 12

**பொழிப்புரை**

நீர்பெருகி ஓடும் ஆற்றோரத்திலே உள்ள மரமும் அரசன் அறிய செல்வத்திற் சிறந்திருக்கும் பெருவாழ்வும் ஒரு காலத்தில் அழிந்து விடும். ஆதலால், உழுது பயிரிட்டு உண்டு வாழ்வதற்கு நிகரான உயர்ந்த வாழ்வு வேறில்லை. ஏனெனில் மற்றைய தொழில்களுக்கு எப்பொழுதும் குறைகள் உள்ளன.

**பதங்களுக்குரிய கருத்து**

வீற்றிருந்த - பெருமையோடு வாழ்ந்த; விழும் - அழியும்; ஏற்றம் - உயர்வு; பழுது - குறைகள்.

## மூடனுக்கு எப்படி விளக்குவது

பூவாதே காய்க்கும் மரமுமுள மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே – தூவா
விரைத்தாலும் நன்றாகா வித்தெனவே பேதைக்கு
உரைத்தாலும் தோன்றாது உணர்வு. *வெண்பா : 35*

**பொழிப்புரை**

பூக்காமலே காய்க்கின்ற மரங்களும் உள்ளன. அவைபோல், ''ஒன்றைச் செய்'' என்று கட்டளையிடாமலே தானாகக் குறிப்பறிந்து செயலாற்றுவோரும் உள்ளனர். நன்றாகத் தூவி விதைத்தாலும் நன்கு முளைக்காத வித்துப்போல, அறிவில்லாத மூடனுக்கு எவ்வளவுதான் சொன்னாலும் நல்லறிவு உண்டாகாது.

**பதங்களுக்குரிய கருத்து**

ஏவாதே - கட்டளையிடாமலே; தூவா - தூவி; விரைத்தாலும் - விதைத்தாலும்; பேதை - மூடன் (அறிவிலி); உணர்வு - நல்லறிவு.

**அகராதிப் பயன்பாடு**




மேடு -
குடி -
ஏற்றம் -
உற்றார் -
மாநிலம் -
பேதை -

பயிற்சி

## 12.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. 'நல்வழி' கூறும் இரு சாதிகளும் எவை?
2. 'நல்வழி' இல் கூறப்பட்டுள்ள மனிதர்கள் தேடத் தகுந்த செல்வம் எது?
3. நல்ல குடியில் பிறந்தவர்களுடைய இயல்பு யாது?
4. உயர்வான வாழ்வாக ஔவையார் எவ்வாழ்வைக் குறிப்பிடுகின்றார்?
5. நல்வழிப் பாடல்கள் மூலம் நீங்கள் கற்றுக் கொண்ட அறக்கருத்துக்கள் மூன்றினைக் குறிப்பிடுக.

### இணைமொழிகள்

ஒன்றுக்கொன்று ஒத்த கருத்தையோ அல்லது எதிர்க்கருத்தையோ தரும் இரு சொற்கள் சேர்ந்து வருமாயின் அது இணை மொழியாகும்.

உதாரணம் :

ஒத்தகருத்து - அக்கம் பக்கம், உற்றார் உறவினர்

எதிர்க்கருத்து - மலையும் மடுவும், உள்ளும் புறமும்

## 12.2 பின்வரும் இடைவெளிகளுக்குப் பொருத்தமான இணை மொழிகளை தெரிந்து எழுதுவோம்.

| உற்றார் உறவினர் | அல்லும் பகலும் | வரவு செலவு |
|---|---|---|
| சீரும் சிறப்புமாக | ஏறக் குறைய | |

1. அங்கே .................................. ஆயிரம் மக்கள் கூடினர்.
2. அவனுக்கு .................................. எவருமில்லை.
3. உழவன் .............................. பாடுபட்டு உழைத்தான்.
4. மணமக்களை யாவரும் .................................. வாழ வாழ்த்தினர்.
5. தந்தை மாசி மாத இறுதியில் .............................. விபரங்களைக் கணக்கிட்டார்.

## 12.3

### (அ) பின்வரும் இணைமொழிகளை வாக்கியங்களில் அமைத்து எழுதுவோம்.

உதாரணம் : தாய் தன் குழந்தையைக் கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொண்டார்.

1. கள்ளங் கபடம்
2. கையும் மெய்யும்
3. பழக்க வழக்கம்
4. ஏற்ற இறக்கம்
5. கண்ட துண்டம்
6. அக்கம் பக்கம்

### (ஆ) பகுதி (I) க்குப் பொருத்தமான சொல்லை பகுதி (II) இல் இருந்து தெரிவுசெய்து இணைப்போம்.

| பகுதி (I) | பகுதி (II) |
|---|---|
| 1. வடக்கு, மேற்கு, கிழக்கு | காலங்கள் |
| 2. இனிப்பு, துவர்ப்பு, புளிப்பு | மொழிகள் |
| 3. நெல், கோதுமை, குரக்கன் | நிறங்கள் |
| 4. சிவப்பு, பச்சை, நீலம் | தானியங்கள் |
| 5. தமிழ், ஆங்கிலம், சிங்களம் | சுவைகள் |
| 6. இளவேனில், முதுவேனில், வசந்தம் | திசைகள் |
| 7. மல்லிகை, முல்லை, செவ்வரத்தை | மாதங்கள் |
| 8. ஆடி, ஐப்பசி, புரட்டாதி | பூக்கள் |

## 12.4 பின்வரும் வாக்கியங்களில் வரவேண்டிய பொருத்தமான வினைச்சொற்களை எழுதுவோம்.

1. நானும், அப்பாவும் சந்தைக்குச் ................................................................
2. புறாக்கள் தானியங்களைக் ................................................................
3. வைத்தியர் நோயாளியை ................................................................
4. சாரதி வண்டியை மெதுவாக ................................................................
5. ஆசிரியர் பாடத்தைக் ................................................................
6. அண்ணா அழகான ஓவியத்தை ................................................................
7. தாய்ப்பசுவிடம் கன்றுக்குட்டி பால் ................................................................
8. மான் கூட்டம் புல்வெளியில் ................................................................

## 12.5 தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியங்களை எழுதுவோம்.

1. காய்ச்சலால் / அன்வர் / துன்பப்பட்டான் / கடுமையான (.........................)
2. அஞ்சல் நிலையத்தினால் / வகையான / பல / நாம் / அடைகிறோம் / நன்மைகளை (...........................................................................)
3. விளங்குகின்றன / உயர்ந்து / உலகில் / நாடுகள் / உழைப்பைப் / போற்றும் (.....................................................................................)
4. கண்ணையும் / கருத்தையும் / சிற்பங்கள் / அழகு / கவரும் / வாய்ந்தவை (.....................................................................................)
5. பயன்படும் / பலவகையிலும் / மரங்களை / காப்பது / வளர்த்துக் / கடமையாகும் / நம் / எமக்குப் (....................................................)

## 12.6 தரப்பட்ட நிகழ்வுகளை வாசித்துப் பொருத்தமான எதிர்வு கூறலைத் தெரிவு செய்வோம்.

1. அப்துல்லா வீதியில் செல்லும்போது பார்வை இழந்த முதியவர் வெள்ளைப் பிரம்புடன் வீதியோரம் நிற்பதைக் கண்டான். அப்துல்லா செய்யக்கூடியது யாது?
   - i. கவனியாது செல்லல்.
   - ii. வீதியை கடந்து செல்ல அவருக்கு உதவி செய்தல்.
   - iii. வயோதிபரை பார்த்து நகைத்துச் செல்லல்.

2. மேரியின் நண்பி பாடசாலைக்குப் பென்சிலை எடுத்து வர மறந்து விட்டாள். மேரி செய்யக் கூடியது யாது?
   - i. நண்பியைக் கண்டித்தல்.
   - ii. தன்னிடமுள்ள மேலதிக பென்சிலை நண்பிக்குக் கொடுத்தல்.
   - iii. வேறொரு நண்பியைத் தெரிவு செய்தல்.

3. பாடசாலையில் குமரன் நடந்து செல்லும்போது ஒரு மாணவனை இடித்துக் கீழே தள்ளி விட்டான். குமரன் செய்ய வேண்டியது யாது?
   - i. கீழே விழுந்த மாணவனை தூக்கி விட்டு மன்னிப்பு கேட்டல்.
   - ii. கீழே விழுந்த மாணவனை ஏசுதல்.
   - iii. கீழே விழுந்த மாணவனைக் கவனிக்காமல் செல்லுதல்.

# 13 எமது பண்டிகைகள்



பாரதியார் வித்தியாலயத்தின் வருடாந்த ''சமூக ஒன்றிணைப்பு விழா'' நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட கல்விப் பணிப்பாளர் திரு. அழகன் அவர்களால் ஆற்றப்பட்ட உரையின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.

அன்புமிக்க மாணவர்களே! இன்றைய விழாவில் 'பண்டிகைகள்' எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளேன். எம் நாட்டில் பல்வேறு பண்டிகைகள் காலத்திற்குக் காலம் கொண்டாடப்படுகின்றன. இலங்கை பல்லின மக்களையும் பலசமயங்களையும் கொண்டநாடு என்பது நீங்கள் அறிந்த விடயமாகும்.

அந்தவகையில், தைப்பொங்கல், தீபாவளி, வருடப் பிறப்பு, ஆடிப் பிறப்பு, நோன்புப் பெருநாள், ஹஜ்ஜுப் பெருநாள், பொசன், வெசாக், நத்தார், ஈஸ்டர் போன்ற பண்டிகைகள் அந்தந்தச் சமயக் கலாசாரங்களுடன் பன்னெடுங் காலமாகக் கொண்டாடப்படுகின்றன.

ஒவ்வொரு பண்டிகைக்கும் அதற்கே உரித்தான பின்னணி வரலாறுகள் காணப்படுகின்றன. பண்டிகைகள் தோற்றம் பெறுவதற்கான காரணங்களும் வேறுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பண்டிகைகள் கலாசார ரீதியாக வேறுபட்டாலும் அவற்றின் தோற்றங்கள், மரபுகள், வழக்காறுகள் வேறுபட்டிருப்பினும், அவை அனைத்துமே மனத்திற்கு மகிழ்ச்சியையும் புத்துணர்ச்சியையும் ஏற்படுத்துகின்றன. இனத்தால், மதத்தால், கலாசாரத்தால் இணைந்தவர்கள் பாரம்பரியங்களைப் பேணி ஒன்றிணைந்து கொண்டாடி மகிழும் விழாவாக இப்பண்டிகைகள் விளங்குகின்றன.

பண்டிகைகள் வேறுபாடுகளைக் கடந்து பல அம்சங்களில் ஒன்றிணைந்து இருப்பதைக் காணலாம். இவ்வகையில், நாம் பண்டிகைகளைக் கொண்டாடும்போது எமது உடலையும் வீட்டையும் தூய்மைப் படுத்துதல், அழகுபடுத்துதல், இறைவழிபாட்டை மேற்கொள்ளல், புத்தாடையணிதல், பெரியோரின் ஆசியைப் பெறுதல், தானதருமம் செய்தல், சிற்றுண்டி தயாரித்து மகிழ்தல், உறவினர் நண்பர்களுடன் உறவாடுதல், கூடி உண்ணுதல் போன்ற செயற்பாடுகளில் ஒன்றிணைந்தே ஈடுபடுகின்றோம். மேலும் இந்நாட்களில் களிப்பூட்டும் நிகழ்வுகளும் இடம்பெறுகின்றன.

பண்டிகைகள் தோன்றிய நோக்கங்களில் சமய, கலாசார ரீதியான வேறுபாடுகள் காணப்படுகின்றன என முன்னர் கூறியிருந்தேன். ஆயினும்,

பண்டிகைகளால் கிடைக்கத்தக்க பயன்கள் மிக உன்னதமானவையாகவே காணப்படுகின்றன. இவ்வகையில் பல்வேறு அற ஒழுக்கங்களையும் விழுமியங்களையும் சம்பிரதாயங்களோடு ஒன்றிணைத்துத் தருவதில் பண்டிகைகள் பெரும்பங்கை ஆற்றுகின்றன. ஏனையோருக்கு உதவுதல், ஒற்றுமையாகச் செயற்படல், பொறுமை, பெரியோரை மதித்தல், தன்னம்பிக்கை, நல்லுறவு போன்ற உயரிய நல்லொழுக்க விருத்திக்குப் பண்டிகைகள் வழிவகுக்கின்றன. எனவே நாம் பண்டிகைகளை ஒன்றிணைந்து கொண்டாடி, உயரிய பண்புகளைப் பெற்று மகிழ்வோமாக!

### அகராதிப் பயன்பாடு




கலாசாரம் -

மரபு -

சம்பிரதாயம் -

வழக்காறு -

புத்துணர்ச்சி -

களிப்பூட்டல் -

### பயிற்சி

### 13.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. இந்த விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டவர் யார்?
2. இலங்கையில் கொண்டாடப்படும் பண்டிகைகள் எவை?
3. பண்டிகை கொண்டாடப்படும் போது பொதுவாகக் கடைப்பிடிக்க வேண்டிய செயற்பாடுகள் நான்கினை எழுதுக.
4. பண்டிகைகள் மூலம் பெறப்படும் நல்லொழுக்கங்கள் எவை?
5. நீங்கள் விரும்பும் பண்டிகை பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுக.

## 13.2 பின்வரும் எழுத்துக்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள சொல்லாக எழுதுவோம்.

i. க/சா/லா/ர/ம் - ........................

ii. வ/று/ழ/க்/கா - ........................

iii. பு/த்/ண/து/ர்/சி/ச் - ........................

iv. பி/த/ன்/ம்/ன/க்/கை - ........................

v. ம்/ச/ர/பி/தா/ய/ம் - ........................

## 13.3 இடைவெளிகளை நிரப்புவோம்.

இருதிணை - ................ ................

இரு சுடர் - ................ ................

முக்கனி - ................ ................ ................

முக்காலம் - ................ ................ ................

நாற்படை - ................ ................ ................ ................

நாற்பொருள் - ................ ................ ................ ................

ஐம்பொறி - ................ ................ ................ ................ ................

ஐம்பூதம் - ................ ................ ................ ................ ................

அறுசுவை - ................ ................ ................ ................ ................
................

ஏழுஸ்வரங்கள் - ................ ................ ................ ................ ................
................ ................

எண்திசைகள் - ................ ................ ................ ................ ................
................ ................ ................

## 13.4 பெயராகவும் வினையாகவும் வரும் சொற்களைத் தெரிந்து கோடிடுவோம்.

உதாரணம் : மறை → பெயர் - வேதம்
→ வினை - மறைத்தல்

| | | | |
|---|---|---|---|
| அடி | படி | குடி | கல் |
| வாழை | நாய் | வீடு | உடை |
| பாய் | அலை | இரை | சட்டி |
| நாடு | கரை | மடி | அறை |
| நகை | பார் | அணி | ஓடு |

## 13.5 கீழ்வரும் சொற்களை பெயராகவும் வினையாகவும் கொண்டு வாக்கியங்கள் அமைப்போம்.

உதாரணம் : உடை → பெயர் - நான் உடை அணிந்தேன்.
→ வினை - புதிய பென்சில் உடைந்துவிட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1. ஆடு | 2. இரை | 3. முயல் | 4. முடி |
| 5. படி | 6. ஒளி | 7. குலை | 8. மறை |
| 9. ஓடு | 10. அடி | 11. பார் | 12. கரை |

## 13.6 வாக்கியத்திலுள்ள எழுவாய் பயனிலைத் தொடர்புகள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (×) எனவும் அடையாளமிடுவோம்.

1. ஆசிரியர் கூறிய அறிவுரைகள் மனதில் பதிந்துள்ளன. ( )
2. எறும்பு தேவையான உணவுகளைச் சேகரித்து வைத்தன. ( )
3. பருத்தி நூல் பஞ்சிலிருந்து எடுக்கப்படுகின்றது. ( )
4. மழைத்துளியும் சூரிய ஒளியும் வானவில் தோன்றுவதற்கு அவசியமாகின்றன. ( )
5. வானில் பறவைகள் அழகாகப் பறந்து சென்றன. ( )

# 14 கிராமிய விளையாட்டுப் பாடல்கள்



இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் ஒலிபரப்பான 'பழைமையும் புதுமையும்' எனும் நிகழ்ச்சித் தொடரில் 'கிராமிய விளையாட்டுப் பாடல்கள்' பற்றி மூத்த கிராமியக் கலைஞருடனான நேர்காணல் இடம்பெற்றது.
(நிகழ்ச்சித் தொகுப்பாளர் சி. சுதன், மூத்த கிராமியக் கலைஞர் சி. செல்லையா)

**சுதன்** : வணக்கம் ஐயா! மூத்த கிராமியக் கலைஞரான உங்களது அனுபவ அறிவு விசாலமானது. அந்த வகையில் கிராமங்களில் விளையாடும்போது பாடப்படும் 'கிராமிய விளையாட்டுப் பாடல்கள்' பற்றிய உங்களது அனுபவங்களை எமது வானொலி நேயர்களுக்காகக் கூறுவீர்களா?

**செல்லையா** : வணக்கம் நிகழ்ச்சித் தொகுப்பாளர் அவர்களே! எனது வயது எண்பது. நான் சிறுவனாக இருந்த காலத்தில் அதிகமான ஓய்வு நேரங்களை நண்பர்களுடன் ஆடிப்பாடி, விளையாடி மகிழ்ந்தேன். ஆனால், இன்றைய சிறுவர்கள்

அப்படிப் பொழுதைக் கழிப்பதில்லை. அவர்கள் பொழுதை வேறு விதமாகக் கழிக்கின்றார்கள். நாம் முன்பு விளையாடிய விளையாட்டுக்களும் பாடிய பாடல்களும் இன்று வழக்கிழந்து விட்டன.

**சுதன்** : இந்நிலைமைக்கு என்ன காரணம் ஐயா?



**செல்லையா** : தம்பி! இந்நிலைமைக்குக் காரணம், இன்றைய சிறுவர்கள் தமது பொழுதைப் போக்குவதற்கு கிரிக்கெட், உதைபந்தாட்டம், வொலிபோல் போன்றவற்றை விரும்பிப்பார்ப்பதாலும் விளையாடுவதாலுமாகும்.

**சுதன்** : ஐயா! முன்னைய பொழுதுபோக்குகள் தற்போதைய பொழுது போக்குகளிலிருந்து எவ்வகையில் வேறுபடு கின்றன?

**செல்லையா** : முன்னைய பொழுதுபோக்குகள், விளையாட்டுக்கள் என்பன மனித வாழ்க்கையுடனும் பண்பாட்டுடனும் இணைந்ததாக இருந்தன. ஆனால் தற்காலப்பொழுது போக்குகளில் அதிகமானவை அர்த்தமற்றவையாகக் காணப்படுகின்றன.

**சுதன்** : ஐயா! முன்பு பெருவழக்கத்தில் இருந்த கிராமிய விளையாட்டுப் பாடல்கள் பற்றிக் கூறுவீர்களா?

**செல்லையா** : சரி தம்பி! கூறுகிறேன். உச்சரிப்பு விளையாட்டு, இவடம் எவடம், கீச்சு மாச்சு தம்பலம், குலை குலையாய்

முந்திரிக்காய், கிட்டிப்புள், கிள்ளுப் பிராண்டி, ஒளிந்து பிடித்து விளையாடுதல், கெந்தியடித்தல் போன்ற விளையாட்டுக்கள் கிராமங்களில் விளையாடப்படும் போது, பிரதேசங்களுக்கே உரிய சமூகப் பண்பாட்டுக் கலாசாரத் தன்மைகளுக்கு ஏற்ப சில மாற்றங்களுடன் விளையாடப்பட்டன.

**சுதன்** : ஐயா, இவ்வாறான விளையாட்டுக்களில் சிலவற்றைப் பற்றி விளக்கமாகக் கூறுவீர்களா?

**செல்லையா** : ''கீச்சு மாச்சுத் தம்பலம்'' என்ற விளையாட்டில் ஒளித்து வைத்த பொருளைத் தேடுவர். இவ்விளையாட்டில் மணல் வரம்பிற்குள் சிறிய பொருள் ஒன்றை ஒருவர் ஒளித்து வைக்க, மற்றையவர் அதை மணல் வரம்பினுள் தேடி எடுப்பதாக அமைந்துள்ளது. இத்தேடல் செயற்பாட்டின் போது

**கீச்சு மாச்சுத் தம்பலம்**
**கீயா மாயா தம்பலம்**
**மாச்சு மாச்சுத் தம்பலம்**
**மாயா மாயா தம்பலம்**

என்று பாடியபடியே விளையாடுவர். இவ்விளையாட்டு ஒரு இடத்தில் இருந்து விளையாடும் விளையாட்டாகும். பொருளைத் தேடிக் கண்டுபிடிக்கா விட்டால் மீண்டும் அவரே தேடுவார். பொருளைக் கண்டு பிடித்தால் மற்றையவர் மாறி விளையாடுவார்.

**சுதன்** : சிறுவர்கள் உவகையுடன் பாடி விளையாடும் மேலும் சில விளையாட்டுக்கள் பற்றிக் கூறுவீர்களா?

**செல்லையா** : சுற்றி நடந்து திரிந்து விளையாடும் விளையாட்டாக அமைந்தது 'இவடம் எவடம்' எனும் விளையாட்டாகும். இவ்விளையாட்டில் ஒருவர் இரண்டு கைகளிலும் மண்ணை வைத்து அதில் ஈர்க்கு அல்லது சிறுகுச்சி

ஒன்றினைக் குறியாக வைப்பார். மண்ணை வைத்திருப்பவரின் கண்ணை வேறொருவர் பொத்திப் பிடித்தபடி வெவ்வேறு திசைகளிலும் சுற்றியபடி நடப்பர். அப்போது மண்கொண்டு செல்பவர். 'இவடம் எவடம்' என்று கேட்க, சுற்றி நிற்போர் 'புங்கடி புளியடி எங்கடி போறாய்?' என்று கூறிச் செல்வர். பின்னர் மண்ணை ஓர் இடத்தில் கொட்டச் செய்வர். தொடர்ந்தும் நடந்து வேறோர் இடத்தில் நிறுத்தி கண்களைத் திறந்து கொட்டிய மண்ணைத் தேடவிடுவர். இதைச் சிறுவர்கள் மாறி மாறி விளையாடி மகிழ்வர்.

அடுத்ததாக, பாடல் பாடி ஓடி விளையாடும் விளையாட்டான 'கிட்டிப்புள்' பற்றிக் கூறுகிறேன். இவ்விளையாட்டில் இரண்டு தடிகளைப் பயன்படுத்துவர். கிட்டி என்பது ஒரு முழம் நீளமான தடி. இதன் ஒரு முனை கூராக்கப் பட்டிருக்கும். மற்றையது புள். இது கிட்டியின் மூன்றில் ஒருபங்கு நீளமுடையது. இதன் இருமுனைகளும் கூராக்கப் பட்டிருக்கும். இவ்விளையாட்டினை இவ்விரண்டு அணிகளாகப் பிரிந்து விளையாடுவர். கிட்டியை அடித்தவர் பாடலைப் பாடியபடி ஓடுவார்.





இப்பாடல் மூச்சு விடாமல் பாடப்படும். அப்பாடலைக் கூறுகிறேன் கேளுங்கள்.

ஆலையிலே சோலையிலே
ஆலங்காடிச் சந்தையிலே
கிட்டிப்புள்ளும் பம்பரமும்
கிறுகியடிக்கப் பாலாறு
பாலாறு பாலாறு பாலாறு ...

ஆத்துக் கட்டு அலம்பக் கட்டு
அவிட்டுக் கட்டு இறுக்கிக் கட்டு
இறுக்கி இறுக்கிக் கட்டு ...

கீழாறோலை மேலாறோலை
எண்ணிப் பார்த்தால் பதினாறோலை
கிட்டிப் புள்ளும் பம்பரமும்
கிறுகியடிக்கப் பாலாறு பாலாறு...

என்ற பாடலைப் பாடியபடி ஓடுவர். பாட்டின் கடைசிச் சொல்லை மீண்டும் மீண்டும் பாடியபடி ஓடுவதாக விளையாட்டமையும்.

**சுதன்** : சரி ஐயா, இவ்வாறாகப் பாடி விளையாடுவதால் கிடைக்கும் பயன்கள் எவை எனக் கூற முடியுமா?

**செல்லையா** : ஆம், இவ்விளையாட்டுக்கள் மூலம் உடல் உறுதியும் அறிவுத்திறனும், மகிழ்வும், கூட்டுறவும் ஏற்படுவது சிறப்பானதாகும்.

**சுதன்** : பாடல் சார்ந்த சில கிராமிய விளையாட்டுக்கள் பற்றி இன்று விளக்கமாகக் கூறினீர்கள். அடுத்த வார ஒலிபரப் பில் நேயர்களுக்கு மேலும் பல தகவல்களைத் தருவீர்கள் என எதிர்பார்க்கிறோம். நன்றி ஐயா, வணக்கம்.

**செல்லையா** : வணக்கம்.

**அகராதிப் பயன்பாடு**




அனுபவம் -
நிலைமை -
பண்பாடு -
வரம்பு -
தேடல் -
திசை -

**பயிற்சி**

## 14.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. இந்நேர்காணலை தயாரித்த நிறுவனம் எது?
2. இன்று கிராமிய விளையாட்டுக்கள் கைவிடப்பட்டமைக்கான காரணம் என்ன?
3. இங்கு கூறப்பட்ட கிராமிய விளையாட்டுக்கள் ஐந்தினை எழுதுக.
4. கிராமிய விளையாட்டுக்களின் மூலம் கிடைக்கும் பயன்கள் எவை?
5. உங்கள் பிரதேசத்தில் விளையாடப்படும் மேலே கூறப்பட்டவை தவிர்ந்த வேறு கிராமிய விளையாட்டுக்களைத் தேடியறிந்து எழுதுக.

## 14.2 பின்வரும் சொற்களுக்குரிய ஒத்தகருத்துச் சொற்களை பாடத்திலிருந்து தெரிந்தெடுத்து எழுதுவோம்.

i. உவகை - ......................  ii. தொன்மை - ......................
iii. நவீனம் - ......................  iv. கீதம் - ......................
v. ஞானம் - ......................  vi. சந்தை - ......................

**மரபுத்தொடர்**

நேர்ப்பொருளை உணர்த்தாமல் குறிப்புப் பொருளை உணர்த்துவதற்காகத் தொன்று தொட்டு வழங்கிவரும் தொடர்கள் மரபுத்தொடர்கள் எனப்படும்.

உதாரணம்:

1. கண்ணாயிருத்தல் - சிதறாத கவனத்துடன் இருத்தல்.
   குழந்தை தூங்கும்போது, அதன் தாய் கண்ணாயிருந்து கவனமாகப் பார்த்துக்கொள்வாள்.
2. அலைக்கழித்தல் - அலைத்து வருத்துதல்.
   வாங்கிய கடனை இன்று தருகிறேன், நாளை தருகிறேன் எனக் கடன் கொடுத்தவனை அலைக்கழித்தான்.

## 14.3 பின்வரும் கருத்துக்களை உணர்த்தும் மரபுத்தொடரின் இலக்கங்களைக் கோடிட்ட இடங்களில் எழுதுவோம்.

1. **கைகூடுதல்**  2. **வாகை சூடுதல்**  3. **நட்டாற்றில் விடல்**
4. **வாய்காட்டுதல்**  5. **பூசி மெழுகுதல்**

1. எதிர்த்துப் பேசுதல் ..................  2. நிறைவடைதல் ........................
3. வெற்றியடைதல் ..................  4. குற்றத்தை மறைத்தல் ................
5. ஆபத்தில் கைவிடுதல் .............

## அடைமொழி

சொல்லொன்றைச் சிறப்பித்து அல்லது விபரித்து வரும் சொல் அடைமொழி எனப்படும்.

உதாரணம்:

"***பெரிய*** கோழி ***சின்ன*** எள்ளைக் ***கொத்தித்*** தின்றது."

| | | |
|---|---|---|
| எழுவாய் | - | கோழி |
| பயனிலை | - | தின்றது |
| செயப்படுபொருள் | - | எள்ளை |
| எழுவாய் அடைமொழி | - | பெரிய |
| பயனிலை அடைமொழி | - | கொத்தி |
| செயப்படுபொருள் அடைமொழி | - | சின்ன |

### 14.4 பின்வரும் வாக்கியங்களில் உள்ள அடைமொழிகளை இனங்கண்டு எழுதுவோம்.

1. வட்ட நிலா பிரகாசமாகக் காட்சியளித்தது.
   எழுவாய் அடைமொழி ..................................................
2. சிறுமி இனிய பாடலைப் பாடினாள்.
   செயப்படுபொருள் அடைமொழி ..................................................
3. சிறுவர்கள் காலை உணவை சுவைத்து உண்டனர்.
   பயனிலை அடைமொழி ..................................................
4. பெரிய அக்கா அழகிய உடையைத் தைத்தாள்.
   செயப்படுபொருள் அடைமொழி ..................................................
5. சிறிய அணில் பழத்தைக் கொறித்துத் தின்றது.
   பயனிலை அடைமொழி ..................................................

## 14.5 இடைவெளிக்குப் பொருத்தமான அடைமொழிச் சொற்களை எழுதுவோம்.

1. ................. மயில் ................. தோகையை ................. ஆடியது.
2. ................. பூனை ................. பாலை ..................... குடித்தது.
3. ................. சிறுவன் ................. தமிழை ................... கற்றான்.
4. ................. தங்கை ................. அப்பிளை................ உண்டாள்.
5. ................. தேனீக்கள் .................தேனை ................. குடித்தன.

## 14.6 தரப்பட்ட கூற்றை அடிப்படையாகக் கொண்டு விடை எழுதுவோம்.

பாபுவின் வகுப்பிலுள்ள அனைவரும் பாட்டுப் பாடுவார்கள். அவர்களுள் சீதை நன்றாகப் பாடுவாள்.

இந்தத் தகவலுக்கு அமைய கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் *(✓)* எனவும் பிழையாயின் *(✗)* எனவும், கூறமுடியாதாயின் *(0)* எனவும் அடையாளமிடுவோம்.

1. பாபு பாட்டுப் பாடுவான். ( )
2. சீதை நன்றாகச் கதை கூறுவாள். ( )
3. பாபுவின் வகுப்பிலுள்ள அனைவரும் ஆண்கள் ஆவர். ( )
4. சீதையை விட பாபு நன்றாகப் பாடுவான். ( )
5. பாபுவின் வகுப்பில் சீதை கல்வி கற்கிறாள். ( )
6. பாபுவும் சீதையும் இணைபிரியா நண்பர்கள். ( )

# 15 தொல்பொருள்களைப் பேணுவோம்



நாவலர் வித்தியாலயத்தைச் சேர்ந்த தரம் ஐந்து மாணவர்களும் வகுப்பாசிரியரும் களப்பயணம் ஒன்றை மேற்கொண்டனர். பொலன்னறுவையிலுள்ள வரலாற்று முக்கியத்துவம்மிக்க இடங்களைப் பார்வையிடுவதே அவர்களின் நோக்கமாகும். முதலில், அங்குள்ள சிவன் கோயிலின் வாயிலை அடைந்தனர். கடுமையான வெயில் அனைவருக்கும் தாகம் எடுத்தது. குமார் அருகில் இருந்த வியாபாரியிடம் இளநீர் வாங்கிப் பருகினான்.

**கபிலன்** : குமார் எனக்கும் இளநீர் தருவாயா?

**குமார்** : வா! இருவரும் சேர்ந்து குடிப்போம். இளநீரை எவ்வாறு உடைப்பது? கபிலனிடம் கேட்டான் குமார்.

**காந்தன்** : இதோ இந்த வாயிற் கல்லில் அடித்து உடைத்து உண்ணலாம். (குமார் வாயிற் கல்லில் இளநீரை அடித்து உடைக்கத் தயாரானான்)

**ஆசிரியர்** : நிறுத்து குமார்! என்ன காரியம் செய்யப்போகின்றாய்? இந்த ஆலய வாயிற்கல் எமது தொல்பொருளாகும். இவற்றை நாம் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

**குமார்** : என்னை மன்னியுங்கள்; தொல்பொருள்கள் என்றால் என்ன என்று எமக்கு விளக்கமாகக் கூறுவீர்களா?

**ஆசிரியர்** : புராதன மக்களால் கட்டப்பட்ட கட்டடங்கள், வணக்கத் தலங்கள், சிற்பங்கள், உபகரணங்கள், சின்னங்கள் போன்ற தொன்மையான பொருள்களும் அகழ்வாராய்ச்சியின் போது கண்டெடுக்கப்படும் சிலைகள், நாணயங்கள், கல்வெட்டுகள், சிதைவுகள் என்பனவும் தொல்பொருள் களாகும். இவற்றில் பல மண்ணில் புதைந்தும் நீரில் அமிழ்ந்தும் காணப்படுகின்றன.

**அமுதா** : ஏன் நாம் இவற்றைப் பாதுகாக்க வேண்டும்?

**ஆசிரியர்** : இவை எமது தேசிய சொத்துக்கள். ஓர் இனத்தின் அடையாளம். எமது பண்டைய காலச் சிறப்புக்களை எதிர்கால சந்ததியினர் அறிந்து கொள்ளும் விதமாக இவற்றைப் பேணிப் பாதுகாக்க வேண்டும்.

**காந்தன்** : தொல்பொருள்கள் எவ்வாறு அழிவடைகின்றன?

**ஆசிரியர்** : மழை, வெயில், இயற்கை அனர்த்தம் போன்ற காரணிகளால் அழிவடைகின்றன. மேலும் யுத்தத்தாலும் மனித செயற் பாடுகளாலும் அதிகம் சேதப்படுத்தப்படுகின்றன.

**ரூபிணி** : மனிதர்களால் சேதமாக்கப்படுகின்றதா? சற்று விளக்கமாகக் கூறுங்களேன்.

**ஆசிரியர்** : ஆம், விளக்கமாகக் கூறுகிறேன் அனைவரும் கேளுங்கள். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப்

பார்வையிட வரும் சுற்றுலாப் பயணிகள் சிலர் கலைப் படைப்புகளை உடைத்தல், கிறுக்குதல், திருடுதல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். இதனால் எமது தேசத்தின் பெறுமதிமிக்க சொத்துக்கள் சேதமடைகின்றன.

**குமார்** : அப்படியென்றால் நாம் இவற்றை எவ்வாறு பாதுகாப்பது?

**ஆசிரியர்** : புராதன கட்டடங்கள், சிற்பங்களைச் சேதமாக்கக் கூடாது. அவ்விடங்களில் காணப்படும் விதிமுறைகளைக் கடைப் பிடிக்க வேண்டும். இதை மீறினால் நாம் தண்டனைக்கு உள்ளாவோம்.

**அமுதா** : ஆமாம்! இங்கே பாருங்கள். இவ்விடத்தில் ‘‘சிற்பங்களைத் தொடவேண்டாம்’’ என்ற அறிவித்தல் எழுதப்பட்டுள்ளது. இவற்றைப் பாதுகாப்பவர்கள் யார்?

**ஆசிரியர்** : இவை தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களத்தாலும், பாதுகாப்புப்படையாலும் பாதுகாக்கப்படுகின்றன. இந்த நாட்டு மக்களான நாமும் இவற்றைப் பாதுகாக்க வேண்டும்.

**அஸ்வர்** : உண்மைதான்! நாம் இந்நாட்டின் பிரசைகள். இவற்றைப் பேணிப் பாதுகாப்பது எமது தலையாய கடமையாகும்.

**ஆசிரியர்** : வாருங்கள், நாம் ஏனைய இடங்களையும் பார்வையிடு வோம். (மகா பராக்கிரமபாகு மன்னனின் அரச சபை, கல்விகாரையின் புத்தர் சிலை, தாமரைத் தடாகம் போன்ற இடங்களைப் பார்வையிட்ட அனைவரும் பராக்கிரமபாகு சமுத்திரத்திற்கு அருகிலுள்ள ஓரிடத்தில் வந்து அமர்ந்தனர்.)

**அகிலா** : இன்று நாம் பல விடயங்களை அறிந்து கொண்டோம். அவற்றின் பெறுமதியையும் அறிந்து கொண்டோம். இவற்றைக் கேட்பதற்கு எமக்குப் பெருமையாக இருக்கிறது. இன்று தொடக்கம் நாம் அனைவரும் எமது நாட்டின் ‘‘தொல்பொருள்களைப் பேணிப் பாதுகாப்போம்’’ என உறுதி பூணுவோம்.

**ஆசிரியர்** : மிக்க மகிழ்ச்சி.

(ஆசிரியர் எல்லா மாணவர்களுக்கும் மிட்டாய் வாங்கிக் கொடுத்தார். அனைவரும் மன நிறைவுடன் தமது பாடசாலையை நோக்கிப் புறப்பட்டனர்.)

**அகராதிப் பயன்பாடு**




காரியம் -
சிற்பம் -
ஆராய்ச்சி -
தடாகம் -
உறுதி -
தொல்பொருள் -

**பயிற்சி**

### 15.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. மாணவர்கள் களப்பயணம் சென்ற இடம் எது?
2. தொல்பொருள்கள் மூன்று தருக.
3. தொல்பொருள்களை ஏன் பாதுகாக்க வேண்டும்?
4. தொல்பொருள்களைப் பாதுகாப்பது எப்படி?
5. உமது பிரதேசத்தில் காணப்படும் தொல்பொருள்கள் எவை?

### 15.2 பின்வரும் சொற்களைக் கொண்டு வாக்கியம் எழுதுவோம்.

| | | | |
|---|---|---|---|
| i. தாகம் | - ____________ | ii. புராதனம் | - ____________ |
| iii. தண்டனை | - ____________ | iv. வாரிசுகள் | - ____________ |
| v. கடமை | - ____________ | vi. புத்தர் சிலை | - ____________ |

## நிறுத்தக்குறிகள்

படிக்கும்பொழுது, பொருள் உணர்வுக்கு ஏற்ப, நிறுத்த வேண்டிய இடங்களில் நிறுத்தியும் சேர்க்க வேண்டிய இடங்களில் சேர்த்தும் வியப்பு, அச்சம், வினா முதலான உணர்வுகள் வெளிப்படுத்த வேண்டிய இடங்களில் அவற்றை வெளிப்படுத்திப் வாசிக்கச் சில குறியீடுகளைக் கையாளுகிறோம். அவற்றையே நிறுத்தக்குறிகள் என அழைக்கின்றோம்.

1. முற்றுப்புள்ளி (.) உதாரணம்: நான் பாடல் பாடினேன்.
2. காற்புள்ளி (,) உதாரணம்: சனி, ஞாயிறு வார இறுதி நாட்களாகும்.
3. வினாக்குறி (?) உதாரணம்: நாங்களும் விளையாடுவோமா?
4. வியப்புக்குறி (!) உதாரணம்: ஆகா! இது எவ்வளவு பெரிய நீர்வீழ்ச்சி!
5. மேற்கோள்குறி (“ ”) உதாரணம்: “சிற்பங்களைத் தொட வேண்டாம்” என்று கூறினார்.

## 15.3 பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுவோம்.

1. இலங்கையின் பழைமையான நகரங்களுள் அநுராதபுரமும் ஒன்றாகும்
2. நம் நாட்டு விடுதலைக்காகப் பாடுபட்டவர்கள் யாவர்
3. திருக்குறளை உலகப் பொதுமறை என்று நாம் பாராட்டுகிறோம்
4. குழந்தைகளே இங்கே வாருங்கள்
5. தோட்டத்தில் சிவப்பு நீலம் மஞ்சள் வெள்ளை நிற மலர்கள் காணப்படுகின்றன
6. கல்விக்கு அழகு கசடற மொழிதல் என்றனர் எம் முன்னோர்கள்
7. நீ இங்கே வா என்று ஆசிரியர் அழைத்தார்
8. சூரியன் சந்திரன் அக்கினி என்பன முச்சுடர்களாகும்
9. ஆகா எவ்வளவு அழகான பூங்கா
10. நேத்திரம் என்பதன் பொருள் யாது




இலவசப் பாடநூல்

## 15.4 வாக்கியங்களில் வரவேண்டிய "நிறுத்தக்குறிகளை" உரிய இடத்தில் இடுவோம்.

இன்று ஒரு மிருகத்தைக் கூட வேட்டையாட முடியவில்லையே யார் முகத்தில் விழித்தேன் என அரசர் யோசித்தார் உடனே காலையில் முதல் முதலாகப் பார்த்த முல்லாவின் முகம் நினைவுக்கு வந்தது அரசர் காவலாளர்களை அழைத்தார் முல்லாவைத் தேடிப்பிடிக்கக் கட்டளை இட்டார் காவலாளர்கள் முல்லாவைக் கண்டு பிடித்தனர் அரசர் முன் நிறுத்தினர் முல்லாவைக் கண்ட அரசர் கோபம் கொண்டார் முல்லாவைப் பார்த்து அறிவு கெட்டவனே காலை உன் முகத்திலேயே விழித்தேன் ஒரு மிருகத்தைக் கூட வேட்டையாட முடியவில்லை நீ ஒரு இராசி இல்லாதவன் என்று கோபத்துடன் கத்தினார் காவலர்களே முல்லாவிற்கு நூறு சவுக்கடி கொடுங்கள் எனக் கட்டளை இட்டார் உடனே முல்லா மன்னா நீங்கள் என் முகத்தில் விழித்தீர்கள் உங்களுக்கு வேட்டை கிடைக்கவில்லை நான் உங்கள் முகத்தில் விழித்தேன் எனக்கு நூறு சவுக்கடிகள் கிடைக்கப்போகிறது இதில் யார் முகம் ராசி இல்லாதது என்று யோசித்துத் தீர்ப்பு வழங்குங்கள் என்று கூறி நகைத்தார் முல்லா அரசர் திகைத்தார்

## 15.5

### (அ) கீழே தடித்த எழுத்தில் காணப்படும் மரபுத் தொடர்களின் கருத்தை எழுதுவோம்.

1. தாயின் மடியில் குழந்தை **கண் வளர்ந்தது.**
2. பாலன் கல்வி கற்பதற்கு அவனது நண்பர்கள் **தோள் கொடுத்தனர்.**
3. மாணவனின் சாதனையைக் கேள்வியுற்ற ஆசிரியர் **உச்சி குளிர்ந்தார்.**
4. நாம் மற்றவர்களின் மனதைப் **புண்படுத்தல்** ஆகாது.
5. அரசன் அயல் நாட்டு மன்னனை **அறைகூவி** அழைத்தான்.
6. முரளி தனது நண்பனுடன் **ஒளிவுமறைவு** இன்றிப் பழகினான்.
7. செந்தில் **கண்மூடித்தனமாக** வாகனம் செலுத்தினான்.
8. கண்ணகி தன் கணவன் கள்வன் அல்ல என்று **ஆணித்தரமாகக்** கூறினாள்.

**(ஆ) கீழே தரப்பட்டுள்ள மரபுத்தொடர்களைப் பயன்படுத்தி வாக்கியங்களை எழுதுவோம்.**

உதாரணம்: எதிர் நீச்சல் - எதிர்த்துப் போராடுதல்.

வாழ்க்கையில் எத்தனை தோல்விகள் வந்தாலும், மனந்தளராமல் எதிர் நீச்சல் போட்டு வெற்றியடைய வேண்டும்.

1. காது குத்துதல். 2. வயிற்றெரிச்சல். 3. கடன் கழித்தல்.

4. கண் திறத்தல். 5. அவசரக் குடுக்கை. 6. அள்ளிக் குவித்தல்.

## 15.6

**(அ) பின்வரும் ஒருமை வாக்கியங்களை பன்மை வாக்கியங் களாக மாற்றி எழுதுவோம்.**

உதாரணம்: கற்ற இளைஞன் விவசாயம் செய்ய முன்வர வேண்டும்.
கற்ற இளைஞர்கள் விவசாயம் செய்ய முன்வர வேண்டும்

i. மீன் நீரில் வாழும்.

ii. குரங்கு மரத்திற்கு மரம் தாவித் திரிந்தது.

iii. மரத்தினது வேர் நீரை நாடிச் சென்றது.

iv. காவலன் அவனைக் காட்டிலே கண்டுபிடித்தான்.

v. பசு பச்சைப் புல்லைத் தின்று வெள்ளைப் பாலைப் தருகிறது.

**(ஆ) பின்வரும் வாக்கியங்களை ஒருமை வாக்கியங்களாக மாற்றி எழுதுவோம்.**

உதாரணம்: எங்களுக்கு நல்ல காலம் பிறக்கும்.
எனக்கு நல்ல காலம் பிறக்கும்.

i. பிள்ளைகள் மர நிழலில் இருந்து விளையாடினார்கள்.


ii. நாங்கள் பானம் அருந்த வந்தோம்.

iii. மாலுமிகள் கப்பலைச் செலுத்தினார்கள்.

iv. சிறுவர்கள் தந்தை குறிப்பிட்ட இடத்திலேயே நின்றார்கள்.


v. மரத்திலிருந்து விழுந்த பழங்கள் நிலத்திலே கிடந்தன.

## 15.7 பின்வரும் பந்தியில் காணப்படும் இடைவெளிகளுக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து எழுதுவோம்.




தமிழில் சிலப்பதிகாரம், மணிமேகலை .............................. போன்ற இனிய .............................. உள்ளன. இவை மிகவும் பழைமையானவை. படிக்கும் போது உள்ளத்தை உருக்கும் .............................. உடையவை. தற்காலத்திலேயே ............................, கவிமணி போன்ற கவிஞர்கள் இனிய எளிய நடையில் பல நூல்களை இயற்றியுள்ளனர்.

## 15.8 படத்திலுள்ள சொற்களை இனங்கண்டு எழுதுவோம்.



# 16 தவளைக் கூத்து



டும் டும் மழை மழை டும் டும்
கும் கும் தவளைகள் கும் கும்

சல்லரி நான்கு மத்தள மேழு
தவிலும் சேர்ந்தே டும் டும்
மெல்லென வீங்கும் புல்லாங்குழலும்
வீணையும் சேர்ந்தே கும் கும் கும்

குப்பை மிதந்திடும் பள்ளத்தி லேயொரு
கூத்து நடக்குது தெய் தெய் தெய்
செப்பு நெருஞ்சியும் வட்டத் தகரையும்
சீலை விரிக்குது மெய் மெய் மெய்

பச்சைத் தேரை பிடில் வாசிக்க
பனைமரத் தேரை குழலூத
மொட்டைத் தவளை நாட்டிய மாட
மோசங்கு கேட்குது ஞொய் ஞொய் ஞொய்

கொட்டும் மழையும் தாளம் போடக்
குளிரும் காற்றும் கவிபாட
பொட்டல் தரையில் தவளைகள் சேர்ந்தே
போடுது கூத்து தெய் தெய் தெய்

-திமிலைத்துமிலன்

**அகராதிப் பயன்பாடு**




பள்ளம் -
நாட்டியம் -
குளிர் -
கவி -
தரை -
கூத்து -

பயிற்சி

## 16.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. பாடலில் கூறப்படுகின்ற இசைக்கருவிகள் எவை?
2. கூத்து நடந்த இடத்தில் சீலை விரித்தவை எவை?
3. பாடலிலுள்ள அடைமொழிச் சொற்கள் இரண்டு எழுதுக.
4. ''பள்ளத்திலேயொரு'' எனும் சொல்லைப் பிரித்தெழுதுக.
5. இப்பாடலில் நீர் இரசித்த காட்சியை ஆறு வாக்கியங்களில் எழுதுக.



## 16.2 இடைவெளிக்கு பொருத்தமான சொல்லைப் பாடலில் இருந்து தெரிந்தெடுத்து எழுதுவோம்.

i. பிடில் வாசித்தது .............. ii. குழல் ஊதியது ..............

iii. நாட்டியம் ஆடியது .............. iv. தாளம் போட்டது ..............

v. கவி பாடியது ..............

### உவமைத்தொடர்கள்

ஒரு பொருளை மற்றொரு பொருளோடு ஒப்புமைப்படுத்திக் கூறுவது உவமை எனப்படும். அதாவது தெரியாத ஒன்றைத் தெரிந்த ஒன்றோடு ஒப்புமைப்படுத்துவதாகும். உவமையணியில் உள்ள உவமானமும் உவமையுருபும் இணைந்து தொடராக அமையும் போது அதனை உவமைத்தொடர் என்போம்.

**உதாரணம்:**

1. ***ஒரு தாய் வயிற்று மக்களைப் போல*** இராமனும் குகனும் அன்பால் ஒன்றுபட்டனர்.
2. இராமன் காட்டுக்குச் சென்றதை அறிந்த தசரதன் ***அடியற்ற மரம் போல*** மயங்கி வீழ்ந்தார்.

## சில உவமைத் தொடர்கள்

1. அத்திபூத்தாற் போல - மிகவும் அரிதாக.
2. ஓட்டைக் குடத்தில் நீர் வார்த்தது போல - பயனில்லாமை.
3. கல்லில் நார் உரிப்பது போல - முடியாமை.
4. கீரியும் பாம்பும் போல - பகைமை.
5. தாமரை இலையில் நீர் போல - பற்றற்ற தன்மை.
6. நீர்மேல் எழுத்துப் போல - நிலையில்லாமை.
7. பசுத்தோல் போர்த்த புலிபோல - பயன்கருதி மாறுவேடம்.
9. சூரியனைக் கண்ட பனிபோல - உடன் மறைதல்.
10.வேலியே பயிரை மேய்ந்தது போல - பாதுகாக்க வேண்டியவரே அழித்தல்.

## 16.3 பின்வரும் உவமைத் தொடர்களுக்குரிய கருத்தைத் தெரிந்து எழுதுவோம்.

மறைவான தன்மை | வழிகாட்டுதல் | பிரிக்கமுடியாத உறவு | வேகமாகப் பரவுதல் | நிரந்தரமாய் நினைவிலிருத்தல்.

1. நகமும் சதையும் போல :..................................................................
2. இலை மறை காய் போல :..................................................................
3. காட்டுத் தீ போல :..................................................................
4. கலங்கரை விளக்குப் போல :..................................................................
5. பசுமரத்தாணி போல :..................................................................

## 16.4 ஒலி வேறுபாட்டினை அறிந்து வாக்கியங்களை அமைப்போம்.

**உதாரணம்:** அறம் - ''அறம் செய விரும்பு'' என்றார் ஔவையார்.
அரம் - பாலன் அரம் கொண்டு வாளைக் கூராக்கினான்.

1. கனி - ................................... கணி - ...................................
2. ஆலம் - ................................... ஆழம் - ...................................
3. அரி - ................................... அறி - ...................................
4. வலம் - ................................... வளம் - ...................................
5. மரம் - ................................... மறம் - ...................................
6. பானம் - ................................... பாணம் - ...................................
7. கிலி - ................................... கிழி - ...................................

## 16.5 பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி நடுவில் வரும் சொல்லை எழுதுவோம்.

1. சிறுவன், குழந்தை, வாலிபன் ____________________
2. வாக்கியம், சொல், எழுத்து ____________________
3. வைகாசி, சித்திரை, பங்குனி ____________________
4. மா, நெல், அரிசி ____________________
5. மாகாணம், நாடு, மாவட்டம் ____________________

### *செயற்பாடு* 16.1

பின்வரும் சொற்களைப் பலமுறை உச்சரித்துக் காட்டுக.அவை ஒவ்வொன்றின் பொருளையும் கூறுக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. பனம் | - | பணம் | 2. கன்னி | - | கண்ணி |
| 3. கனம் | - | கணம் | 4. உன் | - | உண் |
| 5. பனி | - | பணி | 6. தினை | - | திணை |
| 7. கனை | - | கணை | 8. மனம் | - | மணம் |

# 17 மான்குட்டியும் சிங்கமும்



சூரியனின் பொன்மயமான ஒளிக்கதிர்கள் பிரகாசித்துக் கொண்டிருந் தன. அதனுடைய வெளிச்சம் மெல்ல மெல்ல அடிவானத்திலிருந்து எழுந்தது. அதுதான் எல்லா மிருகங்களையும் நித்திரை விட்டெழும்பச் செய்யும் அறிவித்தல். அன்று மிருகங்களும் அதன்படி நித்திரை விட்டெழுந்து காலைச் சூரியனை வரவேற்றன. ஒரு புதிய நாளும் பிறந்தது. அந்தப் புதிய நாளுடன் மிருகங்களும் அன்றைய வாழ்க்கையை ஆரம்பித்தன.

அது ஓர் அடர்ந்த காடு. அந்தக் காட்டின் பற்றைச் செடியின் கீழ் மான் குட்டி நித்திரை செய்துகொண்டு இருந்தது. அந்த மான்குட்டி அப்போது தான் மெல்லப் புரண்டு, தனது கண்களைத் திறந்து பார்த்தது. அது தன் கால்களை ஒருமுறை நீட்டி எழுந்தது. அதிகாலை வேளையின் சூடான புத்தம் புதிய காற்றை உள் வாங்கியது. பின்னர், காட்டிலே வழமைபோல் ஓடி உலாவப் புறப்பட்டது.

அந்தக் காட்டில் பல மரங்களும் செடிகளும் நிறைந்து நின்றன. அவை நிழலையும் குளிர்ச்சியையும் தந்தன. அந்த இயற்கை அழகை மான் குட்டி நன்றாக இரசித்தது. மரங்களிலும் செடிகளிலும் மஞ்சள், சிவப்பு, வெள்ளை போன்ற பல நிறப் பூக்கள் மலர்ந்திருந்தன. அவை சூரிய வெளிச்சத்தில் மிக அழகாகக் காணப்பட்டன. அப்பூக்களிலிருந்து கமகம என்று மணம் வீசியது. அந்த வாசனை எல்லோரையும் களிப் பூட்டியது. அந்த வேளையில் ஒரு சிங்கத்தின் கர்ச்சனை கேட்டது. மான் குட்டிக்குப் பயம் உண்டானது. ஆனால், அது அங்கிருந்து தப்பியோட முயலாமல், அந்த இடத்திலேயே ஆடாது அசையாது நின்றது. சிங்கத்தின் சத்தம் கேட்ட திசையைத் திரும்பிப் பார்த்தது.

அங்கே ஒரு சிங்கம் வலையில் அகப்பட்டிருந்தது. அந்தச் சிங்கம் வலையிலிருந்து தன்னை விடுவிப்பதற்காகப் போராடிக் கொண்டிருந்தது. இதனைக் கண்ட மான்குட்டி திகைத்து நின்றது.

மான்குட்டி சிறிது நேரம் அங்கே நின்று யோசித்தது. சிங்கத்தை மெதுவாக உற்றுப் பார்த்தது. பின்னர், சிங்கம் அகப்பட்டுக் கிடந்த இடத்தின் அருகே போனது. தனது பற்களால் அந்த வலையை அறுக்கத் தொடங்கியது. சிறிது நேரத்தில் வலை அறுபட்டது. சிங்கம் அந்த வலைப் பொறியிலிருந்து வெளியே வந்தது.

சிங்கம் ஒரு முறை கர்ச்சித்தது. பின்பு மான்குட்டியின் பக்கம் திரும்பி அதனுடன் பேசியது. ''நீ என்னை விடுவித்தாய்; குட்டிமானே! நான் உன்னைப் பிடித்துத் தின்றுவிடுவேன் என்று நீ பயப்படவில்லையா?'' என்று கேட்டது.

''மகாராசாவே உங்களுக்குப் பயப்படாமல் இருக்க முடியுமா? அவ்வளவு தூரம் துணிவும் இல்லை; கர்வமும் இல்லை'' என்று மான்குட்டி பதில் கூறியது. மான்குட்டி பேச்சை இடையில் நிறுத்தி சிறிது நேரம் பேசாமல் நின்றது. பின்பு, அது மிக மரியாதையுடன் பேச்சைத் தொடர்ந்தது. ''நீங்கள் துன்பப்பட்டுக் கொண்டு இருந்தீர்கள். பிறர் உதவி கிடைக்காதா? என்று ஏங்கிக் கொண்டு இருந்தீர்கள். நான் அதனைக் கண்டேன்; இக் கஷ்டத்தில் உங்களை விட்டு அப்பால் செல்ல விரும்பவில்லை. நான் நன்மையே செய்ய விரும்பும் பிராணி. எனவே, பயமும் ஆபத்தும் அதற்குத் தடையாக மாட்டா'' என்றது.

‘‘மான்குட்டியே, நீ ஒரு வீரன்; கள்ளம் கபடம் இல்லாதவன்; பெரிய மிருகங்களும் சிறிய மிருகங்களும் இப்பாதையால் என்னைக் கடந்து சென்றன. வேறு சில மிருகங்கள் என்னைக் கண்டதும் விரைவாகத் திரும்பி ஓடிவிட்டன. நான் உதவி கேட்கும் முன்பே அவை அப்பால் சென்றுவிட்டன. இந்த விடயம் உனக்குத் தெரியுமா? சில மிருகங்கள் என்னைப் பார்த்துக் கேலி பண்ணிச் சிரித்தன. எனக்கு எரிச்சலையும் அடங்காத கோபத்தையும் உண்டாக்கின.’’ என்று சிங்கம் கூறியது. ‘‘நான் அவற்றுக்குத் தகுந்த பாடம் புகட்ட வேண்டும்’’ என்று கோபத்துடன் பேசியது.

‘‘மகாராசாவே நான் சொல்வதைத் தயவுசெய்து கேளுங்கள்! பிராணி களாகப் பிறந்த நாங்கள் என்றோ ஒரு நாள் இறக்கத்தான் வேண்டும். ஒருவரின் வாழ்நாள் அற்பம். அந்த மிருகங்களின் வாழ்வையும் உங்கள் வாழ்வையும் குறுக்காதீர்கள்; வீணாகப் பாழாக்காதீர்கள்’’ என்று மான் குட்டி இரந்து கேட்டது.

‘‘பிறருக்குத் தீங்கு செய்பவனே தனக்கும் தீங்கைத் தேடிக்கொள் கிறான். நீங்கள் அவற்றைக் கொன்றால் அந்த இனத்தவர்கள் நிச்சயமாக உங்களைக் கோபிப்பார்கள். அவர்கள் பழிக்குப் பழி வாங்குவார்கள். உங்களுக்குத் தீங்கு செய்வார்கள். இந்தக் காட்டில் நீங்கள்தான் மிகப் பல சாலி என்று நீங்கள் நினைக்கக்கூடும். அது உண்மைதான். ஆனால், எல்லா மிருகங்களும் ஒன்றுபட்டு உங்களை எதிர்த்தால் முடிவு என்ன? இதனைப் பற்றி நீங்கள் எப்போதாவது சிந்தித்துப் பார்த்ததுண்டா? என்று கேட்டது.

‘‘ஒருவனுடைய செயல்களின் பலனாக அவன் நன்மை, தீமைகளை அனுபவிப்பான். இது சிலவேளை காலம் தாழ்த்தியும் நிகழலாம். மகாராசாவே! எல்லா விலங்குகளினதும் சமாதானத்திற்காக இந்த உண்மை யைத் தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள்’’ என்று மான்குட்டி கூறியது.

சிங்கம் மான்குட்டியின் பேச்சைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தது. ‘‘மிகப் பிரமாதம்! நீ வீரன் மட்டும் அல்ல மிகவும் உயர்ந்த அறிவாளி; உயர்ந்த உள்ளம் படைத்த உத்தமன்; இன்று நீ என்னை விடுதலை செய்தாய். எனக்கு நல்ல அறிவையும் சொல்லித் தந்தாய்’’ என்று சிங்கம் கூறியது.

சிங்கமும் மான்குட்டியும் ஒருவரையொருவர் விட்டுப் பிரிந்தன. அவை தத்தம் வழிகளிலே சென்றன. அவை இந்த உண்மையை அறியாத மற்ற மிருகங்களுக்கும் அதனை அறிந்துகொள்ளச் செய்தன. இந்த உண்மை விளங்கினால் உலகம் சமாதானமாக இருக்கும்; சகலரும் சுகமாக வாழலாம் என்பதை எல்லா மிருகங்களுக்கும் சொல்லிக் கொடுத்தன. அவையும் இதனை ஆர்வமாகக் கற்றுக் கொண்டன.

### அகராதிப் பயன்பாடு




அற்பம் -
நிச்சயம் -
பிரகாசம் -
ஆர்வம் -
களிப்பு -
அவதாரம் -

### பயிற்சி

## 17.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. மான்குட்டி எங்கே நித்திரை செய்தது?
2. மான்குட்டி சிங்கத்திற்கு கூறிய அறிவுரைகள் இரண்டைக் குறிப்பிடுக.
3. கதையில் இடம் பெற்ற இணைமொழிச் சொல் ஒன்று எழுதுக.
4. கதையில் இடம் பெற்ற ஒத்த கருத்துச் சொற் சோடி ஒன்றைத் தருக.
5. இந்தக் கதையின் மூலம் நீங்கள் பெற்ற படிப்பினை யாது?

## 17.2 பாடத்திலிருந்து தெரிந்தெடுத்த சொல்லைக் கொண்டு இடைவெளி நிரப்புவோம்.

i. ஒரு பொருட்பெயர்ச் சொல் : ________________
ii. ஓர் இடப் பெயர்ச் சொல் : ________________
iii. ஒரு சினைப் பெயர்ச் சொல் : ________________
iv. ஒரு காலப் பெயர்ச் சொல் : ________________
v. ஒரு குணப் பெயர்ச் சொல் : ________________

## 17.3 கீழ்க்காணும் உவமைத்தொடர்களை வைத்து வாக்கியம் அமைப்போம்.

உதாரணம்: **நகமும் சதையும் போல**

உமரும் மதனும் **நகமும் சதையும் போல** நட்புடன் வாழ்ந்தனர்.

1. உள்ளங்கை நெல்லிக் கனி போல
2. பசுத்தோல் போர்த்திய புலி போல
3. சூரியனைக் கண்ட பனி போல
4. அடியற்ற மரம் போல
5. முயற்கொம்பு போல

## 17.4 தரப்பட்ட வாக்கியங்களை வினா வாக்கியமாக மாற்றி எழுதுவோம்.

உதாரணம்: கமலன் பந்து அடித்தான்.
கமலன் பந்து அடித்தானா?

1. மான்கள் காட்டில் கூட்டமாகத் திரிந்தன.
2. நேற்றுப் பெய்த மழையால் வெள்ளம் ஏற்பட்டது.
3. நானும் தம்பியும் பூங்காவிற்குச் சென்று விளையாடினோம்.
4. பெப்பிரவரி நான்காம் திகதி இலங்கையின் சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது.
5. சேர் ஐசாக் நியூட்டன் புவியீர்ப்பு விசையைக் கண்டுபிடித்தார்.

## 17.5 'நான் எறும்பானால் ......' என்னும் தலைப்பில் ஐந்து வாக்கியங்கள் எழுதுவோம்.

1. ..........................................................................................................
2. ..........................................................................................................
3. ..........................................................................................................
4. ..........................................................................................................
5. ..........................................................................................................

# 18 ஔவையாரும் நெல்லிக் கனியும்



*காட்சி -1*

இடம் : அதியமான் நெடுமான் அஞ்சியின் அரண்மனை.

பாத்திரங்கள் : அதியமான், அரசி, ஔவையார், வாயிற்காவலன்.

***அதியமான்*** : *(அதியமான் தனது பூசை அறையில் வணங்கிக் கொண்டிருக்கின்றார்.)* எம்பெருமானே! இறைவா! எல்லோரும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும். ஆரோக்கியமாக நீண்ட காலம் வாழ வேண்டும். செல்வம் கொழிக்கும் நாடாக எனது நாடு இருக்க வேண்டும்.

**காவலன்** : (வாசலுக்கு வந்து பணிந்து) வாழ்க மன்னா! வாழ்க அரசே!

**அதியமான்** : காவலனே! என்ன அவசரம்? என்ன செய்தி?

**காவலன்** : தங்களைக் காண ஔவையார் வந்திருக்கிறார்.

**அதியமான்** : நல்லது, மிக்க மகிழ்ச்சி, அவரைத் தகுந்த முறையில் உபசரித்து அழைத்து வா. (காவலன் செல்கிறான். அதியமான் ஆவலோடு வெளியே வருகிறான். ஔவையார் வருகிறார்.)

**அதியமான்** : வாருங்கள் ஔவைப்பிராட்டியாரே! வாருங்கள்! உங்களைக் கண்டு பல நாட்கள் ஆகிவிட்டன. நலந்தானே?

**ஔவையார்** : என் நலத்துக்கு ஏதும் குறைவில்லை. உன்னைக் காண வேண்டும் போல ஒரு உணர்வு தோன்றியது. வந்து விட்டேன்.

**அதியமான்** : தமிழறிந்த பெரும்புலவர் நீங்கள். தமிழைப் பற்றிய சிந்தனைக்கு அப்பால் என்னைப் பற்றியும் சிந்திக்கிறீர்களே! மிகவும் நன்றி.

**ஔவையார்** : உன்னை எப்படி மறக்க முடியும்? உன் ஆட்சியில் மக்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். மன நிறைவோடு வாழ்கிறார்கள்.

**அதியமான்** : எல்லாம் உங்கள் அறிவுரையால் வந்தவையே. அரசர் களைப் புலவர்கள் வழிநடாத்த வேண்டும். அப்போதுதான் அரசர்கள் மக்களை நல்வழியில் வாழவைக்க முடியும்.

**ஔவையார்** : நானும் ஏதோ என்னால் முடிந்த அளவுக்கு ஊர் ஊராகச் செல்கிறேன். சிறார்கள், இளையோர்கள், முதியோர்கள் என யாவரையும் சந்திக்கின்றேன். அறநெறியைப் போதிக்கின்றேன்.

**அதியமான்** : தங்கள் போதனையால்தான் இந்தத் தமிழும் தமிழ் உலகமும் மேலோங்கி நிற்கின்றன. பிராட்டியாரே!

மன்னிக்க வேண்டும். இந்த ஆசனத்தில் அமர்ந்து கொள்ளுங்கள். (கையைப் பிடித்து ஓர் ஆசனத்தில் அமரச் செய்கிறார்.)

**ஔவையார் :** நடந்த களைப்பு ... (அமருகிறார்.)

**அதியமான் :** தங்களுக்கு உரிய விருந்தை நான் தருவேன். வேண்டிய பொன்னும் பொருளும் தருவேன். சில நாட்கள் இங்கே தங்கிச் செல்ல வேண்டும்.

**ஔவையார் :** அரசே! அரசனாகிய நீ அரண்மனையில் இருந்து ஆட்சி புரிய வேண்டும். புலவர்தான் பல இடங்களுக்கும் சென்று மக்களுக்குப் போதிக்க வேண்டும். அதனால் நான் இங்கே தங்கியிருப்பது பொருத்தமாகாது.

**அதியமான் :** உங்கள் அருந்தமிழ் கேட்டு அதிகநாட்கள் ஆகிவிட்டன.

**ஔவையார் :** தமிழால் மக்களுக்கு நல்லொழுக்கத்தைச் சொல்லிக் கொடுப்பதுதான் என் வேலை. நான் இங்கேயே தங்கி உன்னோடு மட்டும் பேசிக் கொண்டிருக்க முடியாது.

**அரசி :** (அரசி வருகிறார்.) தமிழ் மூதாட்டிக்கு என் தலை சாய்ந்த வணக்கங்கள்.

**ஔவையார் :** பொட்டோடும் பூவோடும் புகழ் நல்க வாழ்வாய்!

**அரசி :** நன்றி. இன்று இங்கே உணவருந்தி எம்மை மகிழ்விக்க வேண்டும். நானே என் கையால் பரிமாறுவேன்.

**ஔவையார் :** அரசியாரே! உங்கள் உபசரிப்பை நானறியாதவளா? நிச்சயம் உணவருந்திச் செல்வேன்.

**அதியமான் :** (ஒரு நெல்லிக்கனியைக் கொண்டுவருகிறார்.) தாயே! இந்த நெல்லிக்கனியைத் தாங்கள் உண்டு என்னை மகிழ்விக்க வேண்டும்.

**ஔவையார் :** நல்லது (எடுத்து உண்கிறார்.) ஆகா... ஆகா... அரிய சுவையாக இருக்கிறதே! உனக்கு இது எப்படிக் கிடைத்தது?





இலவசப் பாடநூல்

**அதியமான்** : எங்கள் நாட்டுப் பெருமலையில் ஒரு நெல்லி மரம் இருப்பதை அறிந்தேன். அது ஒரே ஒரு கனி மட்டும் கொடுப்பதாகவும் அதை முயன்று பறித்து உண்பவர் நோய் நொடியின்றி நீண்ட நாட்கள் வாழலாம் என்றும் அறிந்து அதனைப் பறித்து வந்தேன்.

**ஔவையார்** : ஆ… சிரமப்பட்டு பெருமுயற்சி செய்து நீ பறித்துக் கொண்டு வந்த அரிய நெல்லிக்கனியை நீயல்லவா உண்ண வேண்டும்?

**அதியமான்** : பிராட்டியாரே! நான் சாதாரண அரசன். என்னைப் போல ஆயிரம் அரசர்கள் இந்த மண்ணை ஆட்சி செய்யலாம். ஆனால் நீங்களோ கல்வியறிவு நிரம்பப் பெற்ற புலவர். நீங்கள்தான் நீண்டகாலம் நோய் நொடியின்றி வாழ வேண்டும். உங்களால்தான் நாடு நல்லொழுக்கத்தில் நிலைத்திருக்கும்.

**ஔவையார்** : அரசே! என்னே உன் கொடை! உன்னை எப்படிப் புகழ்வது? தன் நலம் கருதாது மக்கள் நலம் கருதும் நீயல்லவா அரசன். நான் வணங்கும் அந்தக் கடவுளின் கருணையால் நீ நீண்டகாலம் புகழோடு நிலைபெறுவாயாக!

(ஔவையார் விடைபெறுகின்றார். அரசனும் அரசியும் வணங்கி வழியனுப்புகின்றார்கள்.)

திரைவிழுதல்.



### அகராதிப் பயன்பாடு




அறிவுரை -
புகழ் -
ஒழுக்கம் -
புலவர் -
கொடை -
ஆசனம் -

பயிற்சி

## 18.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. ஔவையார் எந்த அரசரைக் காண்பதற்காக வந்தார்?
2. ஔவையார் தனது கடமை எதுவெனக் கூறுகிறார்?
3. பாடத்திலுள்ள இணைமொழி ஒன்றை எழுதுக.
4. அதியமான் ஔவையாருக்கு ஏன் நெல்லிக் கனியைக் கொடுத்தார்?
5. இந்நாடகத்தின் மூலம் நீங்கள் பெற்ற படிப்பினை யாது?

## 18.2 பின்வரும் சொற்களைக் கொண்டு கருத்துள்ள வாக்கியங்கள் அமைப்போம்.

i. வாயிற்காவலன் ii. அரண்மனை iii. கொடை
iv. ஆட்சி v. அறநெறி vi. கருணை

## 18.3 ஒத்தபத இணைமொழியாயின் 'ஒ' எனவும் எதிர்ப்பத இணைமொழியாயின் 'எ' எனவும் அடையாளமிடுவோம்.

| | | | |
|---|---|---|---|
| 1. அக்கம் பக்கம் | ( ) | 2. உற்றார் உறவினர் | ( ) |
| 3. உயர்வு தாழ்வு | ( ) | 4. இன்ப துன்பம் | ( ) |
| 5. ஆற அமர | ( ) | 6. ஏழை எளியவர் | ( ) |
| 7. கனவு நனவு | ( ) | 8. அல்லும் பகலும் | ( ) |
| 9. நோய் நொடி | ( ) | 10. கையும் மெய்யும் | ( ) |

## 18.4 வாக்கியங்களில் வந்துள்ள இணைமொழிகளையும் இரட்டைக்கிளவிகளையும் தெரிந்து எழுதுவோம்.

1. தாறு மாறாகப் பேசாதே.
2. காலில் உள்ள புண் சுள்சுள்ளென வலிக்கிறது.
3. நாம் ஏழை எளியவருக்கு உதவி செய்ய வேண்டும்.
4. மழை நீர் சலசலவென ஓடியது.
5. பாட்டி குடுகுடுவென நடந்தார்.

## 18.5 பிழையான கருத்தை தரும் வாக்கியங்களின் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுவோம்.

1. பூனை வீட்டில் வளர்க்கப்படும் பிராணி. அது நான்கு கால்களை உடையது.
2. பருந்து ஒரு பறவை. அது தாவரவுண்ணி ஆகும்.
3. நாகமரம் ஒரு தாவரம். அது இலங்கையின் தேசிய மரமாகும்.
4. தமிழிலுள்ள மொத்த எழுத்துக்கள் இருநூற்று நாற்பத்தேழு ஆகும். அவற்றுள் ஆய்த எழுத்துக்கள் இரண்டாகும்.
5. திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இதில் நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்கள் உள்ளன.

## 18.6 காட்சிப் படத்தை அவதானித்து ஐந்து வாக்கியங்கள் எழுதுவோம்.



# 19 சூரியன் எடுத்த விடுமுறை





அந்தக் கடிதத்தினைப் பார்த்ததும் உலக விஞ்ஞானிகளும் தலைவர்களும் உறைந்து போனார்கள்.

ஆம்! சூரியன், பால்வெளி அண்டத்தின் நிருவாகிக்குக் கடிதம் எழுதி இருந்தது.



இலவசப் பாடநூல்

பால்வெளி அண்டம்.

அன்புள்ள நிருவாகிக்கு,

நான் நலம். பலகோடி ஆண்டுகளாக இயங்கிக் கொண்டே இருக்கும் எனக்கு இருபத்து நான்கு மணிநேர ஓய்வு தேவைப்படுகின்றது.

என்னைச் சுற்றிலும் ஒரு கருமையான மேகம் சூழ்ந்து கொள்ளும்படி ஏற்பாடு செய்துள்ளேன்.

சரியாக இருபத்து நான்கு மணி நேரம் ஓய்வு எடுத்து விட்டு மீண்டும் பழையபடி இயங்கத் தொடங்குவேன்.

இந்தச் செய்தியை எல்லாக் கோள்களுக்கும் தெரியப் படுத்தவும்.

நன்றியுடன்,
சூரியன்.

உலகின் அனைத்து நாடுகளின் அரச பிரதிநிதிகளும் ஒன்றாகக் கூடினார்கள். அந்த விடுமுறைச் சம்பவம் நடக்க இன்னும் இரண்டு மாதங்கள் இருந்தன.

என்ன செய்யவேண்டும்; என்ன செய்யக் கூடாது என்று திட்ட வட்டமாக முடிவு செய்தார்கள். விஞ்ஞானிகளும் உடன் இருந்தனர்.

மூன்று நாட்கள் முற்று முழுதாக வெளிச்சம் இருக்காது. அதனால், குறைந்தபட்ச மின்சாரத்தை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

எல்லோருக்கும் விடுமுறை அளிக்க வேண்டும் என்பது மற்றொரு தீர்மானம்.

சூரியன் ஒரு நாள் விடுமுறை எடுத்தாலும் அந்த மேகங்கள் சூழ்வதற்கு ஒரு நாளும் அதுவிலகுவதற்கு ஒரு நாளும் எடுத்துக்கொள்ளும்.

அதனால் பூமியில் எல்லோருக்கும் மூன்று நாட்கள் விடுமுறை அளிக்கப்பட்டது. வீட்டை விட்டு யாரும் வெளியே வரக்கூடாது என உத்தரவிடப்பட்டது. பாடசாலைகள், அலுவலகங்கள் எவையும் இயங்காது. அனைவரும் வீட்டுக்குள் இருக்க வேண்டும்.

அதிகபட்சமாக மொட்டைமாடிக்குச் சென்று வானத்தைப் பார்க்கலாம். வீதிக்கு வரக்கூடாது. எந்தக் கைத்தொலைபேசியும் தொலைக்காட்சியும் இயங்காது. வீட்டில் உள்ள மின்விளக்குகளையும் மின்விசிறிகளையும் மட்டுமே பயன்படுத்தலாம்.

முழு உலகும், அந்த மூன்று நாட்களுக்காகத் தயாரானது.

பாடசாலைகளில் என்ன செய்யவேண்டும் எனக் கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டன. அறிவுறுத்தல்கள் நாடு முழுவதும் வழங்கப்பட்டன. மூன்று நாட்கள் வெளியே வரமுடியாது என்பதால், உணவுப்



பொருள்களின் தேவை அதிகரித்தது. எல்லோரும் மூன்று நாட்களுக்கும் தேவையான பொருள்களை வாங்கி வீடுகளில் சேமித்து வைத்தார்கள்.

''ஒருவேளை, சூரியன் விடுமுறையில் இருந்து திரும்பவில்லை என்றால்...?'' இந்தக் கேள்வி எல்லோர் மனதிலும் எழுந்தது. உலகமே அச்சத்தில் மூழ்கியது. அந்த நாளும் வந்தது. மறுநாள் விடியாது, நிலவின் வெளிச்சம் மட்டுமே இருக்கும் என அறிவிக்கப்பட்டது. எல்லோரும் வீட்டுக்குள் சென்றார்கள். சூரியன் அஸ்தமித்தது. ஆராய்ச்சி நிறுவனங்களின் ஆய்வு கூடங்களும் மூடப்பட்டன. விஞ்ஞானிகளும் வீட்டுக்குச் சென்றுவிட்டார்கள்.

இருட்டாகவே இருந்தது. நிலவின் வெளிச்சம் இருக்கும் என நினைத்தவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. சூரியனின் ஒளியைத்தானே நிலவு பிரதிபலிக்கின்றது? அதனால் அதன் பிரகாசம் கொஞ்சங் கொஞ்சமாக மங்கியது. முற்பகல் பதினொருமணிக்குள் அதுவும் மறைந்தது.

நட்சத்திரங்கள் மட்டும் வானில் மின்னின. முன்பு தெரிந்ததைவிடப் பிரகாசமாகத் தெரிந்தன. முன்னர் பார்க்க முடியாதிருந்த நட்சத்திரங்களும் வெறுங்கண்ணுக்கே தெரியலாயின. நாட்டில் எல்லோரும் அவரவர் வீடுகளுக்குள் இருந்தனர்.

இப்படியாக எழுபத்திரண்டு மணிநேரம் (மூன்று நாட்கள்) பூமி இருளில் இருந்தது. சூரியன் வாக்களித்ததைப் போலவே விடுமுறையில் இருந்து மீண்டும் வந்தது.

உலகமே உற்சாகமாக இயங்கத் தொடங்கியது. அந்த மூன்று நாட்களையும் பற்றி ஏராளமான கட்டுரைகளும் கதைகளும் புத்தகங்களும் வெளியிடப்பட்டன. தொலைக்காட்சியில் விவாதங்கள் நடந்து கொண்டே இருந்தன.

ஒரே ஒரு கடிதம் உலகத்தின் கவனத்தை ஈர்த்தது. யாருக்கு அந்தக் கடிதத்தை அனுப்புவது என்று தெரியாமல் தபால் திணைக்களம் திணறியது.

எனவே, அதைப்பற்றி உலகத்துக்குச் சொல்ல வேண்டியதாகிவிட்டது. அந்தக் கடிதம் இதுதான்.

சூரியன்,
சூரியக் குடும்பம்,
பால்வெளி அண்டம்.

அன்புள்ள சூரியனுக்கு,

உனக்கு என்றும் என் அன்பும் நன்றியும்.

இந்த ஒரு நாள் ஓய்வினைப் போல நீ ஒவ்வொரு வருடமும் ஒரு நாள் ஓய்வு எடுத்துக்கொள். இந்த மூன்று நாட்களும் என் அம்மாவும் அப்பாவும் என்னுடன் மட்டுமே இருந்தார்கள். தொலைக்காட்சியும் இல்லை; கைத்தொலைபேசியும் இல்லை. மூன்று நாட்களும் ஒன்றாக விளையாடினோம். பழைய கதைகளைப் பேசினோம். புதிய கதைகளை உருவாக்கினோம். வானத்தினை இரசித்தோம். ஒன்றாக மூவரும் சமைத்தோம். மூவரும் ஒரே தட்டிலே உண்டோம். இந்தப் பூமியில் உள்ள அனைத்துக் குழந்தைகள் சார்பாகவும் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளவும்.

இப்படிக்கு,
மகிழ்ச்சியான குழந்தை.

- உமாநாத் விழியன்

## அகராதிப் பயன்பாடு




தொகுதி -
கோள் -
அறிவுறுத்தல் -
அவனி -
பால்வெளி -
ஓய்வு -

பயிற்சி

## 19.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. சூரியன் ஓய்வு கேட்டு யாருக்குக் கடிதம் எழுதியது?
2. சூரியனுக்கு எத்தனை மணிநேர ஓய்வு தேவைப்பட்டது?
3. சூரியன் ஓய்வு எடுத்த போது பூமி எத்தனை நாட்கள் இருளில் மூழ்கி இருந்தது?
4. மகிழ்ச்சியான குழந்தை சூரியனுக்கு நன்றி சொல்லக் காரணம் என்ன?
5. இக்கதையை எழுதிய கதையாசிரியரின் பெயர் என்ன?

## 19.2

### (அ) இடைவெளி நிரப்புவோம்.

i. வி ____ ஞா ____ ii. தீர் ____ ____ ம்

iii. அ ____ வு ____ த்தல் iv. ந ____ ச ____ ____ ____ ங்கள்

v. பா ____ ____ ளி vi. சூரி____ க் கு____ ம்____ ம்

### (ஆ) பொருத்தமான சொற்றொடரைத் தெரிந்தெடுத்து இடைவெளி நிரப்புவோம்.

| | | |
|---|---|---|
| அம்பலமாகத் | சலசலத்துக் | கல்மனம் |
| தெய்வச்செயலாக | கோபாவேசமாய் | |

1. எசமானி இரக்கமில்லாத....................... உடையவள்.
2. காற்றில் மரக்கிளைகள் ஆடி, அசைந்து ...............கொண்டே இருக்கின்றன.
3. யானை ............... புகழேந்தியாரிடம் வந்ததும் தரித்து நின்றுவிட்டது.
4. மந்திரிகளின் சூழ்ச்சிகள் ............... தொடங்கின.
5. சங்கிலியன் ............... அரச சபையிலே தந்தையுடனிருந்தான்.

## இரட்டைக்கிளவி

ஒரே சொல் இருமுறை அடுக்கி வரும். அச்சொற்களைப் பிரித்தால் அவை தனித்துப் பொருள் தராது. அதுவே இரட்டைக் கிளவி எனப்படும்.

**உதாரணம்:**

1. நெஞ்சு ***படபட*** என இருந்தது. (படபட - பயம்)
2. அவள் ***சிடுசிடு*** எனப் பேசினாள். (சிடுசிடு - கோபம்)

படபட என்பதிலுள்ள பட என்பது தனித்து வந்தால் அதற்குப் பொருள் இல்லை.

## அடுக்குத் தொடர்

தனித்து நின்றும் பொருள்தரக்கூடிய சொல் அடுக்கி (இரட்டித்து) வருதல் அடுக்குத் தொடர் ஆகும்.

உதாரணம்:

1. ***கூட்டம் கூட்டமாக***வே குருவி பறந்து சென்றிடும்.
2. ***குவியல் குவியலாக***வே கற்கள் கொட்டிக் கிடந்திடும்.
3. ***குலை குலையாய்த்*** திராட்சைகள் கொடியில் அழகாய்த் தொங்கிடும்.
4. ***மந்தை மந்தையாக***வே மாடு கூடி மேய்ந்திடும்.
5. ***சாரை சாரையாக***வே எறும்பு தரையில் ஊர்ந்திடும்.

## 19.3 பொருத்தமான இரட்டைக்கிளவியைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுவோம்.

1. எனது கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலி ........... என மின்னியது.
   (பளபள / குளுகுளு / மளமள)
2. நான் பொய் பேசியதால் அப்பா ............... எனப் பற்களை கடித்தார்.
   (பரபர / நறநற / படபட)
3. காலை வேளை தென்றல் காற்று .................... என வீசியது.
   (கணகண / பளபள / குளுகுளு)
4. கல்லில் மோதிய எனது கால் .................... என வலித்தது.
   (கமகம / விறுவிறு / விண்விண்)
5. பலத்த சூறாவளியால் மரக்கிளைகள் ............... என முறிந்து விழுந்தன.
   (சடசட / குடுகுடு / வெடுவெடு)

## 19.4 பேச்சுவழக்கு நடையை எழுத்துவழக்கு நடையாக மாற்றி எழுதுவோம்.

1. நாங்க வீட்டை போட்டு வாறம். ................................................
2. அவையள் வருகினம். ...............................................................
3. அவள் பென்சில் வேண்டினாள். ................................................
4. என்ர புத்தகம் புதியது. ...........................................................
5. உன்ரை பேர் என்ன? ................................................................

## 19.5 பின்வரும் எழுவாய்ச் சொல்லிற்குப் பொருத்தமான அடைமொழிகளை வைத்து மீண்டும் எழுதுவோம்.

1. மயிலழகாக ஆடியது. ..........................................................
2. குதிரை புல்வெளியில் மேய்கின்றது. ........................................
3. காற்று வீச மரங்கள் விழுந்தன. ...............................................
4. பழம் மரத்திலிருந்து கீழே விழுந்தது. ........................................
5. காகம் வடையைக் கௌவியது. ...................................................

## 19.6 பொருத்தமான எழுத்துகளைத் தெரிவு செய்து இடைவெளிகளைப் பூரணப்படுத்துவோம்.



| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ல | றி | ழ | ர | ற | ன | ண | லை | ளை | ரை |

i. வனப்பு என்பதை அ ______ கு என்றும் கூறுவர்.

ii. வழியில் திருடன் என்னை ம ______ த்து நின்றான்.

iii. பூக்களிலிருந்து நல்ல ம ______ ம் வீசியது.

iv. கொக்கின் அ ______ கு நீண்டிருக்கும்.

v. அ ______ ம் செய விரும்பு.

vi. நான் த ______ ம் ஐந்தில் கல்விகற்கின்றேன்.

vii. இன்று நேரத்துடன் பாடசாலை க ______ ந்தது.

viii. வா ______ ம் தெளிவாகக் காட்சியளித்தது.


ix. வயலில் பெண்கள் க ______ பிடுங்கினர்.

x. பட்சிகள் இ ______ தேடிப்பறந்தன.

## 19.7 "அ" பகுதிக்குப் பொருத்தமான "ஆ" பகுதியைத் தெரிவு செய்து இணைப்போம்.

| பகுதி - (அ) | பகுதி - (ஆ) |
|---|---|
| கமலம் - தாவுகின்ற மரை | வேங்கை |
| பெண் - நமது கை | பலகை |
| வாரத்தில் ஒரு நாள் - சிவந்த வாய் | தாமரை |
| அரிமரம் - அநேக கை | செவ்வாய் |
| ஒரு மரம் - வேகுகின்ற கை | நங்கை |

# 20 புன்னகை வேண்டும்



ஒழுக்கம் சிறந்தது பாப்பா - உன்
உயிரின் உயர்ந்தது பாப்பா
நன்னெறி சேர்த்திட வேண்டும் - பாப்பா
நல்லோரைச் சார்ந்திட வேண்டும்

பொய் கொலை களவு வஞ்சம் - உடன்
போக்கிடு வாயுன் நெஞ்சம்
அன்பே இன்ப ஊற்று - இதய
ஆசையுடனது போற்று

வாழ்வைக் கெடுப்பது கோபம் – உயிர்
வதை செய்வது பாவம்
பாபப் பலன்பரி நாசம் – ஊர்
பேசுவதும்பரி காசம்

இன்சொல் பேசுவாய் நாளும் – என்றும்
இவ்வுல குன்பெயர் வாழும்
புன்னகை பூத்திட வேண்டும் – பாப்பா
எண்ணிய பேறெய்தி வாழ்வாய்

– பண்டிதர் க. வீரகத்தி

### அகராதிப் பயன்பாடு




நன்னெறி –
நெஞ்சம் –
இன்சொல் –
புன்னகை –
வெட்கம் –
ஊற்று –

### பயிற்சி

### 20.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. உயிரிலும் சிறப்பானது எது எனக் கவிஞர் கூறுகின்றார்?
2. நாம் எவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும்?
3. இப்பாடலை எழுதியவர் யார்?
4. இப்பாடலில் பெயராகவும் வினையாகவும் வரும் ஒரு சொல்லைக் குறிப்பிடுக.
5. இப்பாடலின் மூலம் நாம் எவற்றைத் தவிர்க்க வேண்டும் எனக் கவிஞர் கூறுகின்றார்?

## 20.2 பின்வரும் சொற்களுக்குரிய எதிர்க்கருத்துச் சொற்களைப் பாடலிலிருந்து தெரிவுசெய்து எழுதுவோம்.

i. நிராசை - ii. வன்சொல் - iii. தாழ்ந்தது -

iv. தீயோரை - v. சத்தியம் -

## 20.3 சுருக்கக் குறியீடுகளை விரித்து எழுதுவோம்.

i. இ. ம. வ - ........................ vi. இ. போ. ச - ..........................


ii. இ. பெ. கூ - ........................ vii. இ. மி. ச - ..........................

iii. இ. ரூ. கூ - ........................ viii. பா. அ. ச - ..........................

iv. த. பெ. இ - ........................ ix. ம. ப. பா - ..........................

v. ந. ச - ........................ x. அ. ப - ..........................

## 20.4 ஒத்தகருத்துச் சொற்களைத் தெரிவுசெய்து எழுதுவோம்.




1. களிறு, கரி, வேழம்
2. பரவை, ஆழி, சமுத்திரம்
3. ஞானம், புத்தி, விவேகம்
4. ஆவல், விருப்பம், அவா

### தொடர்வாக்கியம்

ஒன்றிற்கு மேற்பட்ட வாக்கியத்தொடர்களால் அமைந்த வாக்கியங்கள் ஆகும்.

- ஒரு எழுவாயையும் அதன் பல செயல்களையும் கொண்டவையாக அல்லது
- பல எழுவாய்களையும் அவற்றின் ஒரு செயலையும் கொண்டவையாக அல்லது
- பல எழுவாய்களையும் அவற்றில் பல செயல்களையும் கொண்டவையாக அமையலாம்.

உதாரணம்: தமிழரசி போட்டியில் பங்கேற்றாள். வெற்றிபெற்றாள்.
தமிழரசி போட்டியில் பங்கேற்று வெற்றிபெற்றாள்.

## 20.5 பின்வரும் தனிவாக்கியங்களைத் தொடர்வாக்கியங்களாக்கி எழுதுவோம்.

1. விளையாட்டு வீரன் மைதானத்திற்குச் சென்றான்.
   வீரன் மைதானத்தில் விளையாடினான். ..........................................................
2. பூனை பாலைக் குடித்தது.
   பூனையின் தாகமும் களைப்பும் நீங்கியது. ..................................................
3. மாமா தோட்டத்திற்குச் சென்றார்.
   மாமா காய்கறிகளைப் பறித்தார். ...................................................................
4. நஸீர் குளக்கரைக்குச் சென்றான்.
   நஸீர் தூண்டிலில் மீன் பிடித்தான். ...........................................................
5. மேரி சித்திரம் வரைந்தாள்.
   மேரி நிறம் தீட்டினாள். ...........................................................................

## 20.6 'அ' பகுதியை வாசித்து 'ஆ' பகுதியில் கேட்கப்பட்ட வினாக்களுக்கு விடையளிப்போம்.

| பகுதி (அ) | பகுதி (ஆ) |
|---|---|
| நிறங்கள் பல கொண்டது. மனதைக் கொள்ளை கொண்டது. நறுமணம் வீசியே தேனீயை தம் வசப்படுத்துமே பாரீர். | இந்தப் பாடல் பூக்கள் பற்றியது என்றால் நறுமணம் என்ற சொல்லின் கீழ்க் கோடிடுக. அவ்வாறின்றி இங்கு கூறப்பட்டது உணவு பற்றியது என்றால் மனதை என்ற சொல்லைச் சுற்றி வட்டமிடுக. |
| பகலவன் வருகையால் பொழுது புலர்ந்தது. பூக்கள் மலர்ந்தன. பறவைகள் இசைபாட நாமும் கண் விழித்தோம். | இந்தப் பாடல் காலைப்பொழுது பற்றியது என்றால் பகலவன் என்ற சொல்லைச் சுற்றி வட்டமிடுக. அவ்வாறின்றி இங்கு கூறப்பட்டது நண்பகலுடன் தொடர்புடையதாயின் பறவைகள் எனும் சொல்லின் கீழ்க் கோடிடுக. |
| வெள்ளை நிறக்குட்டி தான் காலடியில் வந்த துவே தாயின் பாலைக் குடித்ததுமே துள்ளித் துள்ளி ஓடுதே. | இந்தப் பாடல் ஒரு பிள்ளையைப் பற்றியது என்றால் வெள்ளை என்ற சொல்லின் கீழ்க் கோடிடுக. அவ்வாறின்றி பசுக் கன்றுடன் தொடர்புடையதாயின் துள்ளித் துள்ளி என்ற சொல்லைச் சுற்றி வட்டமிடுக. |

## 20.7 பின்வரும் தொடர்மொழிகளுக்குப் பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து எழுதுவோம்.

கப்பம் நடத்துநர் விகடகவி

வைரவிழா தீர்க்கதரிசி கைதி அந்தப்புரம்

அடிமை அணிந்துரை தீர்ப்பு

i. அறுவதாவது ஆண்டிலே கொண்டாடப்படும் விழா ..........................

ii. சிறைத் தண்டனை பெற்றவன் ............................................................

iii. பகை அரசருக்குக் கொடுக்கப்படும் காணிக்கை ...............................

iv. பேருந்தில் பயணச்சீட்டு வழங்குபவர் ..................................................

v. சுதந்திரமற்று வாழ்பவன் .......................................................................

vi. நடக்க இருப்பவற்றை முன்னரே கூறுபவர் ..........................................

vii. நூலுக்கு இன்னொருவரால் வழங்கப்படும் உரை .............................

viii. விகடமாகவும் பரிகாசமாகவும் பேசுபவன் ........................................

ix. விசாரணை முடிவில் நீதிபதியால் வழங்கப்படுவது ..........................

x. அரண்மனையில் பெண்கள் வசிக்கும் இடம் ..........................................

## 20.8 கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களுக்கு 'அடைமொழி களை' வைத்து மீண்டும் எழுதுவோம்

உ + ம் :- கிளி பழத்தைக் கொத்தியது.

பச்சைக் கிளி கனிந்த பழத்தைக் கொத்தித்தின்றது.

1. தாமரை மலர்ந்தது. ...........................................................................
2. சிறுவன் பாடலைப் பாடினான். ............................................................
3. குயில் கூவும் ஓசை கேட்டது. .............................................................
4. கொக்கு மீனை கொத்துகிறது. .............................................................
5. சிறுமி நடனம் ஆடுகின்றாள். ...............................................................

## 20.9 கீழே தரப்பட்டுள்ள சொல்லில் உள்ள எழுத்துக் களைக் கொண்டு கீறிட்ட இடங்களுக்குப் பொருத்தமான சொற்களை எழுதுவோம்.

**பல்கலைக் கழகம்**

உதாரணம்:

நமது உணவு வேளைகளில் ஒன்று ......பகல்......

1. காய் என்பதன் எதிர்ப்பதம் ........................
2. கல்விச் சங்கம் என்பதைக் குறிக்கும் ........................
3. 'வித்தை' என்பதைக் குறிப்பது ........................
4. சினைப் பெயர்ச் சொல் ........................
5. கற்கள் என்பதன் ஒருமை ........................
6. பனுவல் ஒன்றில் இதுவும் இருக்கும் ........................
7. ஒத்த ஓசைச் சொற்கள் இரண்டு ........................ ........................
8. நாங்கள் நல்ல ........................ வழக்கமுடையவராக இருக்க வேண்டும்.

***செயற்பாடு* 20.1**

மேலே உள்ள பாடலைக் குழுவாக இணைந்து ஆசிரியரின் துணையுடன் இசையுடன் பாடி மகிழ்வதுடன் மனனமும் செய்துகொள்க.

# 21 கனவு காணக் கற்றுத் தந்தவர்

ஒரு சிறுவன் இராமேஸ்வரத்தில் உள்ள அரச பாடசாலையில் கற்றுக் கொண்டிருந்தான். பாடசாலை முடிவடைந்ததும் தினமும் அவன் நண்பர் களுடன் வீட்டை நோக்கி நடந்து வருவான். வரும் வழியில் கடற்கரையில் அமர்ந்து சற்றே களைப்பாறுவான். அவனுடைய நண்பர்கள் கற்களை நீரில் வீசி விளையாடுவார்கள். அவை நீரில் அலையாகப் பிரிவதை இரசிப்பார்கள். ஆனால் அச்சிறுவனோ கரையில் அமர்ந்து வானில் பறக்கும் பறவைகளின் அசைவுகளை உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருப்பான். அந்தப் பறவைகள் அவனுடைய எதிர்காலம் எவ்வாறு அமைய வேண்டும் என்ற கனவை அவனுள் ஏற்படுத்தின.

அவன் வளர வளர அவனுடைய இலட்சியம் தெளிவானது. அந்த இலட்சியக் கனவு நிறைவேற அவன் எந்திரவியல் பயில வேண்டும் எனத் தீர்மானித்தான். சென்னையில் உள்ள கல்லூரியில் கல்வி உதவிப் பணத்தைப் பெற்றுக் கடுமையாக முயன்று படித்தான். அவன் கல்லூரியில் சேர்ந்த அந்த முதல்நாள்வரை அவனுடைய கனவு அங்கிருந்துதான் நிறைவேறப்போகிறது என்பதை அவன் அறிந்திருக்கவில்லை.

கல்லூரி வளாகத்தில் காட்சிப்பொருளாக இரண்டு பெரிய விமானங்கள் அக்கல்லூரிக்குப் பெருமை சேர்க்கும் வகையில் நிறுத்தப்பட்டிருந்தன. மற்றைய மாணவர்கள் அனைவரும் விடுதிக்கு சென்ற பின்னரும் அவன் மட்டும் நீண்ட நேரம் அந்த விமானங்களின் அருகில் அமர்ந்து அவற்றை இரசித்துக் கொண்டிருப்பான்.

அந்த விமானங்களின் வடிவமைப்பு அவனை மிகவும் கவர்ந்தது. இது போன்ற ஒரு விமானத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணம் அவன் மனதில் தோன்றியது. இவ்வாறாக அவனது கனவு அவனைத் தூங்கவிடாமல் அவனது இலட்சியத்தை நோக்கி உந்தித் தள்ளியது. கல்லூரி வருடங்கள் அவனை அறியாமலே வேகமாக உருண்டோடின.

கல்லூரியில் இறுதி வருடச் செயற்றிட்டப் பணியாக ஒரு அதிவேகப் போர் விமானத்தை வடிவமைக்கும் பணி அவனுக்கு வழங்கப்பட்டது.

ஒரு நாள் அவனது செயற்றிட்ட வடிவமைப்பைப் பார்வையிட்ட அவனது ஆசிரியர், ‘‘உன் செயற்றிட்ட வடிவமைப்பு என்னை ஏமாற்றமடையச் செய்துவிட்டது. இதைவிடச் சிறப்பான ஒன்றை உன்னிடம் நான் எதிர்பார்த்தேன்’’ என்றார். அவன் ‘‘ஒரு மாதத்திற்குள் வேறு ஒரு நல்ல வடிவமைப்பை உருவாக்கி விடுவேன் அதற்கான கால அவகாசத் தைத் தாருங்கள்’’ என்று மன்றாடினான். எனினும், ஆசிரியர் அவனைப் பார்த்து, ‘‘இங்கே பார் மாணவனே! நான் உனக்கு இன்னும் மூன்று நாட்கள் அவகாசம் தருகின்றேன். திங்கட்கிழமை காலை



ஒரு சிறந்த வடிவமைப்பை உருவாக்கிக் காட்டாதுவிடின் உனது கல்வி உதவிப் பணம் நிறுத்தப்படும்.'' என்று கண்டிப்புடன் கூறினார்.

அவன் பேச்சற்றுப் போனான். அந்தக் கல்வி உதவிப் பணம்தான் அவனது வாழ்வாதாரம். அது இல்லாமல் அவனால் ஒன்றும் செய்ய முடியாது. போராடி உழைப்பதைவிட வேறு வழி அவனுக்குத் தெரிய வில்லை.

இரவு பகலாக ஊண் உறக்கமின்றி கண்விழித்து உழைக்கத் தொடங்கினான். விமானத்தின் வடிவமைப்பைச் சிறப்பாக்க முயன்றான். ஞாயிற்றுக்கிழமை காலை ஏறத்தாழ அவன் பணி முடித்திருந்த நேரம் யாரோ தன் பின்னால் நிற்பதைப் போன்று உணர்ந்தான். திரும்பிப் பார்த்தான். தன் ஆசிரியர் விமானத்தின் வடிவமைப்பை உற்று நோக்கிக் கொண்டிருப்பதைக் கண்டான்.

சிறிது நேரம் அவனுடைய செயற்றிட்ட வடிவமைப்பைப் பரிசோதித்த அவர் முதுகில் தட்டிக்கொடுத்தார். ''உன்னை மிகக் குறுகிய கால அவகாசத்தில் இதைச் செய்து முடிக்கச் சொல்லிச் சிரமத்தில் ஆழ்த்திவிட்டேன். இவ்வளவு அருமையான ஒரு திட்ட வடிவத்தை நான் எதிர்பார்க்கவில்லை'' என்றார்.

அவனோ தனது கனவு நனவானதை எண்ணி மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தான். இறுதியில் அதிக புள்ளிகளைப் பெற்றுப் பட்டமும் பெற்றான்.

அவன் இப்போது, சிறந்ததொரு விமான வடிவமைப்பை வெற்றிகரமாகத் தயாரித்துத் தனது இலட்சியத்தை அடைந்து விட்டான். அது போன்று ஒரு விமானத்தை விண்ணில் செலுத்த வேண்டும் என்றும் கனவு கண்டான். காலப்போக்கில் விண்வெளிக்கு ஏவுகணை அனுப்புவதில் வெற்றியும் கண்டு விஞ்ஞானியானான். அத்தோடு இந்திய நாட்டின் ஜனாதிபதியும் ஆனான்.

இவ்வாறு கனவு காணுங்கள் என மாணவர்களைத் தூண்டியவர் வேறு யாருமல்ல அவரே விஞ்ஞானியும் இந்தியாவின் பதினோராவது குடியரசுத் தலைவருமான டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல்கலாம் ஆவார்.

இவரைப் போல நாமும் கனவு கண்டு வாழ்வில் வெற்றி பெறுவோம்.

**அகராதிப் பயன்பாடு**




அறிவியலாளர் -
விநியோகம் -
வெற்றி -
வானூர்தி -
ஆராய்ச்சி -
பொறியியல் -

**பயிற்சி**

## 21.1 பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுவோம்.

1. அப்துல்கலாம் ஆரம்பக் கல்வியை எங்கு கற்றார்?
2. அப்துல்கலாமுக்கு விமானத்தைத் தயாரிக்கும் ஆசையை ஏற்படுத்திய சந்தர்ப்பம் யாது?
3. அவர் இலட்சியக் கனவை நிறைவேற்ற என்ன துறையில் பயில வேண்டும் எனத் தீர்மானித்தார்?
4. ஆசிரியர், அப்துல்கலாமிடம் ''கல்விக்கான உதவிப் பணம் நிறுத்தப்படும்'' என ஏன் கூறினார்?
5. அப்துல்கலாம் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுதுக.

## 21.2 சரியான சொல்லின் கீழ் கோடிடுவோம்.

i. அறிவியலாளர் / அறிவியளாளர்

ii. அரிவியல் / அறிவியல்

iii. வாணூர்தி / வானூர்தி

iv. ஆராய்ச்சி / ஆராய்சி

v. உரையாடல் / உறையாடல்

## 21.3 தரப்பட்ட குறியீடுகளின் விளக்கத்தை எழுதுவோம்.


....................


....................


....................


....................


....................


....................


....................


....................

**தனிவாக்கியம்**

ஓர் எழுவாயையும் ஒரு பயனிலையையும் கொண்டு அமையும் வாக்கியம் தனி வாக்கியம் ஆகும்.

ஓர் எழுவாயின் முற்றுப் பெற்ற ஒரு செயலை மட்டும் கூறும் வாக்கியம் தனி வாக்கியம் ஆகும்.

**உதாரணம்:** 1. அரசன் திருடனைக் கண்டான்.

2. குளத்தில் தாமரைகள் மலர்ந்தன.

## 21.4 பின்வரும் தொடர்வாக்கியங்களைத் தனிவாக்கியமாக எழுதுவோம்.

உதாரணம்: செல்வி காலையில் எழுந்து கருத்துடன் கற்றாள்.

1. செல்வி காலையில் எழுந்தாள். 2. செல்வி கருத்துடன் கற்றாள்.

1. ஆசிரியர் வகுப்பறைக்கு வந்து தமிழ்ப் பாடம் கற்பித்தார்.
2. சூரியன் உதிக்கும் போது பறவைகள் இரைத் தேடச் செல்லும்.
3. குகன் பாடங்களை நன்றாகக் கற்றுப் பரீட்சையில் சித்தியடைந்தான்.
4. தமிழ் மொழி பேசுவதற்கும் கேட்பதற்கும் இனிமையாக இருக்கிறது.
5. நாம் நல்லவற்றை எண்ணி நல்லவற்றைப் பேச வேண்டும்.

### 21.5 சரியான விடையைத் தெரிந்து கோடிடுவோம்.

1. பாடசாலையில் எப்போதும் இருப்பவை
(ஆசிரியர் / மாணவர்கள் / கட்டடங்கள்)
2. ஒரு சொல்லில் நிதமும் இருப்பவை
(எழுத்தும் கருத்தும் / குறிலும் நெடிலும் / மெய்யெழுத்துகளும் உயிரெழுத்துகளும்)
3. கடலில் எப்போதும் இருப்பவை
(அலைகள் / கப்பல் / நீர்)
4. வீட்டில் எப்போதும் இருப்பது
(தளபாடம் / மனிதர்கள் / கூரை)

### 21.6 சரியான விடையைத் தெரிவுசெய்து கோடிடுவோம்.

1. உயிர் எழுத்துக்களில் உள்ள குறில் எழுத்துக்களின் எண்ணிக்கை (ஐந்து / ஏழு)
2. நெடில் எழுத்துக்களில் ஒன்று (இ / ஏ)
3. உயிர் மெய்யெழுத்துக்களின் எண்ணிக்கை (பதினெட்டு / இரு நூற்றுப்பதினாறு)
4. ஆய்த எழுத்து (ஃ / க்)
5. பெயர்ச்சொல்லின் வகைகள் (நான்கு / ஆறு)
6. அடைமொழிச் சொல் (வெள்ளை / ஓடினான்)
7. உயர்திணைச் சொல் (மாதவன் / கோழி)
8. பலவின்பால் சொல் (மாணவர்கள் / கதிரைகள்)
9. படர்க்கைச் சொல் (நான் / அது)
10. முன்னிலைச் சொல் (நீங்கள் / அவன்)